Not for sale

மார்ச் - ஏப்ரல் 2013

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



## நம்முடைய ஆண்டவரின் கண்களின் வழியாக

அவருடைய குடும்பம் • அவருடைய சீஷர்கள் • மன உருக்கத்தின் அற்புதங்கள்

யூதமதத் தலைவர்கள் மற்றும் குழந்தைகள் • காட்டி கொடுத்தவர் மற்றும் மறுதலித்தவர்

அவருடைய இறுதி நாட்கள் • அவருடைய இறுதி மணி நேரங்கள்

நம்முடைய ஆண்டவரின் கண்களின் வழியாக

# ஆதியிலே



நம்முடைய ஆண்டவரின் பலியையும், வாழ்க்கையையும் ஞாபகப்படுத்திக் கொள்வதற்கு நினைவு கூருதலின் காலம் விசேஷித்த நேரமாய் உள்ளது. வருடாவருடம் அவருடைய வாழ்க்கை பல கோணங்களில் ஆய்வு செய்யப்படுகிறது. இந்த பிரதியில், இயேசு கண்ணோக்கின சில குறிப்பிட்ட மனிதர்களையும், சம்பவங்களையும் குறித்து ஆய்வு செய்யப்படுகிறது. ஏனெனில், இப்படிப்பட்ட ஒரு ஆய்வு சில சிறிய பயனுள்ள கருத்துக்களையும், நிகழ்வுகளையும், சில சிந்தனைகளாக முன் நிறுத்தச் செய்யும். ஆயினும் இவைகள் நமக்குச் சில நன்மையுள்ள ஆழமான உட்கருத்துக்களைக் கொடுக்கலாம்.

"அவருடைய குடும்பம்" என்ற தலைப்பு, இயேசுவின் துவக்கக்கால வாழ்க்கையை பேணி வளர்க்க பிதாவாகிய தேவன், யோசேப்பையும் மரியாளையும் தேர்வு செய்ததன் காரணங்களை மேலும் அதிகமாக புரிந்துகொள்வதற்கு அவர்களின் குணலட்சணங்களை ஆய்வு செய்கிறது. இயேசுவின் சகோதரர்களைக் குறித்த காரியம் துவக்கத்தில் இயேசுவை ஒரு சகோதரனாகப் பாவிப்பதற்குக்கூட தங்களுக்குள் இருந்த பகை உணர்வு தடுத்தது. ஆயினும் பெந்தெகொஸ்தே நாளின்போது மேல் வீட்டறையில் இவர்கள் அனைவரையும் நாம் காணும் பொழுது இந்த பகைகளை அவர்கள் மேற்கொண்டனர் என்பதை அறிந்துகொள்ளலாம்.

"அவருடைய சீஷர்கள்" என்ற தலைப்பு அவருடைய சீஷர்களில் ஏழு பேர் மீன் பிடித்தலை தொழிலாகக் கொண்டிருந்தனர் என்பதைக் கவனிக்கிறது. இயேசுவை அழைத்துச் செல்லும் அளவுக்கு மீன் பிடிக்கிறவர்களிடம் ஏதாகிலும் விசேஷித்த காரியம் இருந்ததா? "சந்தேகத்திற்குப் பேர்போன அப்போஸ்தலனாகிய தோமாவை குறித்து அதிகமான வெளிச்சத்தில் காரியங்கள் விவாதிக்கப்படுகிறது. அதற்கு பின் சீஷியாகிய ஒரு ஸ்திரீயின் அன்பும், பக்தியும் விவரிக்கப்படுகிறது.

"மன உருக்கத்தின் அற்புதங்கள்" என்ற தலைப்பு, இயேசுவின் கண்களின் வழியாகவே அந்த அற்புதங்களைக் காண முயற்சிக்கிறது. மனித உபத்திரவங்கள் அவருக்குள் ஒரு மென்மையான தூண்டுதலை ஏற்படுத்தியது. அவர் செய்த சகல அற்புதங்களையும், வரக்கூடிய அவருடைய இராஜ்யத்தில் நிறைவேறும் மிகப் பெரிய காரியங்களுக்கு ஒரு சிறிய மாதிரிகளாகக் கண்ணோக்கினார். புயலை அமர்த்தினபோதும், மனுஷரிடத்திலிருந்து பிசாசுகளைத் துரத்தினப்போதும், அவருடைய வல்லமை இயல்புக்கு அப்பாற்பட்ட நிலையில் செயலாற்றி, இனிவரக் கூடிய நாட்களில் அவர் பெற போகிற தெய்வீக அதிகாரத்தைக் காட்டியது.

"யூத மதத் தலைவர்கள் மற்றும் குழந்தைகள்" என்ற தலைப்பு, மாசற்ற குழந்தைகளுக்கும், நேர்மையற்ற சதுசேயர் மற்றும் பரிசேயரின் தலைமைக்கும் உள்ள வேறுபாட்டைக் குறித்து இயேசு கண்டதை விவரிக்கிறது. குழந்தைகளிடத்தில் காணப்படும் தூய்மையானது, மிக எளிமையானதாக இருந்தாலும், இயேசுவின் சீஷர்களுக்கு மிக ஆழமான பாடங்கள் அதில் அமைந்துள்ளது.

"காட்டிக் கொடுத்தவர் மற்றும் மறுதலித்தவர்" என்ற தலைப்பு, யூதாஸ் மற்றும் பேதுருவின் பாவங்களை இயேசு எவ்வாறு வித்தியாசமாக கையாண்டார் என்பது குறித்து கூறுகிறது. பல வருடங்களாக இருதயம் இறுகிப்போனதினிமித்தமாக யூதாஸ் இயேசுவை காட்டிக் கொடுத்தான். ஆனால் விழுந்துபோன மாம்சத்தில் ஏற்பட்ட பயத்தின் விளைவாக பேதுரு இயேசுவை மறுதலித்தார்.

இஸ்ரயேலின் இராஜா என்று ஆர்ப்பரித்த திரள்கூட்டத்தை இயேசு எவ்வாறு கண்ணோக்கினார் என்று, "அவருடைய இறுதி நாட்கள்" என்ற தலைப்பு விவாதிக்கிறது. இந்த கடைசி நாட்களில், இயேசுவின் சிந்தையில் இடம் பெற்ற காரியங்கள் ஆய்வு செய்யப்படுகிறது.

இயேசு சிலுவையில் தொங்கிய போது அனுபவித்த கடும் வேதனைகள். "அவருடைய இறுதி மணி நேரங்கள்" என்ற தலைப்பு விவரிக்கிறது. மூன்று விதமான வழிகளில் அவர் இகழப்பட்டு, ஏளனம் செய்யப்பட்டார். ஆசாரியர்கள் அவருடைய பிறப்பைக் குறித்து ஏளனம் செய்தனர். ரோமர்கள் அவருடைய ஆட்சிப் பொறுப்பைக் குறித்து ஏளனம் செய்தனர். அங்கிருந்த கள்ளன் அவருடைய மேசியாவின் பொறுப்பைக் குறித்து ஏளனம் செய்தான். அவர், அனைவரையும் முழு மனதோடு நேசித்ததினால் எவ்வளவு கொடூரமான உபத்திரவங்களையும் நீடிய பொறுமையோடு சகித்தார். அல்லேலூயா, எப்படிப்பட்ட ஒரு இரட்சகர்!

**மார்ச் - ஏப்ரல் 2013**


**அவருடைய குடும்பம்** 44

நீதியுள்ள பெற்றோரும், அவிசுவாசமுள்ள சகோதரர்களும்

**அவருடைய சீஷர்கள்** 50

மீன்பிடிப்பவர்கள் துவங்கி, பக்தியுள்ள பெண்வரைக்கும்

**மன உருக்கத்தின் அற்புதங்கள்** 57

திரளான ஜனங்களைக் கண்டு மனம் உருகி

**யூதமதத் தவைர்கள் மற்றும் குழந்தைகள்** 61

இறுமாப்புள்ள மனுஷரும், பரிசுத்தமான குழந்தைகளும்

**காட்டிக் கொடுத்தவர் மற்றும் மறுதலித்தவர்** 66

யூதாஸ் மற்றும் பேதுரு

**அவருடைய இறுதி நாட்கள்** 70

அவர் அதிகமாய் கவலைப்பட்டது

**அவருடைய இறுதிமணி நேரங்கள்** 76

முடிவுபரியந்தம் நீடிய பொறுமையோடு சகித்தார்

**தீர்கதரிசனததில் இன்று** 82

**நீதியுள்ள பெற்றோரும், அவிசுவாசமுள்ள சகோதரர்களும்**

# அவருடைய குடும்பம்



"அப்பொழுது மரியாள்: என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது." - லூக்கா 1:46, 47

Allen Springer

இயேசு பரிபூரணமாக இருந்தாலும், மனித இனம் என்று பொருள்படும் காரியங்களை அவர் இன்னும் கற்றுக்கொள்ள வேண்டியதாய் இருந்தது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், ஒரு புதிய பகுதியை கற்றுக்கொள்வதற்கு ஒரு பெற்றோருடைய பராமரிப்பும், மேற்பார்வையும், வழிநடத்துதலும் அவருக்கு தேவைப்பட்டது. இயேசு ஒரு குழந்தையாக பிறந்து, முழு மனிதனாக வளர்ச்சியடைவதற்கான படிநிலைகளை அவர் கடக்க வேண்டும் என்று தேவனுடைய ஞானம் அதற்கு ஆயத்தம் செய்தது. இவ்வழியில் மட்டுமே இயேசு தம்முடைய வருங்கால நிலைக்கு உண்டான ஆயத்தத்திற்கு ஏற்ற முழு ஆழமான அனுபவங்களைப் பெறமுடியும்.

**யோசேப்பு**

இயேசுவின் இயல்பான குடும்பத்தைப் பொறுத்த வரையில், பொதுவாக அனைவருடைய கவனமும் மரியாள் பக்கமே திரும்புகிறது. ஏனெனில், தேவன் மரியாளை தேர்வு செய்வதில் மிகத் தெளிவாகக் கவனம் செலுத்தினார். யோசேப்பை தேர்வு செய்வதிலும் தேவன் தேவையான கவனத்தை செலுத்தினார்.

இயேசுவின் முப்பது வருட வாழ்க்கை வரைக்கும் இரண்டு சம்பவங்களை மட்டுமே சுவிசேஷம் பதிவு செய்திருக்கிறது. ஆவிக்குரிய சுருக்கம் திட்டமாய் வடிவமைக்கப்பட்டு இருக்கிறது. ஆயினும் சிறுவராகிய இயேசுவை ஊக்குவித்த யோசேப்பின் சில குணங்களைப் புரிந்துகொள்வதற்குப் போதுமான செய்திகளைக் கொண்டுள்ளது.

மத்தேயு, யோசேப்பை "நீதியுள்ள மனுஷன்" (மத் 1:19) என்று விவரிக்கிறார். அவருடைய நேர்மையுள்ள கனம் மற்றும் இரக்கமும், அன்பும் நிறைந்த சமநிலையான நீதியுள்ள குணம் நம்மை ஈர்க்கிறது. யோசேப்பினிமித்தமாக மரியாள் குழந்தையைப் பெறவில்லை என்பதை தெளிவாக அறிந்த யோசேப்பு எப்படிப்பட்ட கடுமையான செயல்களையும் நடப்பித்திருக்கலாம். "அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து, அவளை அவமானப்படுத்த மனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான்" (மத் 1:19) என்ற வசனத்தில் அவருடைய சமநிலைப்படுத்தப்பட்ட நீதி வெளிப்படுகிறது.

இயேசு சில சூழ்நிலைகளில் மிக ஆற்றலோடு மற்றவர்களை நினைப்பூட்டும் காரியம் நம்முடைய சிந்தனைகளை ஈர்க்கிறது. சமாரியா ஸ்திரீயிடம் (யோவ 4:7-30) பாவியான ஒரு ஸ்திரீ (லூக்கா 7:36-50) மற்றும் பேதுருவை மென்மையாக கடிந்து கொள்ளுதல் (யோவ 21:15-19) என்ற சில சம்பவங்கள் இயேசுவின் இப்படிப்பட்ட மன நிலைகளுக்கு மாதிரிகளாக இருக்கிறது. இயேசுவுக்குள் தேவனை போன்ற குணங்கள் வளர்ச்சியடையச் செய்வதற்கு யோசேப்பு ஒரு சிறந்த முன் மாதிரியாக இருந்திருக்க வேண்டும்.

நியமிக்கப்பட்ட மணப்பெண், கருவுற்றிருந்த காரியத்தைக் குறித்து யோசேப்பு மிகக் கடினமான சோதனைக்குள் உட்படுத்தப்பட்டார். அவளை இரகசியமாக அனுப்பிவிட வேண்டும் என்ற முடிவை எடுத்தவுடனே தேவன் தம்முடைய விசேஷித்த தூதனை, ஒரு விசேஷித்த தூதோடு அனுப்பினார். "அவன் இப்படிச் சிந்தித்துக்கொண்டிருக்கையில், கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு: தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே, அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது." (மத் 1:20)

ஆபிரகாமை பொருத்தவரையில் (ஆதி 22:10-12) முதலில் அவர் ஒரு தீர்மானம் எடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டு அதற்கு பின் தெய்வீக வழிநடத்துதலோடு அந்த தீர்மானத்தை மேற்கொண்டதின் மூலம் அவருடைய குணலட்சணங்கள் வளர்ச்சியடைந்து வெளிப்பட்டது. இப்படி நடத்தின தேவனுக்கு நாம் நன்றி சொல்லுவோம். யோசேப்புக்குள் இருந்த சில ஆழமான

குணநலன்களின் மூலம் நாம் அறிந்துகொள்கிறோம். யோசேப்பும் வெளிப்படுத்திய இப்படிப்பட்ட அன்பு மற்ற சூழ்நிலைகளில் வெளிப்படுத்தப்பட்டு முக்கியமாக அவருடைய வளர்ப்பு மகனுக்குள் உணர்வுகளை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

மரியாள் சுமந்த குழந்தை அற்புதமான விதத்தில் கருவூட்டப்பட்டது என்ற உண்மையை யோசேப்பு பறைசாற்றவில்லை. வெளி ஜனங்களின் பார்வையில் மரியாள் யோசேப்பை திருமணம் செய்வதற்கு முன்பாக கருவுற்றதினால், அவள் விபச்சாரத்தில் ஈடுபட்டதாக குற்றமுள்ளவளாக காணப்பட்டாள். இந்த ஒரு வதந்தியானது, யோசேப்பையும் மரியாளையும் மட்டுமல்ல, இயேசுவையும் அதிகமாக பாதித்திருக்க வேண்டும். ஏனெனில், இயேசு பெரியவரான போதும் இந்த வதந்திகள் தொடர்ந்து பேசப்பட்டதை வசனங்கள் காட்டுகிறது. (யோவ 6:41) ஆனால் யோசேப்பு மற்றும் இயேசுவின் தாயின் மூலம் அவருக்கு சரியான விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆகவே இயேசுவின் பன்னிரண்டு வயதிற்கு முன்பாகவே தம்முடைய உண்மையான தந்தை பிதா என்று அறிந்திருந்தார். (லூக் 2:49)

தேவன் ஒரு ஞானமுள்ள பொருளாதார நிபுணராய் இருந்தார். இம்மூவரில் விசுவாசத்தை சோதிப்பதற்காக சுற்றியுள்ள அயலகத்தார்களை ஈட்டி போன்ற வார்த்தைகளினால் பரிந்துரைக்க அனுமதித்தார். இயேசு துவக்கத்தில் மற்றும் வருங்காலத்தில் உயர்த்தப்பட்ட நிலைகளை அடைவதற்கு பாத்திரமாக சிறு பிராயத்திலே தம்மை மிகவும் தாழ்த்துவதற்கான சூழ்நிலைகள் அனுமதிக்கப்பட்டது. மேலும் இறுதியாக சிலுவை வரைக்கும் இயேசு தம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வதற்கு உதவியாயிருந்தது.

இயேசு தம்முடைய ஊழியத்தின் போது, நீதியான கிரியைகளை நடப்பித்ததினிமித்தம் கல்லான இருதயம் கொண்டிருந்த சதுசேயர் மற்றும் பரிசேயர்கள் அதை தவறாக வெளிப்படுத்திய பொழுது, அவர் அநேக அனுபவங்களை சந்திக்க நேரிட்டது. அவர் தம்மை தற்காத்துக் கொள்வதற்கு முயற்சிக்காமல் மேலும் சிறப்பான காரியங்களை மனத்தாழ்மையுடன் முன் வைத்தார். சுவிசேஷத்தைக் கையாள்வதற்கான இந்த வழிமுறை யோசேப்பினிடத்திலிருந்து கற்றுக்கொண்டதாய் இருக்க வேண்டும். மேலும் யோசேப்பு சகித்த அவமானங்கள் இயேசுவுக்கு சிறந்த மாதிரியாக முன் வைக்கப்பட்டது.

"அவன் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து, அவருக்கு இயேசு என்று பேரிட்டான்."( மத் 1:25) என்ற எளிமையான காரியங்களை மட்டுமே யோசேப்பை பற்றிக் குறிப்பிடப்படுகிறது. யோசேப்பின் கீழ்ப்படிதலை மட்டுமே நாம் காணமுடிகிறது. எவ்வளவு பிரச்சனைகளின் மத்தியில் போராடிக் கொண்டிருந்த அவர் தனக்கு இசைவில்லாத காரியத்தை தேவனுடைய வழி நடத்துதலினால் வெகு எளிதில் ஏற்றுக் கொண்டதை நாம் காணலாம். "மரியாளின் புருஷனாகிய யோசேப்பை... அவளிடத்தில் கிறிஸ்து என்னப்படுகிற இயேசு பிறந்தார்" என்று மத்தேயு மிக ஜாக்கிரதையாகக் குறிப்பிட்டதை கவனிக்க வேண்டும். மேலும் யோசேப்பை இயேசுவின் தந்தையாக மத்தேயு குறிப்பிடவில்லை.

இயேசுவின் வாழ்க்கை ஏரோதினால் பயமுறுத்தப்பட்டபோது, மீண்டுமாக ஒரு தூதன் யோசேப்பின் கனவில் காணப்பட்டு, தன்னுடைய குடும்பத்தை எகிப்துக்கு அழைத்துச் செல்லும்படி கட்டளைக் கொடுத்தார். மீண்டுமாக எந்த ஒரு தயக்கமுமின்றி யோசேப்பு கீழ்ப்படிந்தார். எகிப்தில் தன்னுடைய குடும்பத்தோடு சில மாதங்கள் தங்கியிருப்பதற்கு யோசேப்பை பொருத்தவரைக்கும் அதிகமான விசுவாசம் தேவைப்பட்டது. அவர் தன்னுடைய தச்சு வேலைக்கான கருவிகளை எடுத்து சென்றாரோ இல்லையோ என்று குறிப்பிடப்படவில்லை. ஆனால் மீண்டுமாக யோசேப்புக்கு மற்றொரு சொப்பனத்தில் நாசரேத்துக்கு அவர்கள் திரும்பினபோது அவருடைய தொழிலை தொடர்ந்து செய்தார்.

சந்தேகத்திற்கு இடமின்றி இயேசுவின் துவக்க வருடங்களில் யோசேப்பு அதிகமாக உறுதிப்பட்டிருந்தார். இயேசுவை பயிற்றுவிக்கும் போது, யோசேப்பு அவரோடு நெருங்கி வேலை செய்திருக்க வேண்டும். பின்பாக இந்த குறிப்பான திறமைகள் இயேசுவுக்கு இன்னும் ஒரு மிகச் சிறந்த பொறுப்பை தந்தது. இயேசுவின் பரிபூரண சிந்தை தச்சு வேலைகளைப் பொறுத்த திறமைகளில் மட்டுமல்ல, அவர் தற்காலிகமாக செய்த சகல காரியங்களிலும் எந்த விவரங்களையும் தவற விடவில்லை. இயேசு யோசேப்பின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினார் என்ற உண்மையை அவர் ஒரு தச்சனாக வாழ்ந்தார் என்பது நிரூபிக்கிறது. மேலும் இவர்களுக்கிடையில் ஒரு நெருங்கி உறவு இருந்ததையும் காட்டுகிறது.

இந்த தொழிலில் முக்கியமான சில குணலட்சணங்கள் வளர்ச்சியடைவதற்கு ஏதுவாய் இருக்கும் என்று தேவன் அறிந்திருந்தார் :

பொறுமை - நேரம், முயற்சி மற்றும் தேவையான பழக்கம்

அறிவு - கணிதம் மற்றும் வடிவியலைக் குறித்த அறிவு.

உண்டாக்கும் திறன் - இயல்பாக காணக்கூடியதற்கு அப்பாற்பட்ட காரியங்களைச் சிந்திப்பது.

திறந்த சிந்தையுள்ள மனநிலை - காரியங்களை பல கோணங்களிலிருந்து காண்பதே.

கடுமையான உழைப்பு - நித்தமும் புதிய காரியங்களை கற்றுக்கொள்ளுதல்.

மனசாட்சி - வேலைகளிலும் நடத்தையிலும் காணப்படும் ஒழுக்கங்கள்.

கொடுத்தல் - மற்றவர்களோடு தொடர்பு கொள்ளும் பொழுது பெறக்கூடிய அறிவு மற்றும் அனுபவங்கள்.

இப்படிப்பட்ட சில குணங்கள் யோசேப்பினிடத்தில் காணப்பட்டது மற்றும் அவரால் வளர்க்கப்பட்ட இயேசுவினிடத்தில் அது உருவாக்கப்பட்டு, எண்ணிக்கையில் அடங்கா முறையில் இயேசுவின் ஊழியத்தின் போது, இவைகள் வெளிப்படுத்தப்பட்டது. இப்படியாக நாம் சிறு துணிக்கைகளை ஒன்று சேர்த்து பார்க்கும் பொழுது தேவனுடைய வழிநடத்துதலை மகிழ்ச்சியோடு கீழ்ப்படிந்த ஒரு சிறந்த மனிதனை தேவன் தேர்வு செய்தார் என்ற யோசேப்பை குறித்து நாம் அறிந்து கொள்ளலாம். இயேசு தம்முடைய பூமிக்குரிய தகப்பனை நிச்சயமாக பாராட்டியிருக்க வேண்டும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

இயேசுவின் மத ரீதியான ஒரு பயிற்சி யோசேப்பு மற்றும் மரியாள் இருவரின் விசுவாசத்தின் அடிப்படையிலும் சிறப்பாக கொடுக்கப்பட்டது. இருவரும் யூத பிரமாணங்களை மிகக் கவனமாக கீழ்ப்படிந்த சாந்தமுள்ள தனி நபர்கள். (லூக்கா 2:41) அருகில் உள்ள ஆலயத்திற்கு அடிக்கடி சென்றதினாலும் வருஷத்தில் மூன்று முறை எருசலேமுக்கு பயணித்ததினாலும் இயேசு தம்முடைய வருங்கால ஊழியத்திற்கு ஆயத்தப்படுவதற்கும் தேவனுடைய வார்த்தைகளில் பரிச்சயமாவதற்கும் வாய்ப்பளித்தது. இதற்கான ஒரு ஆதாரத்தை இயேசுவின் பன்னிரண்டாம் வயதில் நடந்த சம்பவத்தில் காணலாம். "அவர் பேசக்கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும் அவர் சொன்ன மாறுத்தரங்களையுங்குறித்துப் பிரமித்தார்கள்." (லூக் 2:47) ஆயினும் இந்நாள் வரைக்கும் தெளிவற்ற யோசேப்பின் வாழ்க்கையினால் இயேசுவில் மிக அதிகமான வளர்ச்சி காணப்பட்டது.

மாற்கு 6:3-ம் வசனத்தில், இயேசுவின் குடும்பத்திலுள்ள நபர்களின் வரிசையில் யோசேப்பு குறிப்பிடப்படவில்லை என்ற உண்மையானது அவர் இயேசு பெரியவராவதற்கு முன்னதாகவே மரித்துவிட்டார் என்பதை பொருள் படுத்துகிறது. ஒருவேளை இயேசுவின் பன்னிரண்டாம் வயதிற்குப் பின் அவர் மரித்திருக்க வேண்டும். அதற்கு பின் இயேசு வீட்டு பொறுப்பை ஏற்றுக்கொண்டு சகல கடமைகளையும் நிறைவேற்றியிருக்க வேண்டும். யோசேப்பின் உறுதியான கரங்கள் மற்றும் அவருடைய அன்பு - இப்படிப்பட்ட கடமைகளை நடத்துவதற்கு இயேசுவை ஆயத்தப்படுத்தியது.

மேற்கூறப்பட்ட காரியங்கள் யோசேப்பை தேவனுடைய ஒரு விதிவிலக்கான மனுஷன் என்று கருதுகிறது. அவருடைய கீழ்ப்படிதல் நீதிமானுக்கேற்ற அவருடைய உணர்வுகள் கடினமான சூழ்நிலைகளை விசுவாசம் மற்றும் அன்பினால் எதிர்நோக்குவது சந்தேகத்திற்கிடமின்றி யாக்கோபின் குமாரனாகிய யோசேப்பு தேவனுடைய இராஜ்யத்தில் முற்பிதாக்களில் ஒருவராக இருப்பார்.

**மரியாள்**

மரியாள் இயேசுவின் தாய் என்று உறுதியாக குறிப்பிடப்படுகிறது. இந்த ஒரு உறவானது, வாக்குத்தத்தம் பண்ணின ஸ்திரீயின் வித்தாகிய இயேசுவை குறிப்பிடுகிறது. (ஆதி 3:15) மரியாள் இயேசுவின் வாழ்க்கையின் முடிவு வரைக்கும் தொடர்ந்து அவரோடு இருந்ததினால் யோசேப்பை காட்டிலும் ஒரு முக்கியமான பங்கை பெற்றிருந்தாள்.

காபிரியேல் தூதன் அவளிடத்திற்கு வந்தபோது, மரியாள் "அவளோ அவனைக் கண்டு, அவன் வார்த்தையினால் கலங்கி, இந்த வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ என்று சிந்தித்துக்கொண்டிருந்தாள்." (லூக் 1:29) இங்கு மரியாளின் குணத்தைக் காணலாம். அவளுக்கு சொல்லப்பட்ட காரியங்களைக் குறித்து ஆழமாகவும், நீதிக்கு உட்பட்டும் சிந்திக்கத் துவங்கினாள். இதை அவள் எழுப்பின கேள்வியில் நாம் தெளிவாக அறிந்துகொள்ளலாம். லூக் 1:34 - "அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள்." மரியாள் நேர்மையான கேள்விகளை எழுப்புவதற்கு துணிவுள்ளவளாக இருந்தாலும், தேவனுடைய

வார்த்தைகளுக்கு உடனடியாகக் கீழ்ப்படிந்து, தன்னுடைய விசுவாசத்தை வெளிப்படுத்தினாள். வசனம் - 38 - "அதற்கு மரியாள்: இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள். அப்பொழுது தேவதூதன் அவளிடத்திலிருந்து போய்விட்டான்."

இப்படியாக மரியாளின் குணலட்சணங்களில் இருக்கக்கூடிய அநேக ஆழமான காரியங்கள் நிச்சயமாக குழந்தையான இயேசுவின் வளர்ச்சியில் ஊக்குவித்திருக்க வேண்டும். மரியாளை போல தனக்கு சொல்லப்பட்ட காரியங்களை ஆழமாக சிந்தித்து செயல்படக் கூடியவராக இருந்தார். நேர்மையான கேள்விகள் கடினமாக இருந்தாலும், அவைகளைக் கேட்க அவர் தயங்கவில்லை. தமக்கு முன் வைத்த காரியங்களில் தவறானவைகளைச் சுட்டிக்காட்டுவதற்கு அவர் எப்போதும் பயந்ததில்லை. இக்குணங்களை அவருடைய பன்னிரண்டாம் வயதிலிருந்து வெளிப்பட்டது. (லூக் 2:42-51)

மரியாள் எலிசபெத்தின் வீட்டிற்கு சென்றபொழுது, காபிரியேல் மரியாளிடம் சொன்ன காரியம் உறுதிப்பட்டது. (லூக் 1:41-51) இது மரியாள் கருவுற்றிருந்ததற்கு இரண்டாம் சாட்சி.

லூக் 1:46-55-ம் வசனங்களில், கொடுக்கப்பட்டுள்ள மரியாளின் சங்கீதமானது, முன்னதாகவே அவளைப் பற்றி சொல்லப்பட்ட குணங்கள் வெளிப்படுகிறது. கூடுதலாக தேவனுடைய வார்த்தைகளைப் பற்றிய மரியாளின் அறிவையும், தேவனுடைய வாக்குத்தத்தங்களின் மேல் அவளுடைய விசுவாசத்தையும், தேவனுடைய குணங்கள் மற்றும் திட்டங்களைப் பற்றின தெளிவான விளக்கங்களைப் பற்றின ஞானத்தை அவள் பெற்றிருந்ததை இது காட்டுகிறது. இக்குணங்கள் அனைத்துமே குழந்தையாக வளர்ந்த இயேசுவின் சிந்தையில் அச்சிடப்பட்டிருக்க வேண்டும். இப்படியாக இவர்கள் இருவருக்கும் இடையில் ஒரு நெருக்கமான பந்தம் வளர்ச்சியடைந்திருக்க வேண்டும்.

மரியாளின் வாழ்க்கையில் நடந்த அடுத்த ஒரு மிகப் பெரிய சம்பவம் - பெத்லகேமுக்குப் பயணித்து, இயேசுவை பெற்றெடுத்தல் (லூக் 2:19). தேவன் மேய்ப்பர்களுக்கு ஒரு விசேஷித்த செய்தியை அறிவித்தார். அந்த செய்தியை அவர்கள் யோசேப்பு மற்றும் மரியாளோடு பகிர்ந்து கொண்டனர். இந்த வார்த்தைகளை மரியாள் தன் மனதில் வைத்து, "மரியாளோ அந்த காரியங்களை மனதில் வைத்து சிந்தனை செய்தாள்" (வசனம் - 19) குறிப்பாக இயேசுவை இரட்சகர் என்ற பிரகடனத்தை அவள் சிந்தையில் வைத்தாள். (வசனம் - 11) அவள் சிந்தையில் வைத்திருந்த காரியத்திற்குக் கூடுதலாக சீமோனுடைய தீர்க்கதரிசனம் அவளை மேலும் ஆலோசிக்க வைத்தது. (வசனம் - 35) - "தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்தஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்."

இயேசு எந்த ஒரு மனித குழந்தையைக் காட்டிலும் பரிபூரண குழந்தையாக பிறந்திருந்தாலும், அவர் வளர்ச்சியடையும்போது அவருடைய அறிவுத்திறன் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து, அறிவைபெற்று அவர் லோகாஸாக இருந்தபொழுதும் கூட அறியாத காரியங்களை கற்றுக்கொண்டார். இயேசுவின் பன்னிரண்டு வயது வரைக்கும் நடந்த காரியங்களும், மரியாள் மற்றும் யோசேப்பை பொருத்த வரையிலும் நமக்கு எந்தவிதமான பதிவுகளும் இல்லை. "கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின்படி சகலத்தையும் அவர்கள் செய்து முடித்தபின்பு, கலிலேயாநாட்டிலுள்ள தங்கள் ஊராகிய நாசரேத்துக்குத் திரும்பிப்போனார்கள். பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன்கொண்டு, ஞானத்தினால் நிறைந்தது. தேவனுடைய கிருபையும் அவர்மேல் இருந்தது" (லூக் 2:39, 40) என்ற வசனங்களை மட்டுமே காணலாம்.

இயேசு உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும், ஆவிக்குரிய ரீதியாகவும் வளர்ச்சியடைந்தார். இயேசு மற்றும் மரியாளின் குணலட்சணங்களைப் பொருத்தவரையில் பல கோணங்களில் வெளிச்சம் வீசப்படுகிறது. இயேசு மிகக் குறைவான பிராயத்திலும் தனித்து யோசித்து செயல்பட்டார் என்று வெளிப்படுகிறது. துவக்கத்தில் இயேசுவைக் காணாதபோது, யோசேப்பு மற்றும் மரியாள் அதிகமாக அக்கறைக் காட்டவில்லை என்ற உண்மையானது அவர் தனித்து செயல்பட்டு தன்னைத்தான் பாதுகாத்துக் கொள்வதற்கு திறமையுள்ளவராய் இருந்தார் என்று காட்டப்படுகிறது.

பகலின் நேரத்தில் அவர் ஆலயங்களில் கேள்விகள் கேட்டு நேரத்தை செலவழித்தார். சந்தேகத்திற்கு இடமின்றி இரவு நேரங்களில் நியாயசாஸ்திரியின் வீடுகளுக்கு அழைத்துச் சென்றிருக்க வேண்டும். நேரங்கள் விரயமாக்கப்படாமல் கூடுதலான சம்பாஷணைகள்

அந்த மூன்று மாலை நேரங்களிலும் நடைபெற்றிருக்க வேண்டும்.

எளிமையான சூழ்நிலையில் இயேசுவை பன்னிரண்டு வருடங்களாக வளர்த்த யோசேப்பு மற்றும் மரியாள் அவரை ஒரு இயல்பானவராக எண்ணியிருக்க வேண்டும். "அதற்கு அவர்: நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக் கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டிய தென்று அறியீர்களா என்றார். தங்களுக்கு அவர் சொன்ன வார்த்தையை அவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை" (லூக் 2:49, 50)என்ற காரியங்களை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் மரியாள் அனைத்துக் காரியங்களையும் மனதில் வைத்து சிந்தித்தாள். இந்த ஒரு சம்பவம் காபிரியேல் சொன்ன செய்தியையும், இயேசுவின் பிறப்பின்போது மேய்ப்பர்கள் சொன்ன காரியங்களையும், சீமோனுடைய தீர்க்கதரிசன செய்திகளையும் அவளுக்கு மீண்டும் நினைவுபடுத்தியிருக்க வேண்டும். இவையனைத்தையும் கவனமாக சிந்தித்துக் கொண்டேயிருந்தாள்.

இயேசுவின் அற்புதமான பிறப்பைக் குறித்தும், பிதாவாகிய தேவன் தாமே அவருக்கு தந்தை என்றும், பிதாவாகிய தேவனுடைய விசேஷித்த ஒரு பணியை அவர் நிறைவேற்ற வேண்டும் என்ற காரியங்களையும் நிச்சயமாக இயேசுவினிடம் அறிவித்திருக்க வேண்டும். பதிமூன்று வயது நிரம்பிய இயேசு, யூத பாரம்பரியங்களிலும் பரிச்சயமானவராய் இருந்தார். அவருடைய தாயைப் போல அவரும் நியாயமான ஊழியங்களை ஆழமாக சிந்தித்து தம்முடைய மத ரீதியான பயிற்சியில் ஏற்ற நேரங்களில் ஏற்ற காரியங்களை முன் வைத்தார்.

அவர் கடினமான கேள்விகளையும் கேட்க தயங்கவில்லை. அதே நேரத்தில் அவருக்கு பதிலளிக்கப்பட்டபோது, அவர் உடனடியாக அதை உறுதியும் செய்து கொண்டார். "பின்பு அவர் அவர்களுடனே கூடப்போய், நாசரேத்தூரில் சேர்ந்து, அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார். அவருடைய தாயார் இந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்துக் கொண்டாள்." (லூக் 2:51)

இயேசுவின் ஊழியத்தின் போது, கலிலேயாவில் கானா ஊரில் நடந்த திருமணத்தின் போது மரியாளைப் பற்றி முதல்முதல் குறிப்பிடப்படுகிறது. (யோவ 2:1-11 )இயேசு நாற்பது நாள் வனாந்தரத்தில் இருந்ததற்குப் பின் இந்த சம்பவம் நடைபெற்றது. இயேசுவுக்கும் மரியாளுக்கும் இடையில் நடந்த சம்பாஷணையை சரியாக புரிந்துகொண்டால் இயேசு தம்முடைய தாய்க்காக வைத்திருந்த ஆழமான மரியாதையை புரிந்துகொள்ளலாம். மரியாளை பொறுத்த வரையில் ஒரு அற்புதம் நிகழ வேண்டும் என்ற அவளுடைய விருப்பத்தைக் காட்டிலும் அதற்கு முன் நடந்த சம்பவங்களில் இயேசுவின் மேல் வைத்திருந்த அவருடைய அதிகபட்சமான நம்பிக்கையைக் காட்டுகிறது.

என்னுடைய வேளை இன்னும் வரவில்லை என்ற வார்த்தைகள் "நான் தலையிடுவதற்கான நேரம் இன்னும் வரவில்லை" என்று நாம் சரியாக புரிந்துகொள்ளலாம். மேலும் திராட்ச ரசம் முழுமையாக அந்நேரம் தீர்ந்து போகவும் இல்லை. அந்த திராட்ச ரசம் முழுமையாக தீர்ந்து போகும்வரைக்கும் காத்திருந்தால் அந்த அற்புதத்தின் வல்லமையும் அதிகரிக்கும். ஆனால் மரியாள் எல்லா காரியங்களையும் இயேசுவினிடத்தில் கொடுத்து, "கயிற்றினால் ஒரு சவுக்கையுண்டுபண்ணி, அவர்கள் யாவரையும் ஆடுமாடுகளையும் தேவாலயத்துக்குப் புறம்பே துரத்திவிட்டு, காசுக்காரருடைய காசுகளைக் கொட்டி, பலகைகளைக் கவிழ்த்துப்போட்டு," (யோவ 2:15) என்று சொல்லிவிட்டுச் சென்றாள்.

இயேசுவின் ஊழியத்தின் போது மரியாளை குறித்து இந்த வார்த்தைகள் குறிப்பிடப்படவில்லை. அவர் தன்னுடைய தாயின் இடத்தில் கொண்டிருந்த அன்பின் ஐக்கியத்தை அவருடைய இறுதியான சில வருடங்களின் முடிவில் சில வார்த்தைகளைக் கொண்டு வெளிப்படுத்தப்படுகிறது. "இயேசுவின் சிலுவையின் அருகே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலேயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும், அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி -ஸ்திரீயே, அதோ உன் மகன் என்றார். பின்பு அந்த சீஷனைநோக்கி அதோ உன் தாய் என்றார். அநேரமுதல் அந்த சீஷன் அவளை தன்னிடமாய் ஏற்றுகொண்டான். "(யோவ19:25-27)என்று இயேசு சிலுவையில் தொங்கின போது மரியாளிடம் கூறினார்.

சந்தேகத்திற்கு இடமின்றி மரியாளும் இயேசுவின் சீஷராக மாறினாள். பெந்தெகொஸ்தே நாளின் போது மேல் வீட்டறையில் மரியாளும் இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. (அப் 1:14) மரியாள் இயேசுவின் வாழ்க்கையின் ஒரு முக்கியமான பங்கை வகித்தாலும், இயேசுவின் மரணத்திற்குப் பின்

இந்த ஒரு இடத்தில் மட்டுமே அவளைக் குறித்து காணப்படுகிறது.

**சகோதர சகோதரிகள்**

இயேசு பிறந்ததற்குப் பின் யோசேப்புக்கும் மரியாளுக்கும் அநேக குழந்தைகள் பிறந்தது என்று பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் வசனங்கள் குறிப்பிடுகிறது, சங்கீதம் 69:8-ம் வசனம் இதற்கு உறுதியான ஆதாரமாய் குறிப்பிடப்படுகிறது. தீர்க்கதரிசனமாக சொல்லப் போனால், "என் சகோதரருக்கு வேற்று மனுஷனும், என் தாயின் பிள்ளைகளுக்கு அந்நியனுமானேன்." (சங் 69:8)

தம்முடைய தாயின் பிள்ளைகளோடு இவர் கொண்டிருந்த உறவு பிரச்சனைக்குரியதாகக் கருதப்படுகிறது. இந்த ஒரே சிந்தையோடு மத்தேயு 12:46-49 இசைந்து காணப்படுகிறது. "இவர் தச்சனுடைய குமாரன் அல்லவா" என்று அயலகத்தார் இயேசுவின் ஞானத்தையும் கிரியைகளையும் விசுவாசியாமல் இருந்ததுபோல இவர்களும் விசுவாசியாமல் இருந்திருக்க வேண்டும். (மத் 13:54-57)

இயேசு தம்முடைய சகோதர சகோதரிகளுக்குப் பதிலாக தம்முடைய தாயை பராமரிக்கக்கூடிய பொறுப்பை யோவானிடத்தில் ஒப்புவித்தக் காரியமானது, அந்நேரம் வரைக்கும் அவர்கள் இயேசுவுக்கு சீஷர்களாக மாறவில்லை என்பதைக் காட்டுகிறது. ஆயினும் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் அவருடைய ஒன்றுவிட்ட சகோதரனாகிய யாக்கோபோடு ஒரு ஆர்வமூட்டும் சம்பாஷணை நடந்தது. இதைக் குறித்து அப்போஸ்தலர் பவுல் 1 கொரி 15:7-ல் குறிப்பிடுகிறார்.

அங்கு நடந்த சம்பாஷணையைக் குறித்து நமக்கு எதுவும் சொல்லப்படவில்லை. ஆனால் பெந்தெகொஸ்தே நாளின் போது, 120 பேர்கள் மத்தியில் இயேசுவின் சகோதரர்களும் காண்பது மிகவும் ஆச்சரியமாக உள்ளது. இவர்கள் அனைவரும் தொடர்ந்து ஜெபத்திலும் விண்ணப்பத்திலும் தரித்திருந்தார்கள் என்று வாசிக்கிறோம். (அப் 1:14)

யாக்கோபின் தோற்றமானது, இயேசுவின் மற்ற சகோதரர்களை அவர்களுடைய சீஷர்களாக மாற்றுவதற்கு ஊக்குவித்திருக்க வேண்டும். இயேசுவை இளைய சகோதரர்களை எதிர்ப்பதை எண்ணி நாம் ஆச்சரியப்பட வேண்டியதாய் இருக்கிறது. தங்களுடைய மூத்த சகோதரன் தங்களைக் காட்டிலும் காரியங்களை நேர்த்தியாய் செய்வதினிமித்தம் பொறாமை அடைந்தார்களா? மரியாள் மற்றும் யோசேப்பு - இயேசுவுக்கு அவ்வப்போது விசேஷித்த கவனம் செலுத்தியதினால் இவர்களுக்குள் இந்த பகை வளர்ந்திருக்குமோ?

இந்த சில முரண்பாடுகள் மட்டுமே எதிர்மறைவான உணர்வுகளை வெளிப்படுத்தினாலும், இறுதியில் இவை அனைத்தையும் மேற்கொண்டு அவருடைய சகோதரர்கள் அவருக்கு சீஷர்களாக மாறியது ஒரு வியப்பூட்டும் காரியமாக உள்ளது.

இயேசுவுக்காக ஒரு குடும்பத்தை தேர்வு செய்கையில் தேவன் ஒவ்வொரு தனிப்பட்ட நபர்களை விசுவாசத்திலும், குறைவுகளிலும் உறுதியானவர்களாக தெரிந்து கொண்டிருக்க வேண்டும். குழந்தையாகிய இயேசு வளர்ச்சியடைவதற்கு ஏற்ற நல்ல மாதிரியுள்ள நல்ல ஜனங்களை தேவன் அவருக்கு முன் வைத்திருக்க வேண்டும்.

இயேசுவின் வாழ்க்கையில் ஒரு முக்கியமான பங்கை நிறைவேற்ற யோசேப்பு மற்றும் மரியாளுக்கு ஒரு சிறப்புள்ள வாய்ப்பு கொடுக்கப்பட்டது. இதற்கு பதிலாக அவர்கள் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். மேலும் கீழ்ப்படிதல் ஞானமுள்ள பெற்றோர்களாக ஒரு உறுதியான மாதிரியை பின் வைத்து சென்றார்கள்.

மீன் பிடிப்பவர்கள் துவங்கி, பக்தியுள்ள பெண் வரைக்கும்

# அவருடைய சீஷர்கள்



"நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும்படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும், உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்; இன்னமும் தெரியப்படுத்துவேன் என்றார்." (யோவ 17:26)

எப்படிப்பட்ட தனி நபர்கள் இயேசுவின் சீஷர்களாக மாறினார்கள்? இயேசு தம்முடைய அனைத்து சீஷர்களோடு கொண்டிருந்த உறவு என்ன? இயேசு தம்முடைய முதல் வருகையில் (கிபி 30 - கிபி 33) தம்முடைய சீஷர்களோடு உரையாடின சம்பவங்கள் இருக்கக்கூடிய வசனப்பதிவுகளைக் காணலாம். இயேசு தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தை துவங்கினது முதல் இந்நாள் வரைக்கும் அவர் தம்முடைய சீஷர்கள் அனைவரோடும் கூட வைத்திருந்த உறவுகளை மேலும் சரியாக புரிந்துகொள்வதற்கு இது உதவியாக இருக்கும்.

இயேசு தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தைத் துவங்கினபோது, அநேகர் மேசியாவைக் குறித்த எதிர்பார்ப்பில் இருந்தனர். (லூக் 3:15) ஆயினும் இவர்கள் இயேசுவை காட்டிலும் முழுமையாக வித்தியாசப்பட்ட ஒரு நபருக்காகக் காத்திருந்தார்கள். தோற்றத்தில் இராஜரீகமான நடை உள்ளவரும், மிக உயர்வான பதிவியில் இருக்கக்கூடிய ஒருவரை பெரும்பாலான இஸ்ரயேலர் எதிர்பார்த்தனர். ஆனால் மேசியாவானவர் இராஜரீகமான யூதா கோத்திரத்தில் இராஜ வம்சமான தாவீதின் வம்ச வழியில் வந்தார்.

சகோதரர் ரஸல் கீழ்க் காணும் காரியங்களைக் குறிப்பிட்டிருக்கிறார் - "ஒவ்வொரு கூடுமான சூழ்நிலைகளிலும் இயேசு தாம் பிறந்த இராஜரீகமான வம்சத்தினிமித்தம் தம்முடைய அந்தஸ்தை வலியுறுத்தி அதிகாரம் செலுத்தியிருக்கலாம்... இதற்கு முரண்பாடாக இயேசு சாந்தமும் மனத்தாழ்மையும் உள்ளவராக வாழ்ந்தார். இப்படியாக இயேசுவினிடமிருந்த விசேஷித்த குணங்கள் அவருடைய சீஷர்களை ஈர்த்தது. அதே நேரத்தில் திரளானவர்களை ஈர்க்க மறுத்தது."

இயேசு தம்முடைய சீஷர்களுக்கு சாந்தமுள்ளவராகவும், இருதயத்தில் தாழ்மையுள்ளவராகவும், பக்தியுள்ளவராகவும், உண்மையுள்ளவராகவும் இருக்கும்படியாக பிதாவாகிய தேவன் வடிவமைத்தார். மேலும் இயேசு உலகத்தின் ஞானிகளுக்கும் அவருடைய நாட்களிலுள்ள மத ஆளுநர்களுக்கும் எப்பொழுதும் முரண்பட்டவராக இருந்தார்.

இந்த கோட்பாடு சுவிசேஷ யுகம் முழுவதிலும் காணப்பட்டது. சுவிசேஷ யுகம் முழுவதிலும் உண்மையான இயேசுவின் சீஷர்கள் மிகக் குறைவான எண்ணிக்கையிலும், அவரை பின்பற்றாதவர்கள் அநேகராய் காணப்படுகிறார்கள். ஆகவே, அவரை பின்பற்றக் கூடியவர்களில் ஞானிகள் அநேகரில்லை, கல்விமான்கள் அநேகரில்லை, இந்த உலகத்தின் படி மேன்மக்கள் அநேகரில்லை, விசுவாசத்தில் ஐசுவரியமுள்ளவர்களே உண்மையான சீஷர்களாக இயேசுவை பின்பற்றுகிறார்கள்." R3483

### அழைப்பிதழுக்கு செவிசாய்த்தல்

ஆதியிலுள்ள இயேசுவின் சீஷர்களில், பன்னிரண்டு பேர் அப்போஸ்தலராக தேர்வு செய்யப்பட்டனர். "சீஷர் மற்றும் அப்போஸ்தலர்" என்பவர்களுக்கு இடையிலான வித்தியாசம் என்ன? Mathepes என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து சீஷர் என்ற வார்த்தை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. (strongs 3101) இதற்கு கற்றுக்கொள்பவன் அல்லது மாணவன் என்று பொருள். "அப்போஸ்தலர்" என்ற வார்த்தை "சுவிசேஷத்தின் ஸ்தானாபதி" என்று பொருள் கூறும் வார்த்தையிலிருந்து கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூல வார்த்தையில், "தனித்துப் பிரிப்பது" அல்லது "வெளியே அனுப்புவது" என்று பொருள்.

இயேசுவின் சீஷர் ஒரு மாணவன் அல்லது இயேசுவின் போதனைகளையும், மாதிரிகளையும் கற்றுக்கொள்ளக் கூடியவராய் இருக்கிறார். அதேநேரத்தில் அப்போஸ்தலர்கள் தேவனால் விசேஷமாக சீஷர்களின் மத்தியிலிருந்து தேர்வு செய்யப்பட்ட தனி நபர் ஆவர். இவர்கள் இயேசுவினால் இரண்டு இரண்டு பேர்களாக இஸ்ரயேல் தேசத்துக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க "அனுப்பப்பட்டார்கள்" ஆகையால், அப்போஸ்தலர்களும் இயேசுவின் சீஷர்களாக இருந்தனர். ஆனால் சீஷர்கள் அனைவரும் அப்போஸ்தலராய் இருக்கவில்லை.

### பேதுரு, அந்திரேயா, யாக்கோபு மற்றும் யோவான்

"இயேசு கலிலேயாக் கடலோரமாய் நடந்துபோகையில், மீன்பிடிக்கிறவர்களாயிருந்த இரண்டு சகோதரராகிய பேதுரு என்னப்பட்ட

சீமோனும், அவன் சகோதரன் அந்திரேயாவும், கடலில் வலைபோட்டுக்கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு: என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள். அவர் அவ்விடம் விட்டுப் போகையில், வேறே இரண்டு சகோதரராகிய செபெதேயுவின் மகன் யாக்கோபும், அவன் சகோதரன் யோவானும் தங்கள் தகப்பன் செபெதேயுவுடனே படவிலிருந்து, தங்கள் வலைகளைப் பழுதுபார்த்துக் கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு, அவர்களையும் அழைத்தார். உடனே அவர்கள் படவையும் தங்கள் தகப்பனையும் விட்டு, அவருக்குப் பின் சென்றார்கள்." (மத் 4:18-22)

"என் பின்னே வாருங்கள்" என்று இயேசு பேதுரு, அந்திரேயா, யாக்கோபு மற்றும் யோவானை அழைத்த போது, அவர்கள் எவ்வாறு செவிக்கொடுத்தார்கள் என்ற காரியம் குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. அவர்கள் உடனடியாக தங்களுடைய தொழிலைவிட்டு இயேசுவை பின்பற்றினார்கள். இந்த நான்கு மீன் பிடிப்பவர்களும் இயேசுவுக்கு சீஷர்களானார்கள். பிற்பாடு தேவனால் அப்போஸ்தலர்களாக அழைக்கப்பட்டார்கள். இந்த நான்கு மனிதரும் தம்மை பின்பற்றுவதற்காக தங்களுடைய தொழிலை எந்தவிதமான தயக்கமின்றி விட்டுவந்ததை எண்ணி நிச்சயமாகவே இயேசு பாராட்டியிருக்க வேண்டும்.

### மீன் பிடிக்கும் அஸ்போஸ்தலர்

அப்போஸ்தலர்களாக மாறின மற்ற மீன் பிடிப்பவர்களும் இருந்தனர். உண்மையில் யோவா 21-ம் அதிகாரத்தில் ஏழு பேரைப் பற்றி குறிப்பிடுகிறது. "சீமோன்பேதுருவும், திதிமு என்னப்பட்ட தோமாவும், கலிலேயா நாட்டிலுள்ள கானா ஊரானாகிய நாத்தான்வேலும், செபெதேயுவின் குமாரரும், அவருடைய சீஷரில் வேறு இரண்டுபேரும் கூடியிருக்கும்போது, சீமோன்பேதுரு மற்றவர்களை நோக்கி: மீன்பிடிக்கப்போகிறேன் என்றான். அதற்கு அவர்கள்: நாங்களும் உம்முடனேகூட வருகிறோம் என்றார்கள். அவர்கள் புறப்பட்டுப்போய், உடனே படவேறினார்கள். அந்த இராத்திரியிலே அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை." (யோவ 21:2, 3) இத்தனை மீன் பிடிப்பவர்கள் அப்போஸ்தலர்களாக அழைக்கப்பட்டதன் காரணம் என்ன? மீன் பிடிக்கும் தொழிலில் குறிப்பாக ஏதோ சில காரியங்கள் இருந்ததா? "மீன் பிடிக்கும் தொழிலில் ஏதோ சில காரியங்கள் இருந்திருக்க வேண்டும் - இந்த அப்போஸ்தலர்கள் தங்களுடைய மீதியுள்ள வாழ்க்கையில் நடப்பிக்கக்கூடிய மிகப் பெரிய கிரியைகளுக்கு சில குறிப்பான காரியங்கள் பயனுள்ளதாக இருந்திருக்க வேண்டும். நல்ல பலம், பொறுமை, கவனம், சரியான தூண்டில், இரை மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக மீன் பிடிப்பவர்கள் மீனின் பார்வையிலிருந்து மறைந்திருக்க வேண்டும். இக் குணங்கள் அனைத்துமே ஆவிக்குரிய மீன்களைப் பிடிப்பதற்குத் தேவையானதாக இருப்பதால் நம்முடைய ஆண்டவர் இத் தொழில் உள்ளவர்களை அழைத்தார்" என்று மத் 4:19-ம் வசனத்தை அநுதின பரலோக மன்னா விமர்சிக்கிறது.

### பெண் சீஷர்கள்

இயேசுவின் சீஷர்கள் அனைவரும் ஆண்கள் மட்டுமல்ல சில விலையுயர்ந்த ஸ்திரீகளும் இயேசுவுக்கு சீஷர்களாய் இருந்தனர்.

"பின்பு, அவர் பட்டணங்கள்தோறும் கிராமங்கள்தோறும் பிரயாணம்பண்ணி, தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைக் கூறிப் பிரசங்கித்துவந்தார். பன்னிருவரும் அவருடனேகூட இருந்தார்கள். அவர் பொல்லாத ஆவிகளையும் வியாதிகளையும் நீக்கிக் குணமாக்கின சில ஸ்திரீகளும், ஏழு பிசாசுகள் நீங்கின மகதலேனாள் என்னப்பட்ட மரியாளும், ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்துகொண்டுவந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவருடனே இருந்தார்கள்." (லூக் 8:1-3)

இயேசுவின் சீஷர்களாக இருந்த இந்த ஸ்திரீகள் இயேசுவுக்கு என்னென்ன காரியங்கள் செய்தார்கள் என்று தெளிவாக சொல்லப்படவில்லை. ஒருவேளை இயேசுவுக்கும் அவருடைய சீஷர்களுக்கும் தேவைப்பட்ட நேரங்களில் உணவுகளையும் வஸ்திரங்களையும் ஆயத்தம் செய்து கொடுத்திருக்கலாம். நிச்சயமாக இயேசுவினிடம் இவர்கள் காட்டின அன்பையும் தாராள குணத்தையும் அவர் பாராட்டியிருக்க வேண்டும்.

இயேசுவின் தையலில்லாத வஸ்திரம் மிக உச்சிதமாக காணப்பட்டதினால் ரோம போர்வீரர்கள் அதை அதிகமாக விரும்பி, அதை பெற்றுக் கொள்வதற்கு தங்களுக்குள்ளே சீட்டுப் போட்டுக் கொண்டனர். தையலின்றிக் காணப்பட்ட இந்த வஸ்திரம் இயேசுவின் பரிபூரணத்தை மிக அழகாக அடையாளப்படுத்தியிருந்தாலும் இந்த ஒரு வஸ்திரத்தை அவருடைய விலையேறப் பெற்ற பெண் சீஷிகளில் ஒருவர் அதை பரிசாகக் கொடுத்திருக்க

வேண்டும் என்று கருதப்படுகிறது. (R2316) இயேசு நிச்சயமாக இச் செயலை மெச்சியிருக்க வேண்டும்.

**மகதலேனாள் மரியாள்**

இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் அவரோடு கூட முதலில் பேசக் கூடிய சிறப்புரிமையைப் பெற்றிருந்த சீஷன் யார்?

முதலில் இயேசு காட்சியளித்ததும் மகதலேனா மரியாளுக்கு. இதன் காரணம் என்ன? (மரியாள் கல்லறைக்கு முதன்முறை வந்ததை யோவ 20:1, 2 பதிவு செய்து உள்ளது. அதே சம்பவத்தை பதிவு செய்த மத்தேயு மற்றும் மாற்கு எழுதும் போது, மரியாளோடு மற்ற ஸ்திரீகளும் இருந்ததாகக் காணப்படுகிறது - மத் 28:1; மாற்கு 16:1

இயேசு மரியாளோடு கூட இருந்த மற்ற ஸ்திரீகளுக்கும் காட்சியளித்தார் என்று மத் 28:9 கூறுகின்றது.)

இயேசு பட்டணங்கள் தோறும் போதிக்கையில் இயேசுவை கலிலேயாவிலிருந்து பின்பற்றின பன்னிரண்டு அப்போஸ்தலர்களோடும் கூட சில ஸ்திரீகளில் மரியாளும் ஒருவராக இருந்தாள். (லூக் 8:1-3) இயேசு ஏழு பிசாசுகளை விரட்டி மகதலேனா மரியாளை சொஸ்தப்படுத்தினார் என்று குறிப்பிடப்படுகிறது. இயேசு சிலுவையில் அறையப்பட்ட போதும் அங்கு நின்று கொண்டிருந்த ஸ்திரீகளுக்குள் மரியாளும் இருந்தாள். (மத் 27:55-56) அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பைப் பின் தொடர்ந்த ஸ்திரீகளோடு கூட இந்த மரியாளும் காணப்பட்டாள். (மத் 27:61) இயேசுவின் சீரத்திற்கு சுகந்தவர்க்கத்தையும், வெள்ளைப்போளத்தையும் ஆயத்தப்படுத்திச் சென்ற ஸ்திரீகளோடு மரியாளும் சென்றாள். இயேசு கல்லறையிலிருந்து உயிர்த்தெழுவார் என்று இயேசுவால் முன்னுரைக்கப்பட்ட வார்த்தைகளை எந்த ஒரு சீஷர்களும் நினைவில் வைத்திருந்ததாக பதிவுகள் காணப்படவில்லை. மத் 16:21 - "அதுமுதல் இயேசு, தாம் எருசலேமுக்குப்போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்கவேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார்."

மூன்றாம் நாளில் மகதலேனா மரியாள் மற்றும் இரண்டு ஸ்திரிகளோடு இருட்டோடே அதிகாலையில் எழுந்து இயேசுவின் கல்லறைக்குச் சென்றனர். (யோவ 20:1) இயேசுவின் கல்லறைக்கு தனித்து வருவதற்கு அவர் மேல் எவ்வளவு ஆழமான அன்பைக் கொண்டிருந்திருக்க வேண்டும். ஏதோ ஒரு வழியில் கல்லறைக்குள் நுழைவதற்கு அதை மூடி வைக்கப்பட்டுள்ள கல்லை உருட்டி விடலாம் என்று எண்ணியிருக்க வேண்டும். மூன்று நாட்களில் கல்லறையில் இருக்கும் இயேசுவின் சரீரம் நாற்றம் எடுத்திருக்குமே என்ற சிந்தையைக் கூட அவர்கள் புறக்கணித்து, அந்த கல்லறையைக் காணவந்தார்கள். சில வாரங்களுக்கு முன்பாக இயேசு லாசருவின் கல்லறையிலிருந்த கல்லை எடுத்துப் போடும்படி சொன்னபோது, "ஆண்டவரே, நான்கு நாளாயிற்றே இந்நேரத்திற்குள் சரீரம் நாறுமே என்று மார்த்தாள் கூறினாள். (யோவ 11:39)

அந்த ஸ்திரீகள் கல்லறையினிடத்தில் வந்தபோது அந்த கல் முன்னதாகவே திறந்திருப்பதைக் கண்டார்கள். காலியான கல்லறையைக் கண்ட அவர்கள் அதைப்பற்றி அறிவிப்பதற்கு பேதுருவிடமும் யோவானிடமும் விரைந்து சென்றனர். (யோவ 20:2) பேதுருவும் யோவானும் கல்லறைக்குள் சென்று அது காலியாக இருப்பதை அறிந்து வீடு திரும்பினார்கள். (யோவ 20:10)

ஆனால் மகதலேனா மரியாளோ கல்லறையில் நின்று அழுது கொண்டிருந்தாள். (யோவ 20:11) இங்கும் மரியாளின் இருதயத்திலுள்ள ஆழமான துக்கத்தைக் காணலாம். இயேசு மரித்திருந்தாலும், அவர் சரீரத்திற்குச் செய்ய வேண்டிய காரியங்களை அவளால் செய்ய முடியாத அளவுக்கு அந்த சரீரமும் காணப்படாமல் போனது.

யோவ 20:12-15 - "இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டிருந்த இடத்திலே வெள்ளுடை தரித்தவர்களாய் இரண்டு தூதர்கள், தலைமாட்டில் ஒருவனும் கால்மாட்டில் ஒருவனுமாக, உட்கார்ந்திருக்கிறதைக் கண்டாள். அவர்கள் அவளை நோக்கி: ஸ்திரீயே, ஏன் அழுகிறாய் என்றார்கள். அதற்கு அவள்: என் ஆண்டவரை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை என்றாள். இவைகளைச் சொல்லிப் பின்னாகத் திரும்பி, இயேசு நிற்கிறதைக் கண்டாள், ஆனாலும் அவரை இயேசு என்று அறியாதிருந்தாள். இயேசு அவளைப் பார்த்து: ஸ்திரீயே, ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய் என்றார். அவள், அவரைத் தோட்டக்காரனென்று எண்ணி: ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டுபோனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும், நான் போய் அவரை எடுத்துக்கொள்ளுவேன் என்றாள்."

மீண்டுமாக மகதலேனா மரியாள் இயேசுவின் அன்பையும், தனக்குள் இருந்த உறுதியும் வெளிப்படுத்தினாள். ஒருவேளை அவளுக்கு வாய்ப்பு

கொடுக்கப்பட்டிருந்தால், மரித்துப்போன இயேசுவின் சரீரத்தை மீண்டும் தூக்கிவிடுவதற்கான பெலத்தை அவளிடத்தில் காணலாம்!

யோவ 20:16 - "இயேசு அவளை நோக்கி: மரியாளே என்றார். அவள் திரும்பிப் பார்த்து: ரபூனி என்றாள், அதற்குப் போதகரே என்று அர்த்தமாம்."

எவ்வளவு விரைவாக மரியாள் அவளுக்குள் இருந்த விசுவாசத்தினிமித்தம் அவரை இயேசு என்று அறிந்திருக்க வேண்டும். "ஸ்திரீகளுக்குரிய சந்தேகக் குணங்கள் இருந்தபோதிலும், மரியாள் எந்தவிதமான அடையாளங்களையோ, ஆதாரங்களையோ எதிர்பார்க்காமல் ரபூனி என்று உடனடியாக தன்னுடைய ஆண்டவரை உணர்ந்து கொண்டாள். (R2478)

அதற்கு பின் இயேசு தாம் உயிர்த்தெழுந்த செய்தியை சகோதரர்களுக்கு அறிவிக்கும் படி அவளை அனுப்பினார். (யோவ 20:17, 18) மகதலேனாள் மரியாளிடமிருந்த விசுவாசம், பக்தி, அன்பு மற்றும் அவளிடமிருந்த உறுதியான மனநிலையை இயேசு பாராட்டினார். ஆகவே உயிர்த்தெழுந்த இயேசுவை முதன் முதலில் காணவும், அவரிடம் பேசவும் மகதலேனாள் மரியாளுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. மேலும் இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்த நற்செய்தியை சீஷர்களுக்கு அறிவிக்கக்கூடிய கடமையும் அவளுக்குக் கொடுக்கப்பட்டது. மிகவும் அற்பமான துவக்கத்தில் அழைக்கப்பட்ட அளவுக்கு எவ்வளவு மேன்மையான கனம் கொடுக்கப்பட்டது. நம்முடைய ஆண்டவராம் இயேசு தம்முடைய ஒவ்வொரு சீஷர்களின் விசுவாசத்தையும் பக்தியையும், உறுதியையும் அறிந்திருக்கிறார். அதற்கேற்றப்படி ஒவ்வொருவருக்கும் பலனிளிப்பார் என்ற ஒரு பாடத்தை இந்த சூழ்நிலையிலிருந்து நாம் கற்றுக்கொள்ளலாம்.

### கேள்வி கேட்பதற்கான துணிவு

இயேசுவின் மற்றொரு சீஷனும், அப்போஸ்தலனுமாகிய தோமாவின் சந்தேகமான நிலையை குறித்து நாம் அறிந்திருக்கலாம். ஆனாலும் இயேசுவின் உயிர்த்தெழுதலின் போது நடந்த சம்பவங்களில் தோமாவை குறித்த விவரங்கள் முழுமையாகக் குறிப்பிடப்படவில்லை. ஏனெனில் அவருடைய வாழ்க்கையின் துவக்கத்தில் நடந்த மற்ற சம்பவங்களில் அவர் தைரியம் மற்றும் விசுவாசமுள்ள சீஷர் என்று வசனங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

யோவ 11:14-16 - "அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: லாசரு மரித்துப்போனான் என்று வெளிப்படையாய்ச் சொல்லி; நான் அங்கே இராததினால் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாகிறதற்கு ஏதுவுண்டென்று உங்கள்நிமித்தம் சந்தோஷப்படுகிறேன்; இப்பொழுது அவனிடத்திற்குப் போவோம் வாருங்கள் என்றார். அப்பொழுது திதிமு என்னப்பட்ட தோமா மற்றச் சீஷர்களை நோக்கி: அவரோடேகூட மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள் என்றான்" என்று இயேசு கூறினார். இந்த சூழ்நிலையில் தோமா தம்முடைய மிகுந்த தைரியத்தை வெளிப்படுத்தி இயேசுவோடு கூட மரிக்கவும் துணிந்திருந்தார். அவர் கூட இருந்த மற்ற சீஷர்களையும் இவ்வாறு செய்யும்படி ஊக்குவித்தார். நிச்சயமாக தோமாவின் மனநிலையை இயேசு பாராட்டியிருக்க வேண்டும்.

மற்றொரு சூழ்நிலையில் யோவ 14:2-4 - "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன். நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள், வழியையும் அறிந்திருக்கிறீர்கள் என்றார்" என்று இயேசு கூறினபோது, யோவ 14:5 - "தோமா அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் போகிற இடத்தை அறியோமே, வழியை நாங்கள் எப்படி அறிவோம் என்றான்" என்று இயேசுவிடம் தோமா கேள்வி எழுப்பினார். 14:6, 7-வசனங்களில், இயேசு தோமாவின் கேள்விகளுக்கு பதில் அளித்தார். இந்த ஒரு சம்பாஷணையில் நமக்கு ஒரு பாடம் அமைந்துள்ளது. நம்முடைய சகோதரர்களோடு நாம் கூடிவருகையில் வசனங்களைக் குறித்த கேள்விகளைக் கேட்பதற்கு நாம் தயங்கக்கூடாது. சத்தியங்களை கற்றுக்கொள்வதற்கு தோமாவைப் போல் நாம் தைரியமுள்ளவர்களாக இருக்க வேண்டும். நம்மைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்று சிந்திக்கக்கூடாது. அநேக நேரங்களில் நம்முடைய கேள்விக்கான பதில்கள் நமக்கு மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் ஆசர்வாதமாக இருக்கும்.

### திருத்துவதற்கு செவிசாய்த்தல்

இப்பொழுது பவுலைக் குறித்து ஆய்வு செய்யலாம். இயேசுவின் பூமிக்குரிய மூன்றரை வருட நேரடியான ஊழியத்தில் தேர்வு செய்யப்படாத பவுல் எவ்வாறாக ஒரு அப்போஸ்தலனாக தேர்வு செய்யப்பட்டார்?

அப்போஸ்தலர் 9:1-5 - "சவுல் என்பவன் இன்னுங் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலைசெய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப்போய்; இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டுபிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெபஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான். அவன் பிரயாணமாய்ப் போய், தமஸ்குவுக்குச் சமீபித்தபோது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது; அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது: சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக்கேட்டான். அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார்."

சவுல் சீஷர்களை துன்பப்படுத்தினபோது, இயேசு தாமே துன்பப்பட்டதாக கூறினதை நாம் காணலாம். மேலும் மற்ற வசனங்களிலும் இயேசு தம்முடைய சீஷர்களை எவ்வாறாக பாவித்தார் என்றும் காணலாம். அவர்களை தம்முடைய சொந்த சரீரம் என்று விவரித்தார். (1 கொரி 12:12-27) நாம் கிறிஸ்துவை பின்பற்றுவதினால் ஏற்படும் உபத்திரவங்கள் மற்றும் பாடுகளை நம்முடைய ஆண்டவரும் உணரக்கூடியவராய் இருக்கிறார்.

"ஆண்டவரே நான் செய்ய வேண்டும்?" என்ற பவுலின் பதில் அப் 22:10-ல் காணலாம். ஆதி சபையை உபத்திரவப்படுத்தினது மிகத் தவறான ஒரு காரியமென்று சவுல் உடனடியாக உணர்ந்து கொண்டார். அவர் தம்முடைய நேர்மையான இருதயத்தை வெளிப்படுத்தினார். அதற்கேற்றவாறு இயேசுவும் பதிலளித்தார். அப் 9:6 - "அவன் நடுங்கித் திகைத்து: ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர்: நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்."

அப் 9:8, 9 - "சவுல் தரையிலிருந்தெழுந்து, தன் கண்களைத் திறந்தபோது ஒருவரையுங்காணவில்லை. அப்பொழுது கைலாகுகொடுத்து, அவனைத் தமஸ்குவுக்குக் கூட்டிக்கொண்டுபோனார்கள். அவன் மூன்று நாள் பார்வையில்லாதவனாய்ப் புசியாமலும் குடியாமலும் இருந்தான்." இயேசுவின் சீஷர்களை உபத்திரவப்படுத்தினதை எண்ணி சவுல் ஆழமாக மனம் வருந்தியிருக்க வேண்டும். இதினிமித்தம் அவர் புசிக்கவும், குடிக்கவும் மறுத்திருக்க வேண்டும். ஒருவேளை ஆண்டவர் குறுக்கிடாவிட்டால் சவுல் அந்த துக்கத்தில் புசியாமலும், குடியாமலும் மரித்தும் போயிருக்கலாம்.

அப் 9:10-16 - "தமஸ்குவிலே அனனியா என்னும் பேருள்ள ஒரு சீஷன் இருந்தான். அவனுக்குக் கர்த்தர் தரிசனமாகி: அனனியாவே, என்றார். அவன்: ஆண்டவரே, இதோ, அடியேன் என்றான். அப்பொழுது கர்த்தர்: நீ எழுந்து நேர்த்தெருவு என்னப்பட்ட தெருவுக்குப்போய், யூதாவின் வீட்டிலே தர்சுபட்டணத்தானாகிய சவுல் என்னும் பேருள்ள ஒருவனைத் தேடு; அவன் இப்பொழுது ஜெபம்பண்ணுகிறான்; அனனியா என்னும் பேருள்ள ஒரு மனுஷன் தன்னிடத்தில் வரவும், தான் பார்வையடையும்படி தன்மேல் கைவைக்கவும் தரிசனங்கண்டான் என்றார். அதற்கு அனனியா: ஆண்டவரே, இந்த மனுஷன் எருசலேமிலுள்ள உம்முடைய பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச் செய்தானென்று அவனைக்குறித்து அநேகரால் கேள்விப்பட்டிருக்கிறேன். இங்கேயும் உம்முடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற யாவரையுங் கட்டும்படி அவன் பிரதான ஆசாரியர்களால் அதிகாரம் பெற்றிருக்கிறானே என்றான். அதற்கு கர்த்தர்: நீ போ; அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான். அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார்."

சவுல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பாத்திரம் என்று ஆண்டவர் அனனியாவிடம் கூறினார். இதற்கு தெய்வீக தேர்வு என்று பொருள்.

அப் 9:17-19 - "அப்பொழுது அனனியா போய், வீட்டுக்குள் பிரவேசித்து, அவன்மேல் கையை வைத்து: சகோதரனாகிய சவுலே, நீ வந்தவழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும்படிக்கும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார் என்றான். உடனே அவன் கண்களிலிருந்து மீன் செதில்கள் போன்றவைகள் விழுந்தது. அவன் பார்வையடைந்து, எழுந்திருந்து, ஞானஸ்நானம் பெற்றான். பின்பு அவன் போஜனம்பண்ணிப் பலப்பட்டான். சவுல் தமஸ்குவிலுள்ள சீஷருடனே சிலநாள் இருந்து,"

இந்த முக்கியமான பணிக்காக ஆதிசபையிலுள்ள எளிமையான அங்கத்தினராகிய அனனியாவை ஆண்டவர் அனுப்பினார். அனனியா ஒரு

அப்போஸ்தலன் அல்ல, ஆதி சபையில் அவர் ஒரு மூப்பராகவோ, உதவி மூப்பராகவோ இருந்திருக்கலாம். ஆனாலும், நமக்கு அது தெளிவாக குறிப்பிடவில்லை. ஆனால் தேவனுடைய ஊழியத்தை மனப்பூர்வமாக உடனடியாக நிறைவேற்றக்கூடிய ஒரு சீஷனாக இருந்தார். மனப்பூர்வமான இருதயத்தோடு தாழ்மையான சிந்தை கொண்டிருக்கக்கூடிய யாவரையும், ஆண்டவர் தம்முடைய பணிக்காக பயன்படுத்துவதைக் காணலாம்.

யூதாசுக்கு பதிலாக நம்முடைய ஆண்டவர் தர்சு பட்டணத்தானாகிய சவுலை அப்போஸ்தலனாக தேர்வு செய்தார் - மிக உற்சாகமாக இயேசுவின் சீஷர்களை அடித்து துன்புறுத்தி காவலில் போட்டு விட்ட சவுல், "தர்சு பட்டணத்து சவுல் ஆண்டவராம் இயேசுவுக்கும், அவருடைய சீஷருக்கும் கசப்பான எதிரியாக இருந்தபோதிலும், தேவனுக்கு பக்தி வைராக்கியம் உள்ள ஒரு ஊழியக்காரனாக சத்தியத்திற்காக பக்தி வைராக்கியத்தோடு செயல்பட்டார்" என்று சகோதரர் ரஸல் குறிப்பிடுகிறார். (R2968)

"தர்சு பட்டணத்து சவுல் நூறு சதவிகிதம் தவறு செய்தாலும், நூறு சதவிகிதம் உண்மையுள்ளவராகக் காணப்பட்டார்" என்று ஒரு சகோதரன் தன் பிரசங்கத்தில் குறிப்பிடுகிறார். தேவனை உண்மையோடு சேவிக்க வேண்டும் என்ற நேர்மையான இருதயத்தினிமித்தம் அவர் உடனடியாக ஆண்டவரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்திருந்தார். அப். 9:20 - "தாமதமின்றி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான்."

"குறிப்பாக சவுல் பிறப்பிலும், கல்வி ஞானத்திலும், ஒழுக்கத்திலும் தேவனுடைய பணி செய்வதற்கு பொருத்தமுள்ளவராக இருந்ததினால், தேவன் தமக்காக அவரை தேர்வு செய்து கொண்டார். அவரால் தேர்வு செய்யப்பட்ட அந்த பாத்திரம் மிகப் பெரிய பொறுப்புகளை உடையதாக இருந்தது. அந்த பாத்திரம் தெய்வீக செய்திகளான அன்பையும், இரக்கத்தையும் சுமந்து செல்ல வேண்டியதாய் இருந்தது. இப்படியாக சபையின் ஒவ்வொரு அங்கத்தினரும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். நாமும் பாத்திரங்களாய் இருக்கிறோம். நம்முடைய மதிப்பும், நன்மையும், நம்முடைய ஆண்டவருடையதாய் இருக்கிறது. அவருக்கும் அவருடைய சபைக்கும் நாம் ஊழியக்காரர்கள்" என்று சகோதரர் ரஸல் கூறுகிறார். (R4356) 2 கொரி 4:7 - "இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்" என்று பவுலும் கூறுகிறார்.

**உபத்திரவங்களில் பாடநுபவித்தல்**

இயேசுவின் பூமிக்குரிய ஊழியம் முடிவடையும் போது, அவர் காட்டிக் கொடுக்கப்படக் கூடிய அந்த இரவில் அந்த மேலறை வீட்டில் இருந்து கெத்சமனே தோட்டத்துக்குச் செல்லும் வழியில், இயேசு தன்னைக் குறித்து சிந்திப்பதற்குப் பதிலாக தம்முடைய சீஷர்களைக் குறித்து சிந்தித்து அவர்களுக்காக ஜெபித்தார்.

யோவ 17:6-23 - "நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள். நீர் எனக்குத் தந்தவைகளெல்லாம் உம்மாலே உண்டாயினவென்று இப்பொழுது அறிந்திருக்கிறார்கள். நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்; அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு, நான் உம்மிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேன் என்று நிச்சயமாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள். நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே. என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள், உம்முடையவைகள் என்னுடையவைகள்; அவர்களில் நான் மகிமைப்பட்டிருக்கிறேன். நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும். நான் அவர்களுடனேகூட உலகத்திலிருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொண்டேன்; நீர் எனக்குத் தந்தவர்களைக் காத்துக் கொண்டுவந்தேன்; வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, கேட்டின் மகன் கெட்டுப்போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை. இப்பொழுது நான் உம்மிடத்திற்கு வருகிறேன்; அவர்கள் என் சந்தோஷத்தை நிறைவாய் அடையும்படி உலகத்தில் இருக்கையில் இவைகளைச் சொல்லுகிறேன். நான் உம்முடைய வார்த்தையை

அவர்களுக்குக் கொடுத்தேன்; நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது. நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். நான் உலகத்தானனல லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல. உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம். நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன். அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன். நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன் ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்."

முடிவாக நம்முடைய ஆண்டவர் அவருக்கும் அவருடைய சீஷர்களுக்கும் ஊழியம் செய்வதற்கான வாய்ப்புகளைக் கொடுக்கும் போது, உடனடியாக அதை பயன்படுத்திக் கொள்ளுவோம்.

முதலில் நமக்கு இயலாததாக தோன்றினாலும் அல்லது முடியாததாகத் தோன்றினாலும் இயேசுவுக்கும் அவருடைய சீஷர்களுக்கும் எந்த வழியிலும் சகலவிதமான அன்போடும் உறுதியோடும் நாம் இறுதிவரைக்கும் பணி செய்ய வேண்டும். (மகதலேனா மரியாள் போல)

மற்றவர்களுக்கு முன்பாக வசனங்களிலுள்ள கேள்விகளைத் துணிவோடு கேட்கலாம். (தோமாவைப் போல) ஒருவேளை சில காரியங்களில் நாம் தவறாகப் பின்பற்றினாலோ அல்லது சரியாக பின்பற்றாமல் இருந்தாலோ, ஆண்டவர் நம்முடைய கண்களைத் திறந்து வசனங்களின் மூலமாக நம்முடைய தவறுகளை எடுத்துரைப்பார். அப்பொழுது உடனடியாக வசனங்களுக்கு உண்மையோடு கீழ்ப்படிந்து, ஆண்டவரை மகிமைப்படுத்தி அவருக்குப் பணி செய்வோம். (சவுலைப் போல)

நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுவதினிமித்தம் உபத்திரவங்களினால் பாடு அனுபவிக்கும்போது, நமக்காக இயேசுவும் உணருகிறார் என்பதை நினைவில் கொள்ளுவோம்.

வரக்கூடிய நினைவு கூறுதலின் நாளுக்கென்று நம்முடைய இருதயங்களையும், சிந்தனைகளையும் ஆயத்தம் பண்ணிக் கொண்டிருக்கும் நாம் இயேசு தம்முடைய சகல சீஷர்களோடு - அவருடைய பூமிக்குரிய ஊழியத்திலிருந்து துவங்கி அவருடைய சரீர அங்கத்தினர்களின் கடைசி நபருடைய விசுவாசமுள்ள மரணம் வரைக்கும் அவர் கொண்டிருக்கும் ஐக்கியத்தை நாம் ஆராய்ச்சி செய்த இந்த வசனங்கள் நம்முடைய புரிந்துகொள்ளுதலை அதிகரிக்கும்படி உதவியாக இருக்கும்.

# மனவுருக்கத்தின் அற்புதங்கள்



"அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி," - மத் 9:36.

எந்த ஒரு மனித இனத்திற்குள்ளும், அன்பும், இரக்கமும் இருக்குமேயானால் அபிஷேகம் பண்ணப்பட்ட நம்முடைய ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவினிடத்தில் அதிகமதிகமாய் தங்கியிருக்குமே. பரிபூரண பாவமற்ற தேவ குமாரனுடைய இருதயம் நம்முடைய சர்வ வல்லமையுள்ள தந்தையின் இருதயத்தின் பிரதிபலிப்பை எதிரொலிக்கிறது. (எபி 1:3)

தவித்து கொண்டிருக்கும் இந்த மனுக்குலத்தின் மத்தியில் நம்முடைய ஆண்டவர் நடப்பித்த எண்ணிக்கையில் அடங்காத சுகமளிக்கும் அற்புதங்கள் மீண்டும் மீண்டுமாக அவருக்குள் இருந்த அன்பையும், இரக்கத்தையும் வெளிப் படுத்தியது. பொதுவாக எல்லா அற்புதங்களும் ஓய்வு நாளில் நடப்பிக்கப்பட்டது. ஒருவேளை ஆயிரவருட ஆட்சியான மகா பெரிய ஓய்வு நாளில் மனரீதியானதும், உடல் ரீதியான சகல மனித வியாதிகளும் குணப்படுத்தப்படும் என்பதை காட்டுவதற்காக இயேசு இவ்வாறு செய்திருக்க வேண்டும்.

### அவர் குணமளிக்க வந்தார்

இந்த உலக மனுக்குலம் தன்னுடைய தந்தையாகிய ஆதாமின் மூலம் பாவநிலையில் தள்ளப்பட்டு சுயநலம், பெருமை மற்றும் அநீதியான கிரியைகளின் சகல காரியங்களினாலும் சீரழிந்து வேதனைகளையும், பாடுகளையும், உபத்திர வங்களையும் மற்றும் மரணத்தையும் சுதந்தரித்தார். உளையான சேற்றிலிருந்து வெளியே வர முடியாத மனுக்குலத்தின் இயலாமையினால் தொடப்பட்ட நம்முடைய ஆண்டவராம் இயேசு, ஆதாமையும் அவருடைய சந்ததியையும் மீட்பதற்காக ஈடுபலி கொடுப்பதற்காக இந்த பூமிக்கு வந்தார். தம்மை பலி செலுத்த வந்த இயேசு, பாவமுள்ள மனித நிலையின் உணர்வுகளைப் பெற்று கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார். தனிப்பட்ட முறையில் எல்லாவிதமான வேதனைகளையும் உணர்ந்தார். மனவேதனையோடு இருப்பவர்களின் ஏக்கங்களையும் உதவிக்காக அவர்கள் கதறல்களையும் அவர் கேட்டார். இயேசு ஜனங்களின் வேதனைகளையும், துக்கங்களையும், துன்பங்களையும் சுமந்தார். அவர்களுடைய அக்கிரமத்தினிமித்தம் நொறுக்கப்பட்டார், அவர்களுடைய இருதயங்களின் வேதனைகளால் அசைக்கப்பட்டவராய் அவர்களுடைய ஆவியை சொஸ்தப்படுத்தி உடல் ரீதியான குறைப்பாடுகளைக் குணமளித்தார். (ஏசாயா 53:3-5)

மோசமாக விழுந்துபோன அநேக தனிப்பட்ட நபர்களிடத்தில் இயேசுவின் செயல்பாடானது, அவர்களின் வாழ்க்கையில் எவ்வளவு கீழ்த்தரமான மாம்சீக பெலவீனங்கள் இருந்தாலும், அறியாமையில் அவர்கள் மூழ்கியிருந்தாலும் அதைக் குறித்து அவர் கவலைப்படாமல், அவர்களை மீட்டு சொஸ்தமாக்கு வதற்குப் பாத்திரமாக எண்ணினார்.

அவர்கள் வேசியாக இருந்தாலும் சரி, கொடூரமாக வரி வசூலிப்பவராக இருந்தாலும் சரி, பாவமுள்ள மீனவரானாலும் சரி இயேசுவின் உண்மையான இரக்கமானது அவர்கள் அனைவரையும் சொஸ்தப்படுத்தியது. பாவமானது பாவியை விட்டு என்றும் பிரிக்கமுடியாத பட்சத்தில் அல்லது மரணத்திற்கு உண்டான பாவத்தை நடப்பிக்கப்படும்போது, இயேசுவின் இரக்கமான அன்பும், மன்னிப்பும் அந்த பாவியினிடத்திலிருந்து இயேசுவிடம் திரும்பி வருவதினால் அவர்கள் இரண்டாம் மரணத்திற்கு உரியவர்களாவார்கள். (எபிரெயர் 6:4-6) இயேசு பிதாவினுடைய இரக்கத்தை நடைமுறைப்படுத்துவது மட்டுமல்ல, தேவனுடைய இராஜ்யத்தில் செயல்படக் கூடிய தேவ வல்லமையையும் வெளிப்படுத்த விரும்பினார். மேலும் மேசியாவாக அவருடைய பணியையும், தேவ குமாரன் என்ற அடையாளத்தையும் தம்முடைய சீஷர்களிடத்தில் உறுதிப்படுத்தி அவர்களுக்குள் இருக்கும் விசுவாசத்தைப் பலப்படுத்தினார்.

### நெரிந்த நாணலை அவர் முறிப்பதில்லை

இயேசு வியாதியஸ்தரைக் குணப்படுத்து கையில், "அவர் நெரிந்தநாணலை முறியாமலும், மங்கியெரிகிற திரியை அணையாமலும், நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார்." (மத் 12:17-21) என்று ஏசாயாவினால் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றத் துவங்கினார்.

இயேசு தேவனுடைய சிந்தையோடு தொடர்பு வைத்தவராக மனுஷ வாழ்வுக்குரிய மதிப்பை தம்முடைய இருதயத்தில் கொண்டிருந்தார். "நெரிந்த

நாணல்களுக்காக" அவர் தம்முடைய இரக்கத்தைக் காட்டினார். தேவனை குறித்தும் அவருடைய வாக்குத்தத்தங்களைக் குறித்தும் சந்தேகம் உள்ளவர்களின் குறைப்பாடுகளையும் அவர் சொஸ்தப்படுத்தினார். சீர்ப்பொருந்த முடியாத அளவுக்கு ஒருவருடைய வாழ்க்கை நொறுங்கியிருந்தாலும், அவர்களுடைய வாழ்க்கையை மீண்டும் சீர்ப்பொருத்தினார். தேவனிடத்தில் ஒரு, "பொறியளவு" விசுவாசம் காணப்பட்டால், அது கொழுந்துவிட்டு எரியத்தக்கதாக ஊக்குவிக்கப்பட வேண்டும். இயேசு தம்முடைய அற்புதங்களை நடப்பிக்கையில் இப்படிப்பட்ட ஒரு விசுவாசத்தை எதிர்பார்த்தார். அவரை நம்பினவர்களை அவர் சந்தித்தபோது, அவர் ஆழமாக தொடப்பட்டார். கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக இருக்கக்கூடிய நாமும் மற்றவர்களிடத்தில் துளி அளவு விசுவாசத்தைக் காணும்பொழுது அவர்கள் மேல் அன்பையும், இரக்கத்தையும் வெளிப்படுத்தக்கூடிய சிந்தையை பெற்றிருக்க வேண்டும். (1 கொரி 12:12)

**ஒரு மனுஷனுடைய மதிப்பு**

இயேசு ஒரு மனுஷனுடைய வாழ்க்கையின் மதிப்பை புரிய வைக்க முயற்சித்தார். மத் 12:11,12 "அதற்கு அவர்: உங்களில் எந்த மனுஷனுக்காகிலும் ஒரு ஆடு இருந்து, அது ஓய்வுநாளில் குழியிலே விழுந்தால், அதைப் பிடித்துத் தூக்கிவிடமாட்டானோ? ஆட்டைப்பார்க்கிலும் மனுஷனானவன் எவ்வளவோ விசேஷித்திருக்கிறான்! ஆதலால், ஓய்வுநாளிலே நன்மைசெய்வது நியாயந்தான் என்று சொன்னார்" என்று இயேசு கேள்வி எழுப்பினார். அன்பானது நீதியோடு சமநிலை கொண்டிருக்க வேண்டும் என்று இயேசு காட்டினார்.

தவித்து நிற்கும் மனுக்குலத்தை இயேசு இரக்கத்தோடு கண்ணோக்கினார். இராஜ்யத்தில் இவர்கள் அனைவரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதை அறிந்திருந்தார் (எபேசியர் 1:10). மத் 8:1-3 வசனங்களில் காணப்படும் குஷ்டரோகி பாவமுள்ள மனித நிலையை காட்டுகிறது. அவன் தன்னுடைய நிலையிலிருந்து சொஸ்தமாக்கப்படுவதற்கு இயேசுவிடம் மன்றாடினான். அந்த குஷ்டரோகிக்கு இயேசுவின் சுகமளிக்கும் வல்லமையைக் குறித்த அறிவையும், விசுவாசத்தையும் பெற்றிருந்தான். அவன் பெற்றிருந்த அறிவுக்கும் விசுவாசத்திற்கும் ஏற்றபடி செயல்பட்டு அவன் நம்பிக்கையின் பரிசாக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டான். மரணத்துக்கு ஏதுவான கொடூரமான வியாதியிலிருந்து அவன் சுத்திகரிக்கப்பட்டதுபோல, மனுக்குலமும் தன்னுடைய கொடூரமான பாவ நிலையிலிருந்து கிறிஸ்துவின் பூமிக்குரிய இராஜ்யத்தில் விடுப்படும். (வெளி21:4)

பிச்சைகேட்டுக் கொண்டிருந்த பிறவிக் குருடனும் கூட இயேசுவின் இரக்கத்தையும் அன்பையும் பெறுவதற்கு பாத்திரராய் இருந்தார். (யோ 9 அதிகாரம்) அவரும் கூட குருடாய் இருக்கும் இந்த மனுக்குலத்திற்கு அடையாளமாக காணப்படுகிறார். இயேசு தம்முடைய உமிழ்நீரினால் சேறுண்டாக்கி அந்த மனுஷனுடைய கண்களில் பூசினதுபோல, தேவனுடைய இராஜ்யத்தில் இயேசுவின் ஒவ்வொரு வார்த்தைகளினால் பார்வையற்ற மனுக்குலம் வெளிச்சத்தை காண்பார்கள். எவர்களுடைய விசுவாசம் பரம வைத்தியரின் வல்லமையை அதிகமாக நம்புகிறதோ, அவர்களின் இருதயத்தின் விருப்பத்தின்படி அவர்களுக்கு சொஸ்தமளிக்கப்பட்டு இறுதியில் அவர்களுடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படும். சந்தேகத்திற்கு இடமின்றி இந்த சின்ன சின்ன அற்புதங்கள் தேவனுடைய திட்டத்தின் வெளிச்சத்தில் இயேசுவுக்கு மிகப் பெரிய அர்த்தத்தைக் கொடுக்கக்கூடியதாய் இருந்தது.

இயேசு சந்திரரோகியான ஒரு சிறுவனை சொஸ்தப்படுத்தினபோது, மற்றொரு நிகழ்வு நடைப்பெற்றது. "ஆண்டவரே, என் மகனுக்கு இரங்கும், அவன் சந்திரரோகியாய்க் கொடிய வேதனைப்படுகிறான்; அடிக்கடி தீயிலும், அடிக்கடி ஜலத்திலும் விழுகிறான்." பிசாசினால் அந்த சிறுவனுக்கு மனச்சிதைவு ஏற்பட்டு இருந்தது. அவன் அந்த பிசாசினால் இயக்கப்படும்பொழுது, தன்னுடைய இயல்பான மனித செயல்பாடுகளுக்கு எதிராக அதிகமாக உபத்திரவப்பட்டு தன்னைத்தானே கொடூரமாக கேடு விளைவிக்கும்படி சேதப்படுத்திக் கொண்டிருந்தான். கடந்த யுகங்களில் எத்தனை ஜனங்கள் இதற்கு ஒப்பான பாதிப்பை அடைந்திருப்பார்கள்? இந்த சிறியவனுடைய விஷயத்தில் இயேசு பிசாசைத் துரத்தி அவனுடைய இளமைப் பிராயத்தின் தீமையின் வல்லமையை முடிவுக்குக் கொண்டு வந்தார். தேவனுடைய வல்லமையை செயல்படுத்துபவர்களுக்கு இது எவ்வளவு எளிமையாய் இருக்கிறது. இயேசு தம்முடைய முதல் வருகையின் போது, சின்ன சின்ன மாதிரிகளுக்காக மட்டுமே அவர் வல்லமையைப் பயன்படுத்தினார். வருங்காலத்தில் முழு மகிமையோடு தேவனுடைய வல்லமை செயல்பட்டு சந்திரரோகத்தில் அவதிப்பட்டுக்

கொண்டிருக்கும் முழு உலகத்தையும் சொஸ்தமாக்கி, தங்களையே சீரழிக்கக்கூடிய பாவத்திலிருந்து விடுவிப்பார்.

கப்பர்நகூமில் உள்ள அந்த இராஜாவின் மனுஷன் மரணப்படுக்கையில் உள்ள தன்னுடைய குமாரனுடைய ஜீவனுக்காக மன்றாடினபோது, அந்த மனுஷனுடைய இருதயத்தில் காணப்பட்ட உண்மையான விசுவாசம் மற்றும் விருப்பத்திற்கு ஏற்றப்படி இயேசு பலனளித்தது போல, தேவையின் போது நம்மில் சிலர் தேவனிடத்தில் உதவிக்காக கதறியிருப்போம். (யோவ 4:49, 50) மீண்டும் மீண்டுமாக இயேசுவின் சுகமளிக்கும் வரங்களையும் அன்பான இருதயத்தையும் தேடி அநேக தவித்த ஆத்துமாக்கள் வந்தது. ஆனால் ஒவ்வொரு முறையும் அவருக்குள் இருந்த வல்லமை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்ததை ஜனங்கள் அறியாதிருந்தார்கள். (மாற்கு 5:30; லூக் 6:19) முடிவில்லா மணி நேரங்கள் இயேசு போதித்ததினால் அவர் மிகுந்த சோர்வடைந்தவராய் காணப்பட்டாலும், ஒவ்வொரு அற்புதத்தை நடப்பிக்கும்போது, அதிகமான பலத்தை இழந்து கொண்டு இருந்தார். தம்மை பலி செலுத்துவதில் எவ்வளவு சுயநலம் அற்றவராய் காணப்பட்டார். மனுக்குலத்திற்கு ஏற்ற இரட்சகராக தம்மை முழுமையாக அர்ப்பணித்தார். பாவம், வியாதி மற்றும் மரணத்தின் கட்டுகளிலிருந்து மனுக்குலத்தை விடுவிக்க இயேசு எவ்வளவு ஏங்கியிருப்பார்.

### வருங்காலத்தில் மாறக்கூடிய ஜனங்களாக அவர்களை காணவேண்டும்

இயேசுவுக்கு முன் நிறுத்தப்பட்ட சாட்சியினிமித்தமும் தம்முடைய பிதாவின் சித்தம் நிறைவேறுவதற்கு அவர் செய்த அர்ப்பணிப்பினிமித்தமும் எல்லா உபத்திரவங்களையும் மனப்பூர்வமாக சகிக்க துணிந்தார். நம்முடைய ஆண்டவரை போல் நாம் எந்த அளவில் காணப்படுகிறோம்? பாடநுபவிக்கிற மனுக்குலத்தின் சகல குடும்பங்களையும் ஆசீர்வதிக்கக்கூடிய கிறிஸ்துவாகிய மாபெரும் வைத்தியருக்கு பங்காளிகளாவதற்கு நம்முடைய நேரம், தாலந்துகள், செல்வாக்கு மற்றும் சகலத்தையும் பலி செலுத்த மனப்பூர்வமான மன நிலையைப் பெற்றிருக்கிறோமா? (கலாத்தியர் 3:8, 9) ஜனங்கள் இப்பொழுது இருக்கிற வண்ணமாக நாம் அவர்களைக் காண்கிறோமா? - உடல் ரீதியான வியாதிகளை மட்டுமல்ல பாவத்தின் விளைவாக அவர்கள் பெற்றிருக்கும் மனரீதியான வியாதிகளோடும், அவர்களை காண்கிறோமா? அல்லது தேவனுடைய இராஜ்யத்தில் அவர்கள் சீர்ப்பொருந்தப்பட்ட வண்ணமாக அவர்களை காண்கிறோமா? இயேசு அவ்வாறாகவே ஒவ்வொருவரையும் கண்டார். அவர் நடத்திட்ட அற்புதங்களின் மூலமாக வரக்கூடிய நாட்களில் மனுக்குலத்தின் சாபத்தை நித்தியமாக நீக்கப்படும் என்ற திருப்தியை அவரால் உணர முடிந்தது.

தேவனுடைய இராஜ்யத்தில் சீர்ப் பொருந்தப்பட்டவர்களாக ஜனங்களை பார்ப்பதற்கு காலமும் முயற்சிகளும் தேவைப்படுகிறது. ஆகவே சரியான நோக்கத்தில் ஜனங்களை புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில், அன்பின் நான்கு படி நிலைகளில் வளர்ச்சியடைவதற்கு இக்காரியம் நமக்கு மிக அவசியம். (vol. 6 page 369 in English) இயேசுவால் இதை செய்ய முடிந்தது. வியாதிபட்ட ஒரு சரீரத்தை அவர் கண்டாலும் சரி, மனநிலையில் வியாதிபட்டவர்களைக் கண்டாலும் சரி, தேவனுடைய இராஜ்யத்தில் சீர்ப்பொருந்தப்பட்டவர்களாக அவர்களை காண்பதினிமித்தமாக அவர்களின் வேதனைகளையும் பாடுகளையும் உபத்திரவங்களையும் நீக்கி அவர்களை மீட்பதற்கு அவர் முயற்சித்தார். ஒருவேளை தம்முடைய சரீரத்தை சிலுவையில் ஆணி அடித்த ரோம போர்ச் சேவகர்களையும் இப்படியாகவே அவர் கண்ணோக்கியிருக்க வேண்டும். தேவனுடைய இராஜ்யத்தில் அவர்கள் சீர்ப் பொருந்தப்பட்டவர்களாக இருக்கும் நிலையில் தேவனுடைய குமாரனை சிலுவையில் அறைவதற்கு தாங்களும் ஒரு கருவிகளாக இருந்தார்கள் என்ற தங்களுடைய கிரியைகளை எண்ணுகையில் அவர்கள் எப்படிப்பட்ட உணர்வை பெறுவார்கள்? அவர்களுக்கு ஏற்படும் அந்த குற்ற உணர்வுள்ள மனப்பான்மை தங்களை தாழ்த்தி, தங்களுடைய சிந்தையும் மனதும் சீர்ப் பொருந்துவதற்கு வழி வகுத்து உண்மையான மன்னிப்பு இன்னதென்பதை அவர்கள் மனதார உணர்ந்து கொள்வார்கள். (எபிரெயர் 12:2-4)

### புயலை அமர்த்துவது

அப்போஸ்தலர்களின் நன்மைக்காக இயேசு கலிலேயாவின் கடலில் ஒரு அற்புதத்தை நிகழ்த்தின காரியத்தை பார்க்கலாம். மிகப் பெரிய புயல் ஒன்று எழும்பி இயேசுவும், அப்போஸ்தலர்களும் இருந்த படகை கவிழ்க்க பார்த்தது. ஒருவேளை இயேசுவையும் சீஷர்களையும் அழிக்க வேண்டும் என்று சாத்தான் திட்டமிட்டிருக்கலாம். அப்போஸ்தலர்கள் தங்களுடைய ஜீவனை எண்ணி பயந்தார்கள்.

இயேசுவோ, தம்முடைய ஊழியத்தை முடித்து மிகுந்த சோர்வினால் அயர்ந்த நித்திரை பண்ணிக் கொண்டிருந்தார். (மாற்கு 4:37-41)

இயேசு நித்திரையை விட்டு எழுந்து அப்போஸ்தலரின் குறைவான விசுவாசத்திற்காக அவர்களை இலேசாகக் கடிந்து கொண்டு சீறி எழும்பி வந்த பயமுறுத்தும் அலைகளை பரிசுத்தமான தேவனுடைய வல்லமையை கொண்டு அமைதிப்படுத்தினார். எப்படிப்பட்ட நிகரற்ற வல்லமை இயேசுவின் வழியாக செயல்பட்டது! எதிராளியாகிய சாத்தானுடைய மிகப் பெரிதான தீமையின் முயற்சிகள் - இயற்கையின் வல்லமையை கூட மேற்கொள்ளுவதற்கு செயல்பட்டது. உண்மையில் அதே வல்லமை நம்மையும் கண்காணிக்கிறது. தெய்வீக வல்லமை இயற்கையின் பலத்தை அனுமதித்து நம்முடைய அழிவிற்குரிய ஜீவனை போக்குவதற்கு அனுமதித்தால் மட்டுமே இக்காரியங்கள் நடைப்பெறும். ஒரு வல்லமையுள்ள புயலை அமர்த்துவதற்கு உண்டான வல்லமை இயேசுவினிடத்தில் காணப்பட்டால் நம்முடைய வாழ்க்கையில் வீசும் கடுமையான புயலை அமர்த்துவது சாத்தியமில்லையா? ஆனால் நமக்குள் காணப்படும் சிறந்த ஆவிக்குரிய விருப்பங்களுக்கு ஏற்றவாறு இயேசு செயல்படுவார். " அதற்கு அவர்: அற்பவிசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள் என்று சொல்லி; எழுந்து, காற்றையும் கடலையும் அதட்டினார். உடனே, மிகுந்த அமைதல் உண்டாயிற்று" (சங்கீதம் 46:1-7; 91:1-16) என்ற நம்முடைய ஆண்டவருடைய வார்த்தைகள் எப்பொழுதும் நம்முடைய காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறதா?

"தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்." இதற்கு முன்னதாக இயேசு தேவன் மேல் விசுவாசம் உள்ள அப்போஸ்தலர்களை மிக இரக்கத்தோடு பார்த்தார். அவர்களுடைய விசுவாசம் வாழ்க்கையில் ஏற்படும் சோதனையின் மூலமாக தெய்வீக வழிநடத்துதலின் கீழ் அவர்களை தேவனுடைய புத்திரர்களாக வளர்ச்சியடைய செய்யும் என்று அவர் அறிந்திருந்தார். (1 பேதுரு 1:7) அவர்களுக்கு இருந்த உறுதியான விசுவாசமானது, எல்லா பயங்களையும் மேற்கொண்டு இந்த உலகத்தின் பாதிப்புகளை பொருட்படுத்தாமல் வெற்றியடைய செய்யும் என்று காலப்போக்கில் அவர்கள் கற்றுக்கொள்வார்கள். ஜீவ கிரீடத்தை ஜெயிப்பதற்கு தடுக்கலின் கருவியாக சாத்தான் பயத்தை பயன்படுத்துகிறார். (2 பேதுரு 1:4; ரோமர் 8:32) அவர்களுக்குள் வளர்ச்சியடைந்த விசுவாசமானது, எப்படிப்பட்ட புயலிலும் தேவன் அவர்களுக்கு தந்த விலையேறப் பெற்ற வாக்குத்தத்தங்களை உறுதியாக பற்றிக் கொள்ள வழிநடத்தியது. ஆவிக்குரிய வெற்றியைப் பெறுவதற்கு, தேவன் மேலும், அவருடைய வார்த்தையின் வல்லமையின் மேலும் உறுதியான விசுவாசம் வைப்பது மிக அவசியம்.

**மனித இரக்கம்**

நம்முடைய ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவை தவிர எந்த ஒரு மனுஷனிடத்திலும் அன்பும், இரக்கமும் இவ்வளவு அபரிவிதமாய் காணப்பட்டதில்லை. இவரே இரக்கத்திற்கும், மனவுருக்கத்திற்கும், நீதிக்கும் மத்தியஸ்தராக இருந்து தேவனுடைய இராஜ்யத்தில் இப்பொறுப்பை செயல்படுத்த நம்மை அன்புடன் அழைத்து, தேவனுடைய வல்லமையினால் அற்புதவிதமாய் நம்மை மாற்றுகிறார். பூமியிலுள்ள முழு குடும்பங்களையும் குணப்படுத்தி ஆசீர்வதிப்பதற்கான ஒரு மகிமையுள்ள வாய்ப்பை அவரோடு கூட பங்குப் பெறுவதற்கு நம்மை அழைத்திருக்கிறார். ஆனால் அதற்கு முன்னதாக தேவனுடைய பரிசுத்த ஆவியைப் பெற்று, ஆண்டவருடைய சிந்தையையும், மனநிலையையும் நமக்குள் வளர்த்துக் கொள்ள வேண்டும். நாமும் கூட உபத்திரவப்படும் ஜனங்களை உணர்வோடு கண்டு இராஜ்யத்தில் அவர்கள் சுதந்தரிக்கக்கூடிய நிலையை நாம் காண வேண்டும். அப்பொழுது நீதியின் சூரியனுடைய கதிர்கள் எல்லா இடங்களிலும் வீசப்பட்டு ஆரோக்கியத்தை அருளும். ஆவியும் மணவாட்டியும் வா என்ற அழைப்பை விடுத்து எப்படிப்பட்ட வியக்கத்தக்க அற்புதத்தை நிகழ்த்துவார்கள்! முழு மனுக்குலமும் பாவம் மற்றும் மரணத்திலிருந்து குணமாக்கப்பட்டு தேவன் முன்னதாக வாக்களித்த பரிபூரணத்திற்கு சீர்பொருந்தப்படுவார்கள். (மல் 4:2; மத் 13:43; வெளி 22:17; எபே 1:10)

இறுமாப்புள்ள மனுஷரும், பரிசுத்தமான குழந்தைகளும்

# யூத மத தலைவர்கள் மற்றும் குழந்தைகள்



"மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை." **மத் 23:13.**

**Adam Goodman**

இயேசு தெய்வீக திட்டத்தின்படி நற்கிரியைக்கும், இரக்கத்திற்கும், அன்புக்கும் ஊழியக்காரராக வந்தார். எல்லாரிடத்திலும் அன்பு செலுத்தவும், தேவனுக்கேற்ற ஊழியம் செய்வதுமே அவருடைய நற்செய்தியாக இருந்தது. அவர் ஒரு தாழ்மையுள்ள ஊழியக்காரராக வந்தார். அவருடைய செய்திகள் இந்த உலகத்தின் ஆவிக்கு எதிரிடையாக இருந்தது. இக்காரியம் பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டு நம்முடைய ஆண்டவரின் ஊழியத்தின்போது, மேற்கோள் காட்டப்பட்டது.

"ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அவர்களிடத்தில் நிறைவேறுகிறது; அதாவது: காதாரக்கேட்டும் உணராதிருப்பீர்கள்; கண்ணாரக்கண்டும் அறியாதிருப்பீர்கள். இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படியாக, அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்பதே." (ஏசா 6:9, 10)

இங்கு சொல்லப்பட்ட வகுப்பினருக்கு ஆண்டவர் முன் வைத்த சத்தியத்தை புரிந்துகொள்ள முடியவில்லை. இதற்கு எதிரிடையாக சீஷர்களுக்கு மட்டுமே, "பரலோக இராஜ்யத்தின் இரகசியங்களை அறிவதற்குரிய வாய்ப்பு கொடுக்கப்பட்டிருந்தது." (மத் 13:11) இந்த செய்தியை வெளிப்படுத்துவதற்கு பிதாவாகிய தேவன் கிறிஸ்துவின் வழியாக, "சிறு பிள்ளைகளுக்கு" அனுமதித்து, "ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும்" மறைத்தார். (லூக் 10:21) தேவனுடைய உண்மையுள்ள ஊழியக்காரர்கள் எல்லா வழிகளிலும் தேவனுடைய வழி நடத்துதலையும், அவர் உணர்த்தும் திருத்தங்களையும் எப்பொழுதும் ஏற்றுக்கொண்டு தெய்வீக திட்டத்திற்கு ஏற்றவாறு நம்முடைய வாழ்க்கைகள் மாற்றம் அடைய அனுமதிக்க வேண்டும். சுருக்கமாக சொல்லப்போனால், நாம் "ஞானிகளும், கல்விமான்களுடைய" வகுப்பாராக இராதபடிக்கு அவர்கள் சத்தியத்தைக் கேட்டாலும் உணர்ந்துக்கொள்ள முடியாது." "சிறு பிள்ளையின்" வகுப்பாராக இருக்க வேண்டும்.

கிறிஸ்துவின் செய்தியைக் கேட்க மனதில்லாதவர்களின் குணலட்சணங்களையும், நோக்கங்களையும் உடையவர்கள் அவருடைய பிள்ளைகளாக இருப்பதற்கு வாய்ப்பில்லை.

**பரிசேயர், சதுசேயர்களுடைய புளித்த மாவு**

பரிசேயர் மற்றும் சதுசேயரின் புளித்த மாவைக் குறித்து வெளிப்படையாக எதிர்த்துப் பேசினார். (மத் 16:11; 23:3) உலகத்தின் பார்வையிலிருந்தும், இந்த இரண்டு வகுப்பாரின் குறுகிய மனப்பான்மையினாலும், இவ்வாறு விமர்சிக்கப்பட்டது. இந்த இரண்டு வகுப்பாருமே, இயேசு கிறிஸ்துவின் நேரடியான கண்டனத்திற்கு ஆளானார்கள். ஏனெனில், இவர்கள் மதத்தலைவர்கள் என்ற போர்வையை போர்த்தியிருந்தனர். மந்தைக்கு மாதிரியாக இருக்க வேண்டிய ஆவிக்குரிய தலைவர்கள் மனத்தாழ்மையும், ஊழியம் செய்யக்கூடிய மனப்பக்குவத்தையும் பெற்றிருக்க வேண்டும் என்பதே தேவனுடைய நோக்கமாக இருந்தது. (மீகா 7:14; 1பேதுரு 5:2, 3) இந்த யூதமதத் தலைவர்கள், மதத்தலைவர்களுக்குரிய நிலையை முற்றிலுமாக இழந்துவிட்டார்கள்.

**சதுசேயர்கள்**

இந்த இரண்டு மத வகுப்பினர்களில் சதுசேயர்கள், நீண்ட காலமாய் வாழ்ந்து வந்தனர். இவர்கள் எண்ணிக்கையில் வெகு சிலராக இருந்தாலும் இறுமாப்புள்ள ஆளுநர் வகுப்பாய் இருந்தார்கள். சதுசேயர் என்ற நாமம் இஸ்ரயேலின் இராஜாவாகிய தாவீதின் காலத்தில் பத்தாவது பிரதான ஆசாரியனாகிய சாதோக்கை குறிப்பிடுகிறது. சதுசேயர் என்ற பெயருக்கு "சாதோக்கின் வீடு" என்று பொருள். இப்படியாக இயேசுவின் நாட்களில் வாழ்ந்த சதுசேயர்கள்

பழங்காலத்து பிரதான ஆசாரியனின் வம்சாவழியை கொண்டிருந்தனர். இயேசுவின் முதல் வருகையின் காலத்தில் சதுசேயர்களே பிரதான ஆசாரியர்களாக செயல்பட்டனர். (அப் 5:17) இவர்கள் ஆலயத்திலுள்ள ஆராதனைகளையும், அதின் பண்டிகைகளையும் ஆட்சி செய்தனர்.

ரோமர்கள் இஸ்ரயேலை கைப்பற்றின பின், கிரேக்க பள்ளிகளும் ரோம தத்துவங்களும் அப்பகுதியில் ஸ்தாபிக்கப்பட்டது. இது அநேக யூதர்களை மத ரீதியாகவும், ஒழுக்க ரீதியாகவும் வழிதப்பிப்போக செய்தது. இப்படிப்பட்ட யூதர்கள் மத்தியில் சதுசேயர்களும் காணப்பட்டார்கள். அந்நேரத்தில் இயேசு இஸ்ரயேலில் போதித்துக் கொண்டிருக்கையில் சதுசேயர்கள் மோசேயின் ஆகமங்களை மட்டுமே வாசித்து வந்தனர். இவர்கள் மரித்தோரின் உயிர்த்தெழுதலையும், ஆவியைக் குறித்தும், தூதர்களைக் குறித்தும் நம்பிக்கையற்றவர்களாய் காணப்பட்டார்கள். (அப் 23:8) இவர்கள் ரோமர்களோடு அரசியல் ரீதியான வேலைகளை செய்து அவர்கள் தங்களுடைய சொத்துக்களை குவித்து ஜனங்கள் மேல் தங்களுடைய வல்லமையைப் பயன்படுத்தி அதிகாரம் செய்தார்கள்.

சதுசேயர்கள் தேவனை விசுவாசித்திருந்தாலும் அவரைவிட்டு வெகு தொலைவில் சென்றிருந்தார்கள். தேவன் மனுக்குலத்தோடு தொடர்புடையவர் என்பதை அறியாததினால், தங்கள் பாவத்திற்கேற்ற தெய்வீக தண்டனையை குறித்து பயப்படாமல் இருந்தார்கள். அவர்கள் ரோமர்களை திருப்திப்படுத்துவதில் பயந்திருந்தார்கள். தேவனிடத்தில் செலுத்தக்கூடிய அன்பையும், அவருடைய சித்தத்தை செய்யக்கூடிய விருப்பத்தையும் முற்றிலும் குலைத்து விட்டார்கள். அதற்கு பதிலாக, தங்களுடைய சுயநலத்திற்கு ஏற்றபடி நடந்து அதிகமான சொத்துக்களை சேர்த்தார்கள். அவர்கள் முழுமையாக உலகத்தின் காரியங்களில் தலையிட்டாலும், ஜனங்கள் மேல் அதிகாரம் செலுத்துவதற்கு ஆசாரியத்துவத்தை கையில் எடுத்தனர். இயேசு ஆலயத்தை சுத்திகரிக்கையில் சதுசேயர்களே மிகுந்த கோபம் கொண்டனர். ஆலயத்தில் போடப்பட்ட கடைகளினால் அவர்கள் அதிகமான இலாபம் சம்பாதித்துக் கொண்டிருந்தார்கள். இயேசுவின் புகழ் எங்கும் பரம்புவதைக் கண்டு சதுசேயர்கள் பயமடைந்தார்கள். இராஜரீகத்தைக் குறித்த அவருடைய கோரிக்கைகள் ரோமர்களின் கோபத்தை தூண்டக்கூடியதாய் இருந்தது. ஆயினும் நம்முடைய ஆண்டவர் மிகத் துல்லியமாக இதை குறித்து விமர்சித்தார். "இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்."

**பரிசேயர்கள்**

இந்த பரிசேயர்கள் புறஜாதி தத்துவ ஞானிகளின் ஏற்பாட்டினால் உருவானவர்கள். பரிசேயர் என்பதற்கு பிரிக்கப்பட்டவர்கள் என்று பொருள். புறஜாதி போதகங்களிலிருந்து பரிசேயர்கள் தங்களை எவ்வாறு பிரித்துக் கொண்டனர் என்று விவரிக்கிறது. மேலும் இவர்கள் பொதுவான யூதர்களைக் காட்டிலும் மேலானவர்களாக தங்களைக் காட்டிக் கொண்டனர். வேதாகம வரலாற்று ஆசிரியர்களாகிய பால் ஜான்சன், பரிசேயர்களின் பள்ளிகள் உருவான சம்பவங்களைக் குறித்து எழுதுகிறார். "கிரேக்க கல்விக்கு எதிரான யுத்தத்தில் சாந்தமுள்ள யூதர்கள் கிமு 2-ம் நூற்றாண்டின் முடிவில் கல்விக்காக தேசிய அமைப்பை உருவாக்க துவங்கினார்கள். பழமையான நியாயப்பிரமாணம் மறுப்பதிவு செய்யும் பள்ளிகளில் இப்படிப்பட்ட காரியங்கள் சேர்க்கப்பட்டு வந்தது. அதில் யூத சிறுவர்களுக்கு தோரா (வேதாகமத்தில் முதல் ஐந்து புத்தகங்கள்) கற்பிக்கப்பட்டது. இதை தொடர்ந்து அநேக தேவாலயங்கள் அதிக முக்கியத்துவத்தோடு உருவாக்கப்பட்டது. இந்த பரிசேயர்களின் பிறப்பின் ஏக்கத்தில் கல்வி மிகவும் ஆழமாக வேரூன்றப்பட்டு பிரபலமானது. காலபோக்கில் ரபிகள் எழும்பினார்கள். (அதை குறித்த போதகர்கள்) (A history of the Jews, Page 106, 1988 edition)

பரிசேயர்கள் ஒரு மதத்திலிருந்தும் ஒழுக்கமுள்ள ஒரு சமுதாயத்திலிருந்தும் உருவாக்கப்பட்டு வசனங்களையும் வாய் வழியாகச் சொல்லிவந்த பாரம்பரியத்தையும் அதோடு இணைத்து வந்தார்கள். யூத பாரம்பரிய பழக்கவழக்கத்தைக் காத்துக் கொண்டு, தேவனோடு விசேஷ ஐக்கியப்படுவதற்கு முயற்சித்தார்கள். பரிசேயர்களின் விசுவாசத்தை சதுசேயர்கள் அதிகமாக எதிர்த்தார்கள். ஏனெனில், சதுசேயர்கள் உயிர்த்தெழுதலிலும், தேவதூதர்களையும், தேவன் தம்முடைய ஜனங்களுக்காக கிரியை செய்வதையும் விசுவாசிக்கவில்லை. (அப் 23:8)

இந்த பரிசேயர்கள் தங்களுடைய இரண்டு ஸ்தாபர்களின் பெயர்களினால் இரண்டு பிரிவினர்களாகக் காணப்படுகிறார்கள். ஷமாய் (Shammai) என்ற ஒரு பிரிவினர் வளைந்து

கொடுக்காதவர்களும் மிகக் கொடுரமானவர்களாகவும் இருந்தனர். அதே நேரத்தில் ஹில்லல் (Hillel) என்ற வகுப்பார் மிக தயாளமாகவும் வெளிப்படையாகவும் காணப்பட்டார்கள். வரலாறு ஆதாரங்கள் கூறுகிறபடி பவுலின் ஆசிரியராகிய கமாலியேல், ஹில்லல் என்பவரின் பேரனாக குறிப்பிடுகிறார்கள். இயேசுவின் சில விமர்சனங்கள் மன்னிக்கக்கூடாத ஷமாய் பள்ளியின் மேல் அதிகமாக கவனம் செலுத்தியது. ஆயினும் இந்த இரண்டு வகுப்பினரும் முன்னோர்களின் பாரம்பரியத்தை கடைபிடித்தனர். இந்த பாரம்பரியம் உபவாசங்களையும், தசமபாகங்களையும் உள்ளடக்கி இருந்தது. (லூக் 18:12 சடங்காச்சாரமான கைகள் கழுவுதல் லூக் 11:38) ஓய்வு நாளை கடைப்பிடித்தல் போன்ற காரியங்களைக் கொண்டிருந்தது. (யோவ 9:16) ஹில்லல் பள்ளியில் ஓய்வின் நாளின் போது நற்கிரியைகள் செய்ய அனுமதிக்கப்பட்டது.

இயேசு போதிக்கையில் பரிசேயரின் போதனைகளை அல்ல, அவர்களின் பாரம்பரியத்தை புறக்கணித்தார். சில பரிசேயர்கள் அவருடைய செய்தியைக் கேட்க வாஞ்சையாயிருந்தார்கள். (லூக் 7:36) எல்லா பரிசேயர்களும் மோசேயின் ஆகமங்களையும், தீர்க்கதரிசன புத்தகங்களையும் கொண்டவர்களாக இருந்த உயர்நிலை ஒழுக்கத்தையும் போதித்து வந்தார்கள். அவர்கள் இப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையை வாழாததினால் இயேசு அவர்களை மாயக்காரர் என்றும் வேஷக்காரர் என்றும் விமர்சித்தார்.

இந்த நியாயப்பிரமாணம் கிறிஸ்துவினிடத்தில் சேர்ப்பதற்கு ஒரு நல்ல உபாத்தியர் என்று பவுல் எழுதுகிறார். (கலா 3:24) ஆவிக்குரிய தலைவர்களான பரிசேயர்கள் இயேசுவின் செய்தியிலுள்ள விசேஷித்த ஆழமான பொருளை அறிந்து கொள்வதற்கு வாஞ்சையாக இருந்திருக்க வேண்டும். ஆயினும் அவர்கள் வெகுதூரம் சென்றவர்களாக அந்த பிரமாணங்களில் உள்ள ஆவியை புறக்கணித்தார்கள். அவர்களுடைய இருதயத்தை கண்ட இயேசு "குருடரான வழிகாட்டிகளே, கொசுயில்லாதபடி வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாயிருக்கிறீர்கள்" என்று கூறினார். (மத். 23:24)

இந்த பரிசேயர்கள் தங்களுடைய நீதியின் வஸ்திரங்களை களைந்து போட்டு, சீரழிந்துப் போனதை ஆண்டவரால் காணமுடிந்தது. பிரமாணத்தை கடுமையாய்ப் போதித்து, பாரம்பரியத்தோடு தங்களை இணைத்த காரியங்கள் அவர்களை சுயமகிமையைத் தேட செய்தது. "பரிசேயன் நின்று: தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப் போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக் கிறேன்." (லூக் 18:11) அவர்களுக்குள் இருந்த பெருமை மதிப்பிற்குரிய ஆசனங்களையும், நிலைகளையும் தேடும்படி செய்தது. (மத் 23:5-7)

எதிர்மாறாக இயேசு மனத்தாழ்மையோடு ஊழியம் செய்தார். தேவனுடைய பார்வையில் மனத்தாழ்மையே மிகுந்த உயர்நிலை பெரும் என்பதை அவர் காட்டினார். "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்." (மத். 5:5) "உங்களில் எவனாகிலும் முதன்மையான வனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்." (மத் 20:27) இந்த கோட்பாடுகள் மாம்ச சிந்தை கொண்ட பரிசேயர்களுக்கு முரண்பாடாகத் தோன்றியது. பெருமைக்கு எதிராகவும், மற்றவர்களை நியாயம் தீர்க்கும் விஷயத்திலும் தங்களைக் காத்து கொள்ளும்படிக்கு இயேசு தம்முடைய சீஷர்களுக்கு எச்சரித்தார். "நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?" (மத் 7:3)

அன்பின் குறைவாலும் நம்முடைய ஆண்டவரின் போதகத்தில் உள்ள அடிப்படையான காரியங்களில் குறைவுபட்டதன் விளைவாக பரிசேயரின் பல குற்றங்கள் மத் 23:6-ல் விவரிக்கப்படுகிறது. இயேசுவால் அளிக்கப்பட்ட செய்தியை அநேகரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனெனில் அன்புக்குப் பதிலாக அவர்களிடத்தில் கற்பனைகள் காணப்பட்டது. "புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார். அந்த உடன்படிக்கை எழுத்திற்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது" என்று பவுல் எழுதுகிறார். (2 கொரி 3:6) அவர்களின் இருதயம் கடுமையானதினால் அநேக பரிசேயர்கள் இயேசுவின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. "வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்; ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிறயாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்; அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள்; ஏனெனில், அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்" என்று இயேசு கூறுகிறார். (மத் 23:2, 3)

இந்த இரண்டு வகுப்பாருமே தவறாக வழிநடத்தப்பட்டார்கள். மற்றவர்கள் மேல் வைக்கப்பட்ட அன்பின் குறைவினாலும், தங்கள் மேல் அதிகமான அன்பு செலுத்தினதினாலும் அவர்கள் ஆண்டவரின் செய்தியை புறக்கணித்தது மட்டுமல்லாமல், அதை எதிர்க்கவும் தொடங்கினார்கள். ஜனங்கள் மத்தியில் இயேசுவை ஏற்றுக்கொள்வதற்கான மனநிலையில் உள்ள ஜனங்களை இந்த பரிசேயர்கள் ஓயாமல் தடை செய்தனர். (மத் 23:11)

சதுசேயர்களுடைய தலைமை இயேசு அடைந்த பிரபலமான புகழினால் பாதிக்கப்படும் என்று அவர்கள் பயந்தபோது, இயேசுவின் ஊழியத்தின் இறுதி நாட்களில் அவரை எதிர்த்தார்கள். இந்த சிறிய வகுப்பார் ஆண்டவரின் மரணத்திற்கு விசேஷித்த பழியை சுமத்தினார்கள். இவர்களின் பதவிக்கும், புகழுக்கும் தடையாய் வரக்கூடிய எந்த ஒரு மனிதனையும் முற்றிலுமாக அகற்ற வேண்டும் என்பதே அவர்கள் கொண்டிருந்த முக்கிய நோக்கமாய் இருந்தது. ஆனால் இதையே செய்வதற்கு இயேசு வந்தார். பரிந்து கொண்டிருக்கும் மனுக்குலத்தை மீண்டும் ஜீவனுக்குக் கொண்டு வருவதற்கான திருத்தங்களை செய்ய வந்தார்.

எல்லா பரிசேயர்களும் அல்லது எல்லா சதுசேயர்களும் வஞ்சகர்களாக இருக்கவில்லை. இயேசுவினிடத்தில் கற்றுக்கொள்வதற்கு நிக்கொதேமு இரவில் வந்தார். (யோவ 3) ஆண்டவரின் சரீரத்தை கேட்பதற்கு பிலாத்துவினிடத்திற்கு, அரிமத்தியா ஊரானாகிய யோசேப்போடு அவர் சென்றபோது, அவருடைய மேன்மையான குணங்கள் வெளிப்படுகிறது. (யோவ 19:38, 39) காலப்போக்கில் சில பரிசேயர்கள் கிறிஸ்தவர்களாக மாறினார்கள். (அப் 15:5) அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு ஒரு பரிசேயனாக இருந்திருக்கக்கூடும்.

**பரிசேயர் மற்றும் சதுசேயர்களிடமிருந்து பாடம்**

நிஜமாக சதுசேயர்கள் மற்றும் பரிசேயர்கள் ஒருவரையொருவர் எதிர்த்தார்கள். ஆயினும் இயேசுவை பொறுத்தவரையில் இந்த இரு வகுப்பாரின் இருதயத்தின் விருப்பம் ஒருமித்து காணப்படுகையில் அவரை கொலை செய்ய ஒருமனப்பட்டார்கள். ஆனால் இயேசு தமக்கு செவிக்கொடாதவர்களுக்கு பிரசங்கிக்க வரவில்லை. திறந்த இருதயத்தோடு ஏற்றுக்கொள்ளும் மனநிலை உள்ளவர்களிடம் இவர் செய்திகளை அறிவித்தார்.

நம்முடைய சுயநலமான விருப்பங்களை முற்றிலுமாக அகற்ற வேண்டும் என்ற பாடத்தை இவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளலாம். இதனால் தேவனுடைய விருப்பங்களினால் நம்முடைய இருதயத்தை நிரப்பலாம்.

தீமையிலிருந்து இரட்சித்து உண்மையான நீதியை கொடுக்கக்கூடிய ஒரே இரட்சகரை, யூதமதத் தலைவர்கள் அவர்கள் மத்தியில் கொண்டிருந்தார்கள். அவர் சொன்ன திருத்தங்களை தங்களுடைய இருதயங்களில் ஏற்றுக்கொண்டு, அவரை உண்மையோடு விசுவாசித்திருந்தால் மட்டும் போதும். ஆனால் இது ஒரு கடினமான ஒரு காரியமாக இருந்தாலும், தேவனுடைய உதவியினால் இதை நிறைவேற்றியிருக்க முடிந்திருக்கும்.

இவர்கள் இயேசுவை எவ்வளவாக எதிர்த்தாலும் இயேசு அவர்களை வெறுக்கவில்லை. ஏனெனில், அன்பு என்ற குணம் அவருக்குள் பொங்கி வரும் ஊற்றாய் இருந்தது. 1 யோவ 4:20 - "தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?" மத் 5:43, 44 - "உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களைச் ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்."

இன்றைய கிறிஸ்தவர்களுக்குப் பரிசேயர் மற்றும் சதுசேயரிடம் காணப்பட்ட குற்றங்கள் மிக அபாயமானது. தேவனுடைய போதனைகளை அறிந்து தங்களை தேவனுடைய விசேஷித்த ஜனங்கள் என்று எண்ணுகிறவர்கள் தங்களுடைய நிலையை எண்ணி பெருமைப்படலாம். கிறிஸ்தவ பாரம்பரியமும் தேவனுடைய சித்தத்தைப் புரிந்து கொள்ள வழிவகுக்கும். தேவனுக்கும் மற்றவர்களுக்கும் ஊழியம் செய்து சுயத்தைப் பலி செலுத்தக்கூடிய நோக்கத்தோடு மனத்தாழ்மைய என்ற குணம் இணைந்து காணப்பட வேண்டும். பெருமையிலிருந்தும், சுயத்தை நாடுவதிலிருந்தும் நம்முடைய இருதயங்களை முழுமையாகக் காத்துக் கொள்ள வேண்டும்.

கள்ளங்கபடம் அறியாத ஆவியைப் பெற்ற வகுப்பினரை நம்முடைய ஆண்டவர் தேடினார். குழந்தைகள் மட்டுமே இப்படிப்பட்ட குணநலன்களைப் பெற்றிருந்தனர். இயேசுவின் அநேக பிரசங்கங்களின் போது, இவர்கள் அழைத்து வரப்பட்டனர்.

"அவ்வேளையிலே சீஷர்கள் இயேசுவினிடத்தில் வந்து: பரலோகராஜ்யத்தில் எவன் பெரியவனாயிருப்பான் என்று கேட்டார்கள். இயேசு ஒரு பிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து, அதை அவர்கள் நடுவே நிறுத்தி: நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால் இந்தப் பிள்ளையைப்போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோகராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான். இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான். என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்." (மத் 18:1-6)

இயேசு பிள்ளைகளோடு மகிழ்ந்திருந்தார் என்பதற்கான ஏதாகிலும் கேள்விகள் உண்டா? அவர்களிடம் அவர் பேசுகையில் - அவர்கள் புரிந்துகொள்ளும் விதத்தில் இனிமையான கதைகள் சொன்னார். அவர்கள் அதை புரிந்துகொண்டு ஒருகேள்விக்குண்டான விடையை முடித்துக் கொண்டு சொல்லும் பொழுது அவர் எவ்வளவு மகிழ்ச்சியடைந்திருப்பார். அவருடைய வார்த்தைகளை சுவாரசியமாகக் கேட்ட அந்த சிறுவரின் கண்களிலுள்ள ஒளியை அவர் எவ்வளவு இரசித்திருப்பார்? கள்ளங்கபடமற்ற நம்பிக்கையை அவர் நேசித்தார். அவர்களின் சிரிப்பில் அவர் புத்துணர்வு பெற்றார். அந்த நொடிக்குரிய வாழ்க்கையை வாழ்ந்து நாளைக்காக அவர் கவலைப்படாதிருந்ததைக் கண்டார். அவர் வாழ்க்கையில் கண்ட இக்குணங்களை சீஷர்களுக்கு முன் ஒருமாதிரியாக நிறுத்தினார். இவர்களுக்குள் காணப்பட்ட இந்த குணங்கள் எவ்வளவு முக்கியமானது என்று பெரியவர்கள் உணரவேண்டும் என்று விரும்பினார். ஏனெனில், ஒரு குழந்தையின் இருதயத்திலுள்ள நிலைமையே தேவனுக்கு ஏற்றதாய் இருக்கிறது.

குழந்தைகளை பணம் அல்லது வல்லமை ஆக்கிரமிக்க முடியாது. இந்த உலகத்தில் அதிகமான செல்வாக்கைப் பெறுவதற்கு அவர்கள் எந்தவிதத்திலும் கவலைப்படுவதில்லை. பிள்ளைகள் தங்களுடைய எல்லா தேவைகளுக்கும் பெற்றோரை எதிர்பார்க்கக் கூடியவர்களாய் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சகல குணலட்சணங் களும் எளிமையானதும் ஆனால் மிக ஆழமான பாடங்களையும் நமக்கு கற்பிக்கிறது. அவர்களைப் போல கிறிஸ்தவர்களும் அவர்களுடைய எல்லா தேவைகளுக்கும் பரலோகப் பிதாவை நோக்கியிருக்க வேண்டும். உண்மையான சீஷர்கள் கபடற்று திறந்த மனநிலையோடு ஆழமான அன்புள்ளவர்களாக மனத்தாழ்மையோடு காணப்பட வேண்டும் என்று இயேசு கூறுகிறார். குழந்தைகளுக்கு உண்டான இந்த குணங்களை அவர் உயர்வாக மதிப்பிடுகிறார். ஏனெனில் இப்படிப்பட்ட குணங்களே தேவ சித்தத்தை நிறைவேற்றும்.

பிள்ளைகளைப் போல பரலோகத் தந்தையை பிரியப்படுத்துவதற்கு துரிதமாக செயல்பட வேண்டும். இயேசுவின் பாதத்தில் கற்றுக்கொள்ளுதல் ஒரு குழந்தையின் கண்களில் புதிய காரியங்களைக் கற்றுக்கொண்ட மகிழ்ச்சி காணப்படும். ஒளியைப்போல நமக்குள் மகிழச்சியை ஏற்படுத்த வேண்டும். நாம் சோர்வடைந்து அசதியாயிருப்பதற்கு அல்ல, மகிழ்ச்சியாயிருப்பதற்கு அநேக காரியங்களைப் பெற்றிருக்கிறோம். நம்முடைய நம்பிக்கை உண்மையானால் குழந்தைகள் பெறும் மகிழ்ச்சியைப் போல மற்றவர்களை புரிந்துகொள்ள முடியாத அளவிற்கு மகிழ்ச்சியடைவோம். ஆகவே, "எவனாகிலும் சிறு பிள்ளையைப்போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவன் அதில் பிரவேசிப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி," (மாற் 10:15) என்ற வசனத்தை எப்போதும் நினைவில் கொள்ளலாம்.

உண்மையில் ஒருவர் சிறு குழந்தையைப் போல் மாறிவிட்டால், "அவர்களை அணைத்துக்கொண்டு, அவர்கள் மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார்" (மாற் 10:16) போன்ற காரியத்தை தனிப்பட்ட முறையில் உண்மையில் உணர்வார்.

யூதாஸ் மற்றும் பேதுரு

# காட்டிக் கொடுத்தவர் மற்றும் மறுதலித்தவர்



"அதுபோல, மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக்குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப்பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." - லூக் 15:7

David Marten

நம்முடைய ஆண்டவருடைய பூமிக்குரிய வாழ்க்கையின் இறுதி மனித நேரங்களில் யூதாஸ் மற்றும் பேதுருவின் கிரியைகள் சந்தேகத்திற்கு இடமின்றி, அவருடைய இருதயத்தை நொறுக்கியிருக்க வேண்டும். இவ்விரண்டு சம்பவங்களுக்கு இடையே உள்ள ஒருமனப்பாட்டையும் அதாவது, பேதுருவின் மறுதலிப்பையும், யூதாஸ்காரியோத் காட்டிக் கொடுத்த காரியத்தையும் நிச்சயமாக ஒப்பிட்டுப் பார்க்க முடியும். இருவரும் மதிப்பிற்குரிய அப்போஸ்தலர் என்ற நிலையை பெற்றிருந் தார்கள். யூதாஸ் பொக்கிஷதாரராய் இருந்தார். (யோவ 12:6) பேதுரு இயேசுவின் நெருங்கிய நண்பராக மறுரூப காட்சியின் ஆதாரமாக இயேசுவோடு இருந்தார். (மத் 17:1-7) இருவருமே வெளிப்படையாக கடிந்து கொள்ளப்பட்டார்கள். (யோவ 12:7, 8; மத் 16:23) மேலும் யூதாஸ் மற்றும் பேதுரு தங்களுடைய செயல்களினிமித்தம் நேரடியாக முன் எச்சரிக்கை பெற்றார்கள். இவ்வளவு ஒற்றுமைகள் இருந்தாலும் இயேசு இவர்கள் ஒவ்வொருவரையும் வேறுபட்ட கோணத்தில் பார்த்தார்.

### காட்டிக் கொடுத்தவர்

நம்முடைய ஆண்டவர், காட்டிக் கொடுப்பதைக் குறித்து வசனங்கள் அதிகமாக வெளிப்படுத்துவதில்லை. வேதாகமத்தில் காணப்படும் சில பதிவுகள் யூதாசுக்கு சாதகமாக எழுதப்படவில்லை. இயேசு இருதயங்களை வாசிக்கக்கூடிய திறமை பெற்றவராக இருந்தார். (மாற்கு 2:8) ஆகவே இந்த குறிப்பான காரியத்தை வைத்து நம்முடைய ஆண்டவரின் சிந்தையை நாம் புரிந்துகொள்ளலாம். சரியான மனநிலை இல்லாதவர்களின் வெளிப்புறமான கிரியைகளுக்கு இயேசு எந்தவிதமான முக்கியத்துவமும் கொடுக்கவில்லை.

யூதாசின் மனநிலையின் ஆழத்தைக் குறித்து அப்போஸ்தலர் யோவான் நமக்கு விவரிக்கிறார். மரியாள் நளதம் என்னும் தைலத்தை ஆண்டவரின் பாதத்தில் பூசின போது, யூதாஸ் குறை கூறின காரியத்தைப் பற்றி அவர் தெளிவாக விவரிக்கிறார். "அவன் தரித்திரரைக்குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல், அவன் திருடனானபடியினாலும், பணப்பையை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனான படியினாலும் இப்படிச் சொன்னான்." (யோவ 12:6) யோவான் ஒரு தெளிவான பார்வையில் இதை எழுதினார். ஆயினும் நம்முடைய ஆண்டவரின் ஊழியக்காலம் முழுவதிலும் யூதாசை குறித்து முழுமையாக அறிந்துகொள்வதற்கு வாய்ப்பு இல்லை என்று நாம் எண்ணலாம்.

இயேசு யூதாசை குறித்து, ஆதியிலிருந்து நன்கு அறிந்திருந்தார். மேலும் எழுதப்பட்டுள்ள தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக இவைகள் காலப்போக்கில் நடந்தேறும் என்பதையும் அறிந்திருந்தார். (சங்கீதம் 41:9; சகரியா 11:12, 13 யோவ 13:18) இயேசு யூதாசை பிசாசு என்று அழைத்திருப்பதை யோவ 6:70-ல் யோவான் குறிப்பிடுகிறார். நம்முடைய விழுந்துப்போன மாம்சத்தின் நிலையை ஒரு நொடிப்பொழுதுக்கு ஆண்டவருடைய நிலையைப் பெற விரும்பினால் நம்முடைய எண்ணங்கள் என்னவாக இருக்கும்? ஒருவேளை ஒரு சகோதரர் அல்லது ஒரு சகோதரி தனிமையில் மற்றவர்கள் அறியாத வண்ணம் ஒரு சகோதரனிடத்திலிருந்து திருடி அக்கிரியைகளினிமித்தம் பொய் பேசினால் அவருடைய நோக்கங்கள் என்னவாக இருக்கும்? அவருடைய வெளிப்புறமான தோற்றம் நீதியுள்ளதாகவும், விசுவாசமுள்ளதாகவும் காணப்படலாம். நம்முடைய மாம்சம் அப்படிப்பட்ட தனி நபரை எவ்வளவு கசப்பான உணர்வோடு காணும்?

ஆயினும் இந்த சூழ்நிலைகளை இயேசுவின் கண்களின் வழியாகக் கண்டால். அந்த சூழ்நிலைகள் முற்றிலுமாக மாறுகிறது. இயேசுவின்

இருதயமும், சிந்தையும் பரிபூரணமானது. அவர் மாம்சத்தின் கண்களினால் அல்ல, பரலோகப் பிதாவின் ஆவிக்குரிய கண்களினால் காணக்கூடியவர். "கர்த்தர் சாமுவேலை நோக்கி: நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீர வளர்ச்சியையும் பார்க்கவேண்டாம்; நான் இவனைப் புறக்கணித்தேன்; மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார்" (1சாமு 16: 7)என்று வாசிக்கிறோம். அதற்கு யூதாசின் இருதய நிலைக்கு வேறுபட்டதாக அவன் செயல்பாடுகள் இருந்ததாக பொருளல்ல. மாறாக அவனுடைய இருதயம் சாத்தானால் முழுமையாக கெடுக்கப்பட்டு இருந்தது. (யோவ 13:2; லூக் 22:3) நம்முடைய ஆண்டவர் தம்முடைய முதலாம் வருகையில் அவரை குறித்து நிறைவேற வேண்டிய தீர்க்கதரிசனங்களுக்கு ஏற்ற சம்பவங்கள் என்ன என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். சில குறிப்பான நேரத்தில் மந்தையிலிருந்து ஒரு ஆடு சீர்ப்பொருந்துவதற்கு வழியில்லாமல் தொலைந்து போகும் என்ற உண்மையை அவர் அறிந்திருக்க வேண்டும். இத்திறவுக் கோலைக் கொண்டு இயேசு எவ்வாறு யூதாசை கண்ணோக்கினார் என்பதை எளிதில் திறந்துவிடலாம். நிச்சயமாக இயேசு யூதாசைக் குறித்து அதிகமான வேதனையும், துக்கமும் பட்டிருப்பாரே தவிர நிச்சயமாக அவரை பகைத்திருக்கமாட்டார். யூதாசின் வஞ்சகத்தையும், கிரியைகளையும் எண்ணி அவர் கோபப்பட்டாரா? ஆம்! இயேசு காசுக்காரர்களின் மேஜைகளைக் கவிழ்த்துப் போட்ட காரியம் அவர் கோபப்பட்டதற்கு எடுத்துக்காட்டாக இருக்கலாம். நீதிமொழிகள் 6:16-19 வசனங்கள். தேவன், "வெறுக்கும்" ஆறு பாவங்களைக் குறித்தும் பேசுகிறது. யூதாஸ் இந்த அனைத்து பாவங்களை செய்யாவிட்டாலும், அநேக பாவங்களைக் குறித்து குற்றமுள்ளவனாய் இருந்தான். ஆகவே இயேசு தம்முடைய ஊழியத்தின் போது, யூதாசின் கிரியைகளினிமித்தம் கோபமடைந்தார் என்பதற்கான நியாயமான காரியங்கள் காணப்படுகிறது. அவர் கோபப்பட்டாலும், அவர் பாவங்களினிமித்தம் வரும் பலன்களை எண்ணி அவர் வேதனைப்பட்டிருப்பார். ஏனெனில், அவர் தேவனைப் போல "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" (1தீமோ 2: 4) விரும்பினார்.

கேட்டின் மகனாகிய அவனை மீட்பதற்கு எடுக்கப்படும் எந்த முயற்சியும் பயனற்றதாக இருக்கும் என்று எண்ணி யூதாசை அவர் வேறுவிதமாக கண்ணோக்கி கைவிட்டாரா? நிச்சயமாக இல்லை! "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (11பேதுரு 3:9)என்று நமக்கு சொல்லப்படுகிறது. தொடர்ந்து யூதாஸை வாழ்க்கையின் சரிவுக்கு தொடர்ந்து நடத்துவது இந்த வசனத்தோடு இசைந்திருக்க முடியாது. முன்னதாக குறிப்பிட்டப்படி இயேசு ஒருமுறை யூதாசை பகிரங்கமாக கடிந்து கொண்டார். கூடுதலாக அவன் இருதயத்தில் தீட்டின திட்டங்களை அவர் நன்கு அறிந்திருந்ததை தெளிவுப்படுத்தினார். வசனங்களில் பதிவுகள் காணப்படாமல் இருந்ததாலும் யூதாசை திருத்துவதற்கு இயேசு பல நியாயமான முயற்சிகளை எடுத்திருக்க வேண்டும்.

**யூதாசின் மனநிலை**

யூதாசின் இறுதி வாழ்க்கையில் காணப்பட்ட மனநிலை பலவருடங்களாக கடினப்பட்ட செயல்களின் ஒரு குவியலாகக் காணப்பட்டது. ஒரு நொடிப்பொழுதில் சாத்தானை அவனுக்குள் அனுமதித்து நம்முடைய ஆண்டவரைக் காட்டிக் கொடுக்க முடிவு செய்யவில்லை. இதை நம்முடைய இருதயத்தில் எடுத்துக் கொண்டு தோல்விகளினால் ஏற்படும் பயங்களை நம்முடைய இருதயங்களை நிரப்பப்படுவதற்கு அனுமதிக்கக்கூடாது. யூதாசை மாதிரியாக எடுத்துக் கொண்டு நம்மை நாம் தொடர்ந்து உறுதியான எச்சரிப்போடு ஆராய்ந்து நமக்குள் இருக்கக் கூடிய குழிநரிகளையும், சிறு நரிகளையும் வெளியேற்ற (உன்னதப்பாட்டு 2:15) வேண்டும். கூடுதலாக தேவனுடைய கிருபையை நாம் எப்பொழுதும் வீணாக விட்டுவிடக்கூடாது. (ரோமர் 6:15-23) நியாயப்பிரமாணத்தின் கீழ் ஒரு திருடனுடைய குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவன் திருடின முழு காரியங்களையும் கூடுதலாக இருபது சதவிகிதத்தையும் அவன் செலுத்த வேண்டும். இயேசு இப்படிப்பட்ட ஒரு தண்டனையை யூதாசிடம் செலுத்தவில்லை. ஆண்டவருடைய கிருபையை வீணாக வழங்கினதினிமித்தம் யூதாஸ் குற்ற உணர்வு

அடைந்தான். ஒழுக்கமற்ற குழந்தையைப் போல யூதாஸ் தன்னுடைய பாவங்களுக்கான உடனடியான தண்டனையைப் பெறவில்லை. அவன் தன்னுடைய கிரியைகளை எளிதில் புரிந்துகொண்டான். இயேசுவின் ஊழியத்தின் போதனைகளில் உள்ள முக்கியமான காரியங்களை யூதாஸ் தெளிவாக அறிந்து கொள்ளவில்லை என்பதினால் இயேசு மிகவும் ஏமாற்றம் அடைந்தார். யூதாஸ் தம்முடைய சுயாதீனத்துக்காகப் பயன்படுத்தினார். நம்முடைய சொந்த நடைகளிலும் இருதயத்தில் அப்போஸ்தலர் பவுலின் வார்த்தைகளை ஏற்றுக் கொண்டவர்களாக கிறிஸ்துவால் நாம் பெற்ற சுயாதீனத்தை மாம்சத்தின் தேவைகளை பூர்த்தி செய்ய பயன்படுத்திவிடக்கூடாது. மாறாக, அன்பினிமித்தம் நாம் ஒருவரையொருவர் சேவிப்பதின் வழியாக ஆண்டவரை சேவிக்க வேண்டும். (கலாத்தியர் 5:1, 13)

தம்முடைய சபை ஒருவரையொருவர் சேவிக்க வேண்டும் என்ற இயேசுவின் விருப்பத்தை அவருடைய இறுதி நாட்களில் இயேசு யூதாசிடம் நேரடியாகக் கூறினார். இதே காரியத்தை அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்பு பேதுருவிடம் கூறினார். மரியாள் இயேசுவை நளதம் என்னும் தைலத்தினால் அபிஷேகித்தப் போது, யூதாஸ் பேசின வார்த்தைகளுக்காக இயேசு அவரை கடிந்து கொண்டபோதிலும் உண்மையில் யூதாஸினுடைய மனநிலையை அவர் சீர்ப்பொருந்த முயற்சித்தார். ஒரு சகோதரனுக்கு செய்யக்கூடிய ஊழியம் நம்முடைய ஆண்டவருக்கும், அதே நேரத்தில் நம்முடைய பரலோகப் பிதாவுக்கும் ஏறெடுக்கக்கூடிய ஊழியமாக இருக்கிறது. உயிர்த்தெழுந்த இயேசு கடற்கரையில் இதே பாடத்தை பேதுருவிடம் மீண்டும் மீண்டுமாக வலியுறுத்தினார் - பேதுரு இயேசுவின் மந்தையை மேய்க்க வேண்டும். இந்த ஒரு எச்சரிப்புகள் ஒருமித்துக் காணப்பட்டாலும் நம்முடைய ஆண்டவர் அப்போஸ்தலர் பேதுருவை வேறு கோணத்திலும், யூதாசை வித்தியாசமான கோணத்திலும் கண்டார்.

### இயேசு பேதுருவை கண்ணோக்கின விதம்

அடிக்கடி பேதுருவை, "இயேசுவை மறுதலித்தவர்" என்று கூறுவது வழக்கம். பேதுரு உண்மையில் நம்முடைய ஆண்டவரை மறுதலித்தார். ஆயினும் தொடர்ந்து பேதுருவை இவ்வாறாக அழைப்பது தவறாகும். நம்முடைய கிறிஸ்தவ நடைகளில் பேதுரு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாவார். மாம்சத்தில் தோல்வியடைந்ததற்கும், விசுவாசத்தில் வெற்றியடைந்ததற்கும் உரிய வாழ்க்கைக்குண்டான பல தொகுப்புகளை அவர் நமக்கு கற்றுக்கொடுக்கிறார். அவருடைய வாழ்க்கை பல உயர்வுகளும் தாழ்வுகளும் நிறைந்திருந்ததினால் ஆண்டவரை பொறுத்த வரையில் அவர் பேதுருவை கண்ணோக்கின விதம் ஒரேவிதமாக இருந்திருக்கக்கூடும் என்று நாம் கருதலாம். ஆனால் அப்படியல்ல, இயேசு பேதுருவையும் யூதாசையும் அவர்களின் இருதயத்தின் நிலையைக் கண்ணோக்கினார். யூதாஸ் இருதயத்திலிருந்து பாவம் செய்தான். பேதுரு விழுந்துபோன மாம்சத்தின் பயத்தினால் குற்றம் புரிந்தார். இவர்களில் இருவரின் செயல்களும் இயேசுவை ஏமாற்றத்தில் ஆழ்த்தியிருந்தாலும், இவர்களின் இருதய நிலையை அவர் நன்கு அறிந்திருந்தார். பேதுரு மாம்சத்தில் செய்த தவறுகள் அவனுடைய வாழ்க்கை அனுபவத்தினால் அவரை சீர்ப் பொருந்தும் என்பதை அவர் அறிந்திருந்தார்.

நம்முடைய ஆண்டவர் மட்டுமே மனப்பூர்வமாய் ஊழியம் செய்யக்கூடிய பேதுருவின் உண்மையான மனநிலையை அறிந்திருந்தார். சில நேரங்களில் நாம் பேதுருவின் பலவீனங்களைக் குறித்து பேசலாம். ஆனால் அவர் விசுவாசத்தில் குறைவுப்பட்ட போது மட்டுமே அவர் தண்ணீருக்குள் மூழ்கத் தொடங்கினார். இயேசுவை பாதுகாப்பதற்காக, பேதுரு அந்த போர்ச் சேவகனை கடுமையாகத் தாக்கினார். சிறிது நேரத்திற்குள் காய்பாவின் வாசலில் ஆண்டவரை மூன்றுமுறை மறுதலித்தார். ஆனால் புயல் வீசும் கடலின் மத்தியில் ஆண்டவரோடு நடக்கத் துணிந்து படவிலிருந்து குதித்தவர் இவரே. நம்முடைய ஆண்டவரை பாதுகாப்பதற்கு ரோம போர்ச் சேவகனைத் தாக்கின பின் அதினால் வரக்கூடிய பின் விளைவுகளையும் சந்திக்க துணிந்தவரும் இவரே - நம்முடைய ஆண்டவரின் இறுதி மணி நேரங்களில் அவரை பின் தொடர்ந்து காய்பாவின் வீட்டு வாசலுக்கு துணிச்சலோடு சென்றவர் இவரே. பேதுரு தம்முடைய விசுவாசத்தை வெளிப்படுத்த சிறப்பான கிரியைகளை அவர் தேர்ந்தெடுக்காமல் போகலாம். ஆனால் அவருடைய இருதயத்தில் சரியான ஆவியைக் கொண்டிருந்தார். இப்படிப்பட்ட மனநிலையை நாம் அனைவரும் பெற முயற்சிக்க வேண்டும். இயேசு முக்கியமாக பேதுருவின்

மனநிலையை அறிந்ததினால், அவர் தோல்வியடையும் போதெல்லாம் அவரிடத்தில் நெருங்கி வந்து அவரை தேற்றினார்.

**குற்ற உணர்வு மற்றும் மனம் வருந்துதல்**

பேதுரு மற்றும் யூதாஸை குறித்து விவாதிக்கையில், குற்ற உணர்வு மற்றும் மனம் வருந்துதல் குறித்து ஆராய்வது மிக அவசியம். யூதாஸ் மற்றும் பேதுரு தங்களுடைய கிரியைகளினிமித்தம் அதிகமாக குற்ற உணர்வு அடைந்தார்கள். (மத் 27:3; 26:75) பேதுரு கடுமையாக அழுதார். ஆனால் யூதாஸ் தற்கொலை செய்து கொண்டார். ஆயினும் அவர்களுக்குள் இருந்த ஒருமித்த உணர்வுகள் தங்களுடைய பாவத்திற்கேற்ற உணர்வை பெற்றார்கள். மீண்டுமாக நம்முடைய ஆண்டவர் இந்த இருவரையும் வெவ்வேறாக கண்ணோக்கினார்.

பேதுரு மீண்டுமாக சீஷர்களின் ஐக்கியத்தில் இணைந்தார். அதே நேரத்தில் "இவன் பிறவாதிருந்தால் நலமாயிருக்கும்" என்று யூதாசை குறித்து இயேசு சொல்லிய காரணம் என்ன? (மத் 26:24) இவர்களுடைய குற்ற உணர்வு இதற்கான பதிலாகாது! தவறு செய்வதை ஒருவர் உணரும்போது, அந்த குற்ற உணர்வு ஏற்படும். மனுக்குலத்தில் அனைவரும் பொதுவாக இந்த உணர்வை பெறுகிறார்கள். ஒருவர் குற்றத்தை உணர்ந்தால் மட்டுமே போதாது. தேவன் அவர்களிடத்தில் அதிகமாக கவனம் செலுத்துவதில்லை. ஆனால் அந்த குற்ற உணர்வுக்கு ஏற்ற கிரியைகள் நடப்பிக்கப்பட வேண்டும். ஆகவே, நம்முடைய விசுவாசத்தை நல்ல கிரியைகளின் மூலம் வெளிப்படுத்தக்கூடிய இருதய நிலையைப் பெற்றிருக்க வேண்டும் என்று வசனங்கள் குறிப்பிடுகிறது. ஆயினும் மனம் வருந்துதல் - குணங்களிலும், கிரியைகளிலும் ஏற்படக்கூடிய மாற்றம் ஆகும். யூதாஸ் மற்றும் பேதுருவின் குற்ற உணர்வுகளை அறிந்திருந்த இயேசு, பேதுருவிடம் காணப்பட்ட மனம் வருந்துதலையும், ஆவிக்குரிய வளர்ச்சியையும் கண்டு மகிழ்ந்தார். "தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்" (நீதி 28:13)என்று வாசிக்கிறோம். பேதுரு தன்னுடைய தவறுகளை திருத்திக் கொண்டு இனி அவர் வாழக்கூடிய பூமிக்குரிய வாழ்க்கையில் விசுவாசமுள்ள ஊழியக்காரனாக தொடர்ந்து வாழ்வதற்குரிய பாடங்களைக் கற்றுக்கொண்டார். அதே நேரத்தில் யூதாஸ் தொடர்ந்து தன்னுடைய வாழ்க்கையில் தன்னுடைய பாவங்களை மூடி வைத்து இறுதியில் எந்தவிதமான சீர்திருத்தமில்லாமல் தன்னுடைய வாழ்க்கையை தானே தீர்த்துக் கொள்ளக்கூடிய முடிவை தேர்ந்தெடுத்தார்.

பேதுரு மற்றும் யூதாஸ் மறுதலித்ததிலும், காட்டிக்கொடுத்ததிலும் உள்ள காரியங்களில் மற்றொரு வித்தியாசம் காணப்படுகிறது. யூதாஸின் பண ஆசையைக் குறித்தும் பாவமுள்ள இருதயத்தின் எண்ணங்களைக் குறித்தும் நம்முடைய ஆண்டவர் எச்சரித்து கடிந்து கொண்டார். (கொலோ 3:5. 6; மத் 6:24) யூதாஸ் தேவனுடைய ஊழியக்காரனாக அல்ல, இந்த உலகத்திற்கு ஊழியக்காரனாக இருந்தார். அதே நேரத்தில் பேதுரு நம்முடைய ஆண்டவருக்கு விசுவாசமுள்ள ஊழியராக இருந்தார். ஆகவே காலப்போக்கில் அவர் ஆண்டவருடைய இரத்தத்தின் கீழ் வந்தார். "ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை." (ரோம 8:1)

**முடிவுரை**

பேதுரு மற்றும் யூதாஸின் ஆவிக்குரிய குறிப்புகள் நம்முடைய ஆண்டவர் அவர்களை எவ்வாறு கண்ணோக்கினார் என்பதை வெளிப்படுத்துகிறது. இருவரும் ஆதாமின் பாவத்தின் பாதிப்புகளினால் பாடுகள் அனுபவித்தார்கள். ஆனால் யூதாஸ் மட்டுமே சாத்தானை தன்னுடைய இருதயத்திற்குள் அனுமதித்தான். ஆனால் இயேசு பேதுருவை அதிகமாக நேசித்தார் என்ற காரியம் நமக்கு மிகச் சிறப்பாக லூக் 22:31, 32 வசனங்களில் விவரிக்கப்படுகிறது - "பின்னும் கர்த்தர்: சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறது போலச் சாத்தான் உங்களைப் புடைக்கிற தற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார். ஆகவே பேதுரு தன்னுடைய இருதயத்தில் ஆண்டவரை அனுமதித்ததினால் இயேசுவின் இருதயத்தில் பேதுரு இடம் பெற்றார்.

அவர் அதிகமாக கவலைப்பட்டது

# அவருடைய இறுதி நாட்கள்



"பஸ்காபண்டிகை வர ஆறுநாளைக்கு முன்னே இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த பெத்தானியாவுக்கு வந்தார். அங்கே அவருக்கு இராவிருந்து பண்ணினார்கள்; மார்த்தாள் பணிவிடை செய்தாள்; லாசருவும் அவருடனேகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவனாயிருந்தான். அப்பொழுது மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டு வந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது." யோவ 12:1-3

**Brad Bach**

ஆறுதலையும் புத்துணர்வையும் பெறுவதற்காக இயேசு தம்முடைய நெருங்கிய சிநேகிதருடைய வீட்டிற்கு வந்தார். இதுவே அவருடைய வாழ்க்கையின் இறுதி வாரமாக இருந்தது. பிதா தமக்கு கொடுத்த வேலையை முடிப்பதற்கான வேளை அவருக்கு முன் நின்றது. உலகத்தின் இரட்சிப்பு அவருடைய தோள்கள் மேல் அமர்ந்தது. அவருடைய சிநேகிதர்கள் வீட்டில் இயேசு அனுபவித்த ஒவ்வொரு நொடிப்பொழுதையும் நாம் கற்பனை செய்து பார்க்கலாம். கடந்துபோகும் ஒவ்வொரு பார்வையும் ஒவ்வொரு தொடு உணர்வும், ஒவ்வொரு சம்பாஷணையின் துணுக்கும் இயேசுவின் பார்வையில் மிகப் பெரிதாக்கப்பட்டு மிக உணர்வு பூர்வமாகக் கடந்திருக்க வேண்டும். அதே நேரத்தில் மற்றவர்கள் இயேசுவின் வேதனை நிறைந்த இந்த அனுபவங்களை உணராதிருந்தார்கள். ஆனால் எப்படியோ மரியாள் அதை உணர்ந்தாள்.

### மரியாளின் அன்பின் வெளிப்பாடு

இயேசு லாசருவை மீண்டும் உயிரோடு தந்த அந்த மிகப் பெரிய பரிசை எண்ணி, அவளால் அதற்கு ஈடாக எதையும் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் தன்னுடைய சகோதரனுடைய ஜீவனுக்காக ஒரு சிறிய அன்பின் அடையாளமாக ஒரு பரிசளித்தாள். அந்த தைலம் மிகவும் விலையுயர்ந்ததாக இருந்தது. அது ஒருவருடக் கூலியாக இருந்திருக்க வாய்ப்புண்டு. ஆனால் அவளை பொறுத்த வரையில் இயேசுவுக்கு கொடுக்கக்கூடிய அந்த பரிசு மிக விலையுயர்ந்ததாக இருக்கவில்லை. அவளால் முடிந்தது இது மட்டுமே. இந்த ஒரு பரிசை அவள் இருதய பூர்வமாகக் கொடுத்தாள். ஆண்டவருடைய அன்பு அவள் இருதயம் முழுவதிலும் நிரம்பி இருப்பதை வெளிப்படுத்தியது. அவள் தயங்கி அடுத்த வாரத்திற்கு ஒத்தி வைத்திருந்தால், இறுதி வரைக்குள் அவள் எண்ணியதை அவளால் நிறைவேற்றியிருக்க முடியாது. மிகவும் தாமதமாய் இருக்கும். காரணத்தோடு ஏற்ற நேரத்தில் செய்யப்பட்ட அந்த நற்கிரியை நமக்கு ஒரு நல்ல பாடமாய் இருக்கிறது. உங்களுடைய சகோதரர்களை உங்கள் அன்பின் தைலத்தால் அபிஷேகிப்பதில் எப்பொழுதும் தாமதமாய் இருக்க வேண்டாம். உங்களுடைய அன்பின் வெளிப்பாட்டை அமைதியாக இருதயத்தில் மட்டுமே காத்துக் கொள்ள வேண்டாம்.

மரியாள் இயேசுவின் மேல் கொண்டிருந்த அன்பின் உணர்வுகளினாலோ அல்லது பரிசுத்த ஆவியின் தூண்டுதலினாலோ இக்காரியங்களைச் செய்தாளோ? இதற்கு சரியாக விடையளிக்க இயலாது. அவளிடம் காணப்பட்ட ஒவ்வொரு அசைவிலும் "ராஜா தமது பந்தியிலிருக்குந்தனையும் என்னுடைய நளததைலம் தன் வாசனையை வீசும்" (உன் 1:12)என்ற வசனத்தின் நிறைவேற்றத்தை இயேசு கண்டிருக்க வேண்டும்.

இந்த வேதப்பகுதியை மரியாள் அறிந்திருந்தாலும், இயேசு இதை இரட்டிப்பான ஆசீர்வாதங்களாகக் கண்டிருப்பார். ஒன்று மரியாளின் அன்பின் வெளிப்பாடு, மற்றொன்று அவருடைய இறுதி நேரம் என்று உறுதிபடுத்தும் தேவனுடைய அன்பு.

விலையேறப் பெற்ற தைலம் பயன்படுத்தப்பட்டதினிமித்தம் யூதாஸினால் ஒரு சவால் எழும்பினது. "அப்பொழுது இயேசு: இவளை விட்டுவிடு, என்னை அடக்கம்பண்ணும் நாளுக்காக இதை வைத்திருந்தாள்" (யோவ 12:7)என்று இயேசு பதிலளித்தார். இயேசு யூதாஸை அந்நேரத்தில் கடிந்து கொண்டதினிமித்தம் அவர்களுக்குள் ஒரு மிகப் பெரிய இறுதி பிளவு உண்டானது. அந்த நொடியில் இயல்பாகவே ஆண்டவரின் உணர்ச்சிகள் தூண்டப்பட்டிருக்க வேண்டும். அந்நேரத்தில் நடந்த ஒவ்வொரு காரியங்களும் நீண்ட நாட்களுக்கு முன்பாக எழுதப்பட்ட தீர்க்கதரிசன வார்த்தைகளின்

நிறைவேற்றங்களாக இயேசுவின் கண்கள் கண்டது. ஆகவே ஒவ்வொரு நிறைவேற்றமும் முழுமையாக கசப்பான அனுபவங்களாக இருப்பினும் அவருக்குள் இது உற்சாகத்தை அளித்திருக்க வேண்டும்.

### திரளான கூட்டத்தை இயேசு கண்ணோக்கினார்

"மறுநாளிலே இயேசு எருசலேமுக்கு வருகிறாரென்று பண்டிகைக்கு வந்த திரளான ஜனங்கள் கேள்விப்பட்டு, குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு, அவருக்கு எதிர்கொண்டுபோகும்படி புறப்பட்டு: ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரித்தார்கள்." (யோவ 12:12-13) ஓசன்னா என்று ஆரவாரித்த இந்த ஜனக்கூட்டத்தை இயேசு எவ்வாறு கண்டிருக்க வேண்டும்?

ஒரு நாளைக்கு போற்றுவதும், மற்றொரு நாளில் வன்முறையோடு தூற்றும் மனநிலையைக் கொண்டிருந்த நிலையற்ற இந்த ஜனங்களை எளிதில் அவர் கற்பனை செய்திருப்பார். ஆனால் இப்படியாக சிந்தித்திருக்க வாய்ப்பில்லை. அநேக ஜனங்கள் ஓசன்னா என்பதற்கு துதியின் ஆரவாரம் என்று எண்ணினார்கள். ஆனால் ஓசன்னா என்பதற்கு "இப்போதே இரட்சியும்" என்று பொருள். மேலும் இந்த சிந்தையிலும் இயேசு என்ற நாமமும் அடங்கும். இதற்கு யேகோவாவே இரட்சியும் என்று பொருள்.

இப்படியாக அவர்களின் உதவிக்குண்டான ஆரவாரமாய் இருந்தது. ஆகவே இயேசு இந்த ஜனக்கூட்டத்தை கடக்கையில் அவர்களில் ஒடுக்கப்பட்டதும், நம்பிக்கையற்ற நிலையையும் கண்டு மனதுருகி இருக்க வேண்டும். ஏனெனில் அவர்களுடைய தேசத்தை மீண்டும் தங்களுடைய கரங்களில் மீட்டுக் கொடுப்பார் என்று அவர்கள் இயேசுவை எதிர்பார்த்தனர். ஆனாலும் அந்த சூழ்நிலையில் இயேசுவால் ஒன்றும் செய்ய இயலாது என்று அறிந்த இயேசு நிச்சயமாக வேதனைப் பட்டிருப்பார்.

### அவருடைய இறுதி சிந்தனைகள்

இந்த பூமிக்குரிய வாழ்க்கையின் இறுதி நாட்களில் இயேசு வந்தபோது, அவருடைய சிந்தையில் இடம்பிடித்திருந்த முக்கியமான சிந்தைகளை நாம் புரிந்துகொள்ள வேண்டும். "என் பரலோக தந்தை எனக்கு முன் வைத்த காரியங்களை முழுமையான தெய்வீக அங்கீகரிப்போடு மனத்தாழ்மையுடன் கீழ்ப்படிதலுடன் நான் நிறைவேற்றி முடித்துவிட்டேனா? மீதியிருக்கும் பரிசோதனைகளிலும் உண்மையுள்ளவனாக நிலைத்திருப்பேனா? என்னை உபத்திரவப்படுத்திக் கொண்டு கொடுமைப்படுத்துபவர்களை நான் எவ்வாறு பார்ப்பேன்? சிலுவையில் அறையப்படும் நான் பொறுமையோடு சகிப்பேனா? இந்த உலகத்திற்காக என்னுடைய ஜீவனைக் கொடுப்பதினிமித்தம் வாக்களிக்கப்பட்ட ஜீவனைப் பெறுவேனா? என்ற சிந்தைகள் முதலில் காணப்பட்டிருக்க வேண்டும்.

என்னுடைய குடும்பத்தை இனி யார் நடத்துவார்கள்? என்னுடைய ஆவிக்குரிய குடும்பத்தை இனி எவ்வாறு ஊக்குவிப்பேன்? விசேஷமாக என்னுடைய பிரிவுக்கு பின் நடக்கக்கூடிய சம்பவங்களுக்கு ஏற்றவிதமாய் என்னுடைய அப்போஸ்தலர்களை எவ்வாறு ஆயத்தப்படுத்துவேன்? இந்த சிந்தனைகளே ஆண்டவருடைய சிந்தையில் இருந்திருக்க வேண்டுமென்று பூமிக்குரிய அவருடைய ஊழியத்தின் கடைசி நேரங்களில் அவர் குறிப்பிட்ட செய்திகளிலிருந்தும் அவர் செய்த கிரியைகளிலிருந்தும் நாம் காணலாம்.

தம்முடைய குடும்பத்திற்காக அவர் கவலைப்பட்ட காரியத்திலிருந்து நாம் துவங்கலாம். இயேசுவை தவிர, "ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள்" என்ற வாழ்த்துதலைப் பெற்ற மரியாளை யாரால் பராமரிக்கக்கூடும்? (லூக் 1:28) யாத்திராகமம் 20:12-ம் வசனத்தில் ஐந்தாம் கற்பனையை இவ்வாறாக வாசிக்கிறோம். "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக." இதை குறித்த விளக்கத்தை அப்போஸ்தலர் பவுல் 1 தீமோ5:8-ல் குறிப்பிடுகிறார். "விசாரிப்பது" என்ற ஒரு வார்த்தை வயது சென்ற பெற்றோரை பராமரிப்பதைக் குறிக்கும். இயேசுவின் கண்களில் மரியாள் தம்முடைய தாயாக மட்டுமல்ல, விசுவாசத்திலும் ஆவிக்குரிய கனிகளும் நிறைந்த ஒரு ஸ்திரீயாகக் காணப்பட்டாள். தேவனுக்குக் கீழ்ப்படிந்ததினிமித்தமாக தன்னுடைய முதல்பேரான குமாரனைப் பெற்றதினால் அவள் தன்னுடைய நற்பெயரை இறுதிவரைக்கும் பலி செலுத்த வேண்டியதாயிருந்தது. அதற்காக அவள் மேல் சுமத்தப்பட்ட ஏச்சு பேச்சுகள் மிக அதிகம். இக்காரியங்களை இயேசு நிச்சயமாக சிந்தையில் கொண்டிருந்து இயேசு தம்முடைய உன்னதமான கனத்தையும், அன்பையும் செலுத்தியிருக்க வேண்டும். மேலும் அவர் உலகத்தில் இருந்தவரைக்கும் சகல பொறுப்போடும் அவளை கவனித்திருக்க வேண்டும். "அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு

அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார். அந்நேரமுதல் அந்தச் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டான்" (யோவ 19:26-27) என்று சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த அவர் இறுதியாக கூறினார். இயேசுவின் பரிசுத்தமான இருதயத்தில் மற்றவர்களுக்காக அக்கறைப்படும் இறுதியாக வெளிப்பட்ட அவருடைய சிந்தனைகளை எண்ணி நாம் வியப்படைகிறோம்.

ஆனால் எழுதியிருக்கிற படி குடும்பம் என்றால், இரத்தசம்பந்தமான உறவைக் கொண்டார்கள் மட்டுமல்ல, நம்முடைய இரத்தத்தையே கொடுக்கக்கூடியவர்களையும் எண்ணலாம். ஆகவே அடுத்து இயேசுவின் சிந்தை அவரை சுற்றியிருந்த ஆவிக்குரிய குடும்பத்தைக் குறித்து கவலைப்பட்டது. அவர் பிடிப்பட்ட பின்பு விசேஷமாக தம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட அப்போஸ்தலர்கள் சிதறடிக்கப்படுவார்கள் என்று அவர் நன்கு அறிந்திருந்தார். அவர் துவங்கி வைத்த வேலையை எடுத்து நடத்த வேண்டும் என்ற பொறுப்பில் இருந்த அவர்களை பற்றின கவலைகள் என்னவென்பதை நம்மால் கற்பனை செய்ய முடியும். வெகு சீக்கிரத்தில் தாம் மரிக்கப்போவதை அறிந்த இயேசு கெத்சமனே தோட்டத்திற்கு நடந்து செல்கையில் சகரியாவில் உள்ள தீர்க்கதரிசன வசனங்களை மேற்கோள் காட்டினார். "அப்பொழுது, இயேசு அவர்களை நோக்கி: மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள்." (மத் 26: 31)

ஆனால் இயேசு ஒரு பரிபூரண மனுஷர்! இவை அனைத்தும் அவருடைய கண்கள் எவ்வாறு கண்டிருக்க வேண்டும் என்பதையும், அதினால் அவர் எந்தெந்த விதத்தில் பாதிக்கப்பட்டார் என்பதையும் சுருக்கமாக காணமுடியுமா? "திரளான ஜனங்களைக் கண்டு மனதுருகினார்" என்று வசனங்கள் இயேசுவை குறித்து சொல்லயிருக்க தம்முடைய அப்போஸ்தலர் மேல் அவர் எவ்வளவாய் மனதுருகியிருக்க வேண்டும்? "மனதுருகி" என்ற வார்த்தையின் பொருள் என்ன? ஆழமான இரக்கம் மற்றும் துரதிஷ்டவசமாக உபத்திரவப்படுபவர்கள் மேல் வெளிப்படக்கூடிய உணர்ச்சிபூர்வமான துக்கம் என்று கூறலாம். இயேசு தம்முடைய சீஷர்கள் மேல் வைத்த ஆழமான உணர்வுபூர்வமான வேதனைகளை நாம் புரிந்துகொள்வதற்கு இந்த விளக்கங்கள் உதவியாக இருக்கிறது.

இயேசு லாசருவின் குடும்பத்தைப் பொருத்தவரையில் கொண்டிருந்த ஆழமான உணர்வுகளை நாம் நினைவில் கொண்டுவந்து இந்த சூழ்நிலையில் அவர் எவ்வளவாய் உணர்ச்சிவசப்பட்டார் என்பதை புரிந்துகொள்ளலாம். யோவான் 11-ம் அதிகாரம் முழுவதிலும் இயேசு தனிப்பட்ட விதத்தில் அக்கறை எடுத்த காரியங்கள் குறிப்பிடுகிறது. "இயேசு இருந்த இடத்தில் மரியாள் வந்து, அவரைக் கண்டவுடனே, அவர் பாதத்தில் விழுந்து: ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான் என்றாள். அவள் அழுகிறதையும் அவளோடே கூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கித்துயரமடைந்து: அவனை எங்கே வைத்தீர்கள் என்றார். ஆண்டவரே, வந்து பாரும் என்றார்கள். இயேசு கண்ணீர் விட்டார். அப்பொழுது யூதர்கள்: இதோ, இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார் என்றார்கள்!" ( யோவ 11: 32-36)

இயேசு ஆவியில் கலங்கி, எவ்வளவாய் வேதனைப்பட்டார். உண்மையில் அவர் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது ஏன்? அவர் லாசருவுக்காக முழுமையாக கண்ணீர் சிந்தவில்லை. ஏனெனில் நித்திரையிலிருந்த லாசரு எழும்பி வருவார் என்று இயேசு அறிந்திருந்தார். ஆகவே லாசருவின் குடும்பத்தின் மேல் உள்ள ஆழமான அன்பினிமித்தம் அவர் பெற்ற உணர்வுகள் கண்ணீராக வழிந்தது. இப்படிப்பட்ட அன்பின் உணர்வுகளினால் கெத்சமனே தோட்டத்திற்கு பயணிக்கும் முன் அவர் பெற்றிருந்த மனநிலையை அவர் தம்முடைய சீஷர்களிடத்தில் கொண்டிருந்த அன்பிற்கு ஒப்பிட்டு பார்த்து புரிந்துகொள்வது நமக்கு உதவியாய் இருக்கும்.

ஆம்! அப்போஸ்தலர்கள் அவரை கைவிடப்போவதை அறிந்திருந்தார். ஆனாலும் இன்று நம்முடைய இருதயங்களை அவர் புரிந்துகொள்ளும் வண்ணமாக அவர்களின் இருதயத்தின் நோக்கங்களை அவர் புரிந்திருந்தார். அப்போஸ்தலர்கள் தங்களைக் குறித்து அறிந்திருப்பதைக் காட்டிலும், அவர்களுடைய திறமையையும் இயேசுவுக்காக அவர்கள் கொண்டிருந்த அர்ப்பணிப்பையும் அவர் நன்கு அறிந்திருந்தார். இயேசுவை பேதுரு அறிந்திருந்தபோது அவரை சபிக்கவும், மறுதலிக்கவும் துவங்கினார். "அப்பொழுது கர்த்தர் திரும்பி, பேதுருவை நோக்கிப்பார்த்தார். சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வசனத்தை உடனே பேதுரு நினைவுகூர்ந்து,

வெளியே போய், மனங்கசந்து அழுதான். இயேசுவைப் பிடித்துக்கொண்ட மனுஷர் அவரைப் பரியாசம்பண்ணி, அடித்து,"(லூக் 22:61-63).

இயேசுவின் இருதயம் நொறுங்கக்கூடிய இந்த காட்சியைக் குறித்து கற்பனை செய்து பாருங்கள். ஆயினும் பேதுருவின் இந்நிலைமையினிமித்தம் இயேசு பேதுருவுக்காக ஜெபித்தார். "பின்னும் கர்த்தர்: சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உன்னை புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்." (லூக் 22:31-32) காலப்போக்கில் பேதுரு தன்னுடைய பெலவீனத்தை மேற்கொள்வார் என்ற முழுமையான எதிர்பார்ப்பு இயேசுவின் வார்த்தைகளுக்குள் புதைந்திருப்பதைக் காணலாம். நம்முடைய ஆண்டவர் பேதுருவுக்குள் இருந்த பாறையைக் கண்டார். இனி உருவாகக்கூடிய பேதுருவை அவர் கண்டு, பேதுரு அப்படிப்பட்டவராக மாற வேண்டும் என்று ஜெபித்தார். இப்படியாக நம்முடைய விஷயத்திலும் நம்மை குறித்து நாம் சரியாக புரிந்துகொள்ளாத போதிலும், நமக்குள் இருக்கும் காரியங்களை அவர் நன்கு உணர்ந்திருக்கிறார்.

**அவிசுவாசியாக இராமல் நம்பிக்கை வை**

அடிப்படை சத்தியமாகிய அவருடைய உயிர்த்தெழுதலைக் குறித்த சகோதரர்களின் வார்த்தையை சந்தேகப்பட்ட அப்போஸ்தலர் தோமாக்குள் இருந்த உறுதியுள்ள விசுவாசத்தைக் குறித்தும் இயேசு அறிந்திருந்தார். தோமா இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்த வெளியரங்கமான ஆதாரங்களைக் காண வேண்டும் என்று கூறினார். "மற்றச் சீஷர்கள்: கர்த்தரைக் கண்டோம் என்று அவனுடனே சொன்னார்கள். அதற்கு அவன்: அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என்விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்றான். மறுபடியும் எட்டுநாளைக்குப்பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டிக்குள்ளே இருந்தார்கள்; தோமாவும் அவர்களுடனேகூட இருந்தான்; கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். பின்பு அவர் தோமாவை நோக்கி: நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப்பார், உன் கையை நீட்டி, என் விலாவிலேபோடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார்." (யோவ 20:25-27)

இயேசு அவரை கடிந்து கொள்ளாமல், அவரால் முடிந்த வரைக்கும் தோமாவை நம்ப வைத்தார். இவ்வழியில் இயேசு தோமாவின் மேல் வைத்த அன்பை உறுதிப்படுத்தினார். இது ஒரு சிறப்பான மாதிரியாக நமக்கு முன் வைக்கப்படுகிறது. இக்கால அவ்விசுவாசமுள்ள உலகத்தாரை நாம் எப்படிப்பட்ட கண்களோடு காண வேண்டும்? அவர்கள், "நம்பக்கூடிய ஆதாரங்கள்" (அப் 1:3) கொடுக்கப்பட்ட பின் காலப்போக்கில் விசுவாசிகளாக அவர்கள் மாற்றம் அடைவார்கள் என்ற கண்ணோட்டத்தில் நாம் அவர்களை காணலாமா?

உங்களையும் என்னையும் குறித்து என்ன சொல்லுவோம்? நம்முடைய பெலவீனமான நேரங்களில், இயேசு தோமாவை பார்த்ததுபோல, நம்மையும் பார்த்திருப்பாரா? உண்மையில், அவர் வார்த்தைகளினால் தோமாவிடம் பேசினார். ஆனால், "அதற்கு இயேசு: தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்." ஆகவே இயேசுவின் துவக்க ஜெபத்தில், "நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" (யோவ 20:29) என்று ஜெபித்தார்.

இயேசு நம்மை குறித்து இவ்வாறாக சிந்தித்து தேவனுடைய ஆசீர்வாதங்களை நாம் பெறுவதற்கு இந்தளவுக்கு அவர் விரும்பினார் என்பதை நாம் அறிந்துகொள்வது எவ்வளவு அற்புதமான காரியமாய் இருக்கிறது. பொதுவாக சகோதரர்கள் தங்களுடைய குறைபாடுகளை மையப்படுத்துவார்கள். ஆனால் இயேசு பேதுருவையும், தோமாவையும் மனவுருக்கத்தோடு பார்த்தார் என்பதை உணராதிருப்பார்கள். அவர் நம்மை பார்க்கும்பொழுது, நாம் எப்படியிருக்கிறோம் என்பதை மட்டுமல்ல அவருடைய ஆவியினாலும், உதவியினாலும் நாம் என்னவாக மாறமுடியும் என்பதை அவர் காணக்கூடியவராய் இருக்கிறார்.

**அவர் தம்முடைய சீஷர்களுக்காக கவலைப் பட்டார்**

அவர் காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இராத்திரியிலே, தம்முடைய சீஷர்கள் ஒரு

முக்கியமான பரீட்சையை எதிர்நோக்க போகிறார்கள் என்பதை இயேசு அறிந்திருந்தார். சுவிசேஷ யுக சபையின் அஸ்திபாரம் இவர்களைக் கொண்டு ஸ்தாபிக்கப்பட போவதையும், இவர் அறிந்திருந்தார். ஆகவே யோவான் 13-ம் அதிகாரத்தில் தம்முடைய மரணத்தைக் கூறி சீஷர்களை ஆயத்தப்படுத்துவதற்கு அவர் விசேஷித்த கவனம் செலுத்துவதைக் காணலாம். யோவான் 13-17-ம் அதிகாரம் வரைக்கும் சீஷர்களுக்கு வலியுறுத்த வேண்டிய சில முக்கியமான பாடங்களைக் கற்பித்தார். சகோதரர்களுக்கு தாழ்மையுள்ள ஊழியக்காரர்களாக மாறக்கூடிய பாடம் (13:4-17), அன்பின் புதிய பிரமாணம் (13:34-35), வரக்கூடிய தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியை பற்றிய பாடம் (14:16-18; 25, 26) அவர்களைக் குறித்து அவர் ஆழமாகக் கவலைப்பட்டார். எல்லா சூழ்நிலைகளிலும் தேவனுடைய உதவியை அவர்கள் பெறுவார்கள் என்று அவர் உறுதியளித்தார். இயேசுவின் ஜெபத்திலுள்ள வார்த்தைகளைக் கவனித்துப் பாருங்கள்.

"நான் உலகத்தானனல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல. உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம். நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன். அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன். நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்."(யோவ 17: 16-21)

அவருடைய ஜெபத்தில் அவருடைய நாமத்தில் கேட்கப்படும் ஜெபங்களுக்கு உடனடியாக பதில் அளிக்கப்படும் என்று இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கற்பித்தார். (யோவ 16:23, 24, 26, 27) அதற்குபின் யோவான் 17:4, 5 மற்றும் 17:24-ம் வசனங்களில் இயேசு தமக்காக விண்ணப்பங்களை பிதாவினிடத்தில் ஏறெடுத்தார். அவருக்கு முன்னதாகக் கொடுக்கப்பட்ட மகிமையைக் கொடுக்கும்படி வேண்டிக் கொண்டார். இரண்டாவதாக, "பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்." பரலோகத்தில் தம்முடைய மணவாட்டி தம்மோடுகூட மகிமையிலிருக்கும்படி வேண்டிக் கொண்டார். மேலும் இந்த உலகத் தோற்றத்திற்கு முன்பாக பிதாவினிடத்தில் அவர் பெற்றிருந்த அன்பை வெளிப்படுத்தும்படி கேட்டுக் கொண்டார். இந்த விண்ணப்பங்களின் முழுமையான அர்த்தங்களைப் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். ஏனெனில், நம்முடைய இறுதி மணி நேரங்களில் இயேசுவுக்குள் காணப்பட்ட சகல விருப்பங்களைக் குறித்து நாம் சிந்திக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

**அவர் தம்முடைய துரோகிகளுக்காகவும் மரித்தார்**

இப்பொழுது இயேசு தம்மேல் குற்றஞ்சாட்டினவர்களை எவ்வாறு கண்டிருக்க வேண்டும் என்பதைப் பார்க்கலாம். இயேசுவுக்கு பகைவர்களைக் குறித்த எந்த பஞ்சமும் இல்லை - யூதாஸ், பரிசேயர்கள், சதுசேயர்கள், வேதபாரகர்கள், சட்டவல்லுநர்கள், ஆலோசனை சங்கத்தார், ஏரோது, பிலாத்து, பொய்சாட்சிகள், "அவனை சிலுவையில் அறையும், அவனை சிலுவையில் அறையும்" என்று கூக்குரல் இட்ட ஜனக்கூட்டம் இவ்வளவு பேரும் இயேசுவுக்கு எதிராய் நின்றனர். இவர்கள் அனைவரையும் இயேசு எவ்வாறு கண்டார்? உண்மையில் மற்றவர்களைக் காட்டிலும் இவர்கள் மிகக் கொடூரமானவர்கள் என்றும், வஞ்சனை உள்ளவர்கள் என்றும் இயேசு அறிந்திருந்தார். ஆனால் இவர்கள் அனைவருக்காகவும் இயேசு தம்முடைய ஜீவனைக் கொடுக்க வந்தார். உண்மையில் இவர்களுக்காக அவர் அதிகமாகக் கவலைப்பட்டு, எருசலேமுக்காக அழுதார் என்று வாசிக்கிறோம். (லூக் 19:41) இவர்களின் கிரியைகளுக்கு பின்னணியில் ஒரு மிகப் பெரிய தீமை இருந்ததாக பேதுரு பிற்பாடு கூறினார். "சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச்செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்." (அப் 3:17)

இந்த உண்மையான தீமைக்கு பின்னணியில் அவ்விசுவாசிகளின் சிந்தைகளை உருவாக்கின இப்பிரபஞ்சத்தின் தேவனாகிய சாத்தான் இருப்பதை இயேசு கண்டார். இயேசுவின் இரக்கத்தையும், மன்னிப்பையும் பேதுரு ஏற்றுக்கொண்டார். அவர் பெற்ற முழுமையான மன்னிப்பையும், இரக்கத்தையும் அதே அளவில் மற்றவர்களுக்குப் பிரதிபலித்தார்.

அதேபோல, நாம் ஒவ்வொருவரும் பெற்ற நன்மைகளை அதிகமான இரக்கத்தோடும், உருக்கத்தோடும் பாவிகளை பாவத்தை விட்டுப் பிரித்து ஒவ்வொருவரையும் ஒவ்வொருவருக்குள் இருக்கும் நற்குணங்களை மட்டுமே காண வேண்டும் என்று நாமும் புரிந்துகொள்ள வேண்டும். இதை செய்வது எளிது அல்ல, ஆனால் நம்முடைய இருதயங்களில் காணப்படும் அகாபே அன்புக்கு அதுவே நமக்கு முன் வைக்கப்பட்ட இலக்காய் இருக்கிறது.

**அவர் அதிகமாகக் கவலைப்பட்டது**

கெத்சமனே இருளில் இயேசு தாம் பிடிபடுவதற்கு ஆழமான துயரத்தோடு காத்திருந்தபோது, நிச்சயமில்லாத அநேக காரியங்களை தம்முடைய கண்களின் வழியாகக் கண்டார். தேவன் தாம் அனுப்பின நோக்கத்தின் சகல வேலைகளையும் அவர் பரிபூரணமாக நிறைவேற்றினாரா? அதில் தவறுகளுக்கு எந்த விதமான இடமுமில்லை. சிறிய காரியமும் கூட பிசகவில்லை. தேவனால் அங்கீகரிக்கக்கூடிய பரிபூரண நிலையில் அனைத்தும் காணப்பட்டது. ஆயினும் இதற்கான பாரம் நம்முடைய ஆண்டவரை அதிகமாக அழுத்தியது. அவர் பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பித்தார். (எபிரெயர் 5:7; லூக் 22:41-44)

"ஆண்டவரின் கெத்சமனே அனுபவங்கள் அவருடைய மரணத்தைக் குறித்து அல்ல, அவருடைய பிதாவின் சித்தத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படிய வேண்டும் என்ற விதிமுறையிலிருந்து தவறி நித்தியமாக மரித்துவிடுவாரோ என்ற பயம் அவருக்குள் இருந்ததாக பவுல் உறுதிபடுத்துகிறார். தேவனுடைய தூதன் ஒருவர் தோன்றி அவரை பெலப்படுத்தினார். அந்நொடிப் பொழுது வரைக்கும் பிதாவாகிய தந்தைக்கு அவர் முழு விசுவாசத்தோடு காணப்பட்டதாகவும், இனிவரக்கூடிய சோதனைகளில் முழுமையான தெய்வீக வழிநடத்துதல் இருக்கும் என்றும் அவர் உறுதியளித்தார். அந்நேரம் துவங்கி இயேசுவினிடத்தில் காணப்பட்ட சகல வேதனைகளும் பயங்களும் அகன்றது. இந்நாள் வரைக்கும் அவர் செய்த காரியங்களை பிதா அங்கீகரித்தார் என்றும், அவருடைய ஆசீர்வாதங்கள் அவரோடுகூட இருப்பதையும் அவருக்கு உறுதியளிக்கப்பட்டபொழுது இனி வரக்கூடிய எவ்விதமான காரியங்களையும் அவர் சகிக்கக்கூடிய தைரியத்தைப் பெற்றார். மீதியிருந்த இரவு பகுதி முழுவதிலும் அதை தொடர்ந்து வந்த பகலிலும் உச்சக்கட்டமான கொடுமையான சூழ்நிலைகளில் இயேசு மட்டுமே அமைதியுள்ளவரிலும் அமைதியுள்ளவராகக் காணப்பட்டார்." (R5551)

நம்முடைய கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்பொழுது அவருடைய விசுவாசம் அவருடைய உயிர்த்தெழுதலில் உறுதியளிக்கப்பட்டது. பரிபூரணமுள்ள நம்முடைய ஆண்டவர்தாமே இப்படிப்பட்ட சூழ்நிலையில் அகப்பட்டு இருக்கும் பொழுது நாமும் இப்படிப்பட்ட சூழ்நிலையில் அகப்படுவது ஆச்சரியமல்லவோ? நம்முடைய விசுவாச நடைகளைக் குறித்தும் நம்முடைய அவலட்ணமான அபூரணங்கள் வெளிப்புறமாகக் காணப்படும்போது நம்முடைய எதிர்காலத்தைக் குறித்த அதிகமான கவலைகள் நமக்குள் ஏற்படலாம். ஆனால் இரக்கமுள்ள பிரதான ஆசாரியர் நமக்காக நிற்பது எவ்வளவு அற்புதமான காரியம்! "நம்முடைய ஆண்டவரின் அனுபவங்களை ஏறத்தாழ சீஷர்களும் அடைந்தார்கள். ஆனால், பிதா தாமே அவர்கள் மேல் வைத்த அன்பினால் அவர்களில் பாவங்கள் முற்றிலும் அகற்றப்பட்டது என்பதை அறிந்தபோதும், அவருடைய கிருபை அவர்களுக்குப் போதும் என்று உணர்ந்தபோதும், இரட்சகருடைய நீதியின் சால்வையை அவர்கள் உடுத்தினவர்களாக எல்லா சூழ்நிலைகளிலும் கொடூரமான மரணம் நெருக்கினாலும் அவைகளை தைரியமாக எதிர்நோக்க வல்லமை பெறுவார்கள்." (R5551)

"நீங்கள் பணஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே" (எபி 13:5) என்ற வசனத்தை இயேசுவின் ஞாபகார்த்த அடையாளங்களில் பங்கெடுக்கக்கூடிய நாம் அனைவரும் இவ்வார்த்தைகளை முழுமையாக நம் மனதில் கொண்டிருப்போம்.

"உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி, நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்." (பிலி 1:5,6)

இயேசுவின் கண்களின் வழியாக நாம் ஒவ்வொருவரும் அவரால் நேசிக்கப்பட்டவர்களாக இருக்கிறோம். நாம் அனைவரும் அந்த அன்புக்குப் பாத்திரவான்களாக நம்மால் முடிந்த வரைக்கும் பெற்ற நன்மைகளையும், இரக்கங்களையும், மனவுருக்க த்தையும் மற்றவர்களிடத்தில் பிரதிபலிப்போமாக.

முடிவு பரியந்தம் நீடிய பொறுமையோடு சகித்தார்

# அவருடைய இறுதி மணி நேரங்கள்



"அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்." 1 பேதுரு 2:22-23.

**Tom Ruggirello**

இயேசு ஆறு மணி நேரங்கள் சிலுவையில் தொங்கினார். இந்த கொடுமையான வேதனையின் அனுபவத்தை முழுமையாக யாராலும் புரிந்து கொள்ளமுடியாது. "excruciating" என்ற நம்முடைய ஆங்கில வார்த்தையானது, சிலுவையில் அறையப்பட்டவர்களில் மிக மோசமான பாடுகளையும், உபத்திரவங்களையும் விவரிப்பதற்காக பயன்படுத்தப்படுகிறது. நம்முடைய சொந்த மொழியிலும் வேதனையின் உச்சக்கட்டம் அல்லது எல்லைக்கு அப்பாற்பட்ட வேதனை என்று புரிந்துகொள்ளலாம்.

**முதலாம் பரியாசம்**

இப்படிப்பட்ட கொடூரமான வேதனையை அனுபவிக்கையில் இயேசுவின் சிந்தை அமைதியாக இருக்கவில்லை. முதலில் அவரை கடந்து சென்றவர்கள் பேசின ஏளனமான பேச்சுக்களையும், ஏச்சுக்களையும் அவர் கேட்டுக் கொண்டிருந்தார். அவர்களோடு கூட நின்று கொண்டிருந்த பிரதான ஆசாரியர்களும், வேதபாரகர்களும், இஸ்ரயேலின் மூப்பர்களும் அவரை பரியாசம் செய்து கடுமையாக நிந்தித்தார்கள். பரிசுத்த ஜனங்கள் என்று அழைக்கப்பட்ட இவர்கள் இடத்தில் இவ்வளவு ஆழமான கொடூரமான தன்மையைக் காண்பது ஆச்சரியமாக இருக்கிறது. இயேசு எந்தவிதமான பதிலும் அவர்களுக்குக் கொடுக்கவில்லை. ஆனால், "நீர் தேவனுடைய குமாரனோ?" என்று அவர்கள் கேட்கையில் நிச்சயமாக அமைதியாக இருந்தது ஒரு சவாலாய் இருந்திருக்கக்கூடும். "தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே ரட்சித்துக் கொள்; நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கிவா என்று அவரைத் தூஷித்தார்கள்" (மத்27: 40)

இந்த ஒரு காரியம் இயேசுவின் ஊழிய நாட்களின் துவக்கத்தில் யூதேயாவின் வனாந்தரத்தில் இதே வார்த்தைகளைக் கொண்டு சாத்தான் அவரை சோதித்தது, நம்முடைய சிந்தைக்கு வரலாம். குறிப்பாக இந்த சோதனைகள் வனாந்தர சூழ்நிலையில் அவருக்கு எதிராக எய்யப்பட்டாலும் சிலுவையில் அவர் தொங்கினபோது அதே சவால் அவருக்கு முன் வைக்கப்பட்டது. "அப்பொழுது பிசாசு அவரை நோக்கி: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல் அப்பமாகும்படி சொல்லும் என்றான்." (லூக் 4:3) இயேசுவின் புத்திர சுவிகாரத்தை சாத்தான் ஒரு சவாலாக முன் வைத்தான்.

மூன்றாவது சோதனையிலும் இதே வார்த்தையை சாத்தான் பயன்படுத்தினான். "அப்பொழுது அவன் அவரை எருசலேமுக்குக் கொண்டுபோய், தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி: நீர் தேவனுடைய குமாரனேயானால், இங்கேயிருந்து தாழக்குதியும்." (லூக் 4:9) "நீர் தேவனுடைய குமாரனேயானால்" என்ற கேள்வி சாத்தானால் பயன்படுத்தப்பட்ட பொதுவான ஒரு ஆயுதமாக இருந்தது. ஜனங்களிடத்தில் இந்த ஒரு முக்கியமான காரியத்தை நிரூபிக்க வேண்டும் என்பதே இயேசுவின் சிந்தையிலும் காணப்பட்டது. இவர் தேவனுடைய குமாரன் என்று எவ்வாறு இவர்களால் அறிந்துகொள்ள முடியும் ?

வனாந்தரத்தில் நடத்தப்பட்ட மூன்று சோதனைகளை விவரிக்கையில் லூக்கா சில ஆர்வமூட்டும் காரியங்களைக் குறிப்பிடுகிறார். "பிசாசானவன் சோதனையெல்லாம் முடிந்தபின்பு, சிலகாலம் அவரை விட்டு விலகிப்போனான்." (லூக் 4 :13 இயேசு தமக்கு முன் வைக்கப்பட்ட எந்த ஒரு காரியத்தையும் பெறாதபடிக்கு உறுதியாக இருந்தார் என்பதை சாத்தான் அறிந்து கொண்டான். சாத்தானுடைய வார்த்தைகளில் அவன் வேதவசனங்களைப் பயன்படுத்தினாலும், அதற்குள் இருந்த வெற்றிடத்தை இயேசு அறிந்திருந்தார். கனி பறிப்பதற்கு ஏற்றகாலம் என்பது போல, சாத்தான் அந்த ஒரு சமயத்தை கண்டு பயன்படுத்தினான். இயேசுவை தடுமாற செய்வதற்கும் அவர் தவறான காரியங்களைப் பேசி அதினிமித்தம் இறுதி நொடிப் பொழுதில் அவருடைய வெற்றியை அவரிடத்திலிருந்து பறிப்பதற்கும் அவன்

வகைத்தேடினான். இயேசுவின் மேல் பெறக்கூடிய ஒரு வெற்றி தேவன் மேல் பெறக்கூடிய வெற்றியாக அவன் எண்ணினான். இப்படிப்பட்ட சிந்தனைகளை அவன் செயல்முறைப்படுத்துவதற்கு அவன் எவ்வளவு திட்டம் தீட்டியிருப்பான்?

### சிலுவையின் ஞாபகங்கள்

இயேசு சிலுவையில் தொங்கினபோது, அவர் உடல் ரீதியாக யூதேயா வனாந்தரத்தின் குளிரிலும், பசியிலும், தாகத்திலும் மிகவும் அவதிப்பட்டார். அவர் ஒரு ரோம சிலுவையிலிருந்து தொங்கியபோது அவருடைய ஒவ்வொரு நரம்பும் சோதிக்கப்பட்டு எல்லைக்கு அப்பால் இழுக்கப்பட்டது. ஜனங்களும் அங்கிருந்த தலைவர்களும் - இவன் தேவனுடைய குமாரனா என்று பரியாசம் பண்ணி, ஏசுகையில் அவருடைய சிந்தனைகளிலிருந்த பரலோகப் பிதாவைக் குறித்த ஞாபகங்களை நாம் கற்பனை செய்யலாம். ஜனங்கள் தங்களுடைய வாழ்க்கை இறுதி நிமிடங்களில் தாங்கள் வாழ்ந்த மகிழ்ச்சியான சம்பவங்களை நினைவு கூறுவார்கள் என்று சொல்லப்படுகிறது. அதுபோல இயேசுவும் பிதாவோடு இருந்த அந்த மகிழ்ச்சியான நேரங்களை நினைத்திருக்க வேண்டும். அழகான ஞாபகங்கள் அவரை சுற்றியிருந்த அவலட்சணமான சூழ்நிலைக்கு எவ்வளவு முரண்பாடாய் இருந்திருக்க வேண்டும். அவர்கள் இருவரும் பரிபூரண மனுஷனை சிருஷ்டிப்பதற்காக கிரியை செய்த மகிழ்ச்சியான நாட்களைக் குறித்த நினைவுகள் இயேசுவின் இருதயத்திற்கு மகிழ்ச்சியைத் தந்திருக்க வேண்டும். பல சூழ்நிலைகளில் இயேசு மகிழ்ச்சியோடு இருந்தார் என்று வசனங்கள் குறிப்பிடுகிறது. அவர் தேவனுடைய மடியில் செல்லப்பிள்ளையாக இருக்கும் உரிமையைப் பெற்றிருந்த விலையுயர்ந்த நினைவுகள் அவருக்குள் இருந்திருக்கும். (நீதிமொழிகள் 8:30) மகிமையுள்ள தந்தையின் அன்பும், கனிவும், இரக்கமும் அவருடைய சிந்தையில் நிறைந்த நீங்கா நினைவுகளாக நிறைந்திருந்தது.

### அறியாமையினால் செய்த காரியங்கள்

இயேசு, பரியாசம் பண்ணப்பட்டு, வையப்பட்டு அவருடைய புத்திர சுவிகாரத்தைக் குறித்து கேள்வி எழுப்பப்பட்டபோது அவரால் எவ்வாறு பதில் கூறியிருக்க முடியும்? அவர்கள் அற்புதங்களைக் கண்டால் மட்டுமே அந்த பதிலைப் புரிந்துகொள்வோம் என்று எதிர்பார்த்ததினால் அவரை சிலுவையிலிருந்து இறங்கி வரச் சொன்னார்கள். ஆனால் தனக்காகவும், ஜனத்தாரின் நன்மைக்காகவும் அவரால் இதை செய்ய முடியாது என்று அறிந்திருந்தார். அப்படி செய்திருந்தால் அனைத்தும் பயனற்றுப் போயிருக்கும். ஆகவே மௌனமாய் சிலுவையில் தொங்கியதே சரியான பதிலாக இருந்தது. ஏசாயாவினால் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டதுபோல அவர் சத்தமில்லாத ஆட்டைப்போல் தொங்கினார். (ஏசாயா 53:7)

சற்று காலத்திற்குப் பின்பு எருசலேமின் ஆலயத்தில் யூதர்களை சந்தித்த பேதுரு "சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச்செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்" என்று கூறினார். தம்மை வெறுத்தவர்களை இயேசு கண்ணோக்கினபோது, அறியாமையின் வல்லமையை அவர் புரிந்துகொண்டார். அவர் உலகத்தின் ஒளியாய் இருந்தாலும் அந்த ஒளி வஞ்சிக்கப்பட்டதும், தவறாக வழிநடத்தப்பட்ட இருதயங்களுக்குள் ஊடுருவிச் செல்ல முடியவில்லை. ஏனெனில், சாத்தான் இவ்வஞ்சகங்களின் ஆண்டவர் என்று நிரூபித்துக் கொண்டிருந்தான். இங்கு கூடியிருந்த கூட்டம் அவனுடைய வல்லமைக்கு ஆதாரமாக நின்றார்கள்.

### அவருடைய இராஜ்யத்தின் நம்பிக்கை

அதன் மேல் பழி சுமத்தியவர்களின் வார்த்தைகளை இயேசு கேட்டபோது, சகலவிதமான அறியாமைகளும், வஞ்சகங்களும் கடந்து சென்று சமுத்திரம் ஜலத்தினால் நிரப்பப்பட்டது போல தேவனை அறிகிற அறிவினால் இந்த உலகம் நிரப்பப்படுவதைக் குறித்து அவர் சிந்தித்திருக்க வேண்டும். அப்பொழுது அவருடைய ஈடுபலியின் கிரயம் அனைவருக்கும் அறியப்பட்டு அனைவரும் அதை புரிந்துகொண்டு மனம் வருந்தி மாற்றமடைவதை எண்ணியிருக்க வேண்டும்.

அவருடைய இராஜ்யத்தின் நம்பிக்கையானது, வஞ்சிக்கப்பட்ட இவர்களின் இருதயங்களை மாற்றக்கூடியதாக காணமுடிந்தது. அப்பொழுது அவர்கள் சரியான சூழ்நிலையில் இருப்பார்கள் என்பதை எண்ணிக் கொண்டார். அவர் மரித்து உயிர்த்தெழுந்த பின் சீர்ப்பொருந்தக்கூடிய இவ்வேலைகளைத் துவங்குவார் என்பதையும் அவர் நினைவுபடுத்தியிருக்க வேண்டும். முதல் சபையிலும் அடுத்ததாக வஞ்சிக்கப்பட்ட உலகத்தாரிடத்திலும் இக்காரியங்களை நிறைவேற்ற வேண்டும் என்பதை அறிந்திருந்தார். இப்படியாக தேவனுடைய திட்டத்திலுள்ள காரியங்களையும், வரக்கூடிய ஆசீர்வாதங்களைக் குறித்த அறிவும் அவருக்குள் இருந்த இராஜ்யத்தின் நம்பிக்கையும் இந்த கொடுமைக்காரர்களை பகையோடும் வருத்தத்தோடும் பார்ப்பதற்கு அனுமதிக்கவில்லை.

நாம் நினைவு கொள்ளக்கூடிய ஒரு முக்கியமான பாடம், இராஜ்யத்தை குறித்து நாம் பெற்றுள்ள அறிவினால் நம்முடைய எதிராளிகளையும் இப்படியாகவே நாம் காண வேண்டும். தேவன் அவர்களை எவ்வாறு உருவாக்கப்போகிறார் என்பதை நாம் இப்போது காண வேண்டும். இப்படியாக நாம் அநீதியானவைகளை அனுபவிக்கும் போது, அல்லது நம்முடைய விசுவாசத்தினிமித்தம் நாம் பரியாசம் பண்ணும் பொழுது இவை அனைத்தும் நம்முடைய பாவ நிவாரண பலியின் அனுபவங்களில் ஒரு பங்கு என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட வாய்ப்புகள் நம்முடைய ஆவிக்குள் நம்மை ஆழமாக நிலைநாட்டி அவருடைய அன்பில் நம்மை வளரச் செய்யும். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நம்முடைய அன்பை மற்றவர்களிடம் பிரதிபலித்தால், நிச்சயமாக நாம் ஆண்டவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறவர்களாவோம்.

**இரண்டாம் பரியாசம்**

யூதர்கள் மட்டுமே இயேசுவை பரியாசம் பண்ணவில்லை. "போர்ச்சேவகரும் அவரிடத்தில் சேர்ந்து, அவருக்குக் காடியைக் கொடுத்து: நீ யூதரின் ராஜாவானால், உன்னை இரட்சித்துக்கொள் என்று அவரைப் பரியாசம்பண்ணினார்கள். இவன் யூதருடைய ராஜா என்று, கிரேக்கு லத்தீன் எபிரெயு எழுத்துக்களில் எழுதி, அவருக்கு மேலாக வைக்கப்பட்டது." (லூக் 23:36-38)

இயேசுவை தேவனுடைய குமாரன் என்று பரியாசம் பண்ணுவதில் ரோம போர்ச் சேவகர்களுக்கு எந்தவிதமான காரியமும் இல்லை. ரோம போர்ச் சேவகர்கள் மேல் விலாசத்தை எடுத்து இயேசுவின் தலையின் மேல் ஆணி அடித்தார்கள். மேலும் இயேசுவின் வஸ்திரங்களை அவர்கள் உரிந்து கொண்டு, அவர்களுக்குள் அதை பங்கிட்டுக் கொண்டார்கள். மேலும் தையலில்லாத வஸ்திரத்தை தங்களுக்குள்ளே சீட்டுப் போட்டுக் கொண்டார்கள். இரண்டு கள்ளர்கள் மத்தியில் அவரை சிலுவையில் அறைந்தார்கள். இந்த இராஜா என்று சொல்லிக் கொள்வதற்கு ஒன்றுமில்லை.

மத்தேயு சில கூடுதலான விவரங்களைக் கொடுக்கிறார். "கசப்புக்கலந்த காடியை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள்; அவர் அதை ருசிபார்த்து, குடிக்க மனதில்லாதிருந்தார்." (மத் 27:34)" சிலுவையில் அறையப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படும் இப்படிப்பட்ட பாடங்கள் சிலுவையில் அறையப்பட்டவர்களுக்குக் காண்பிக்கப்படும் இரக்க செயல் என்று சில விமர்சகர்கள் குறிப்பிடுகிறார்கள். "புளிப்பான காடியை, வினிகரைப் போன்ற பானத்தோடு சில போதை பொருள்களை கலந்து சிலுவையின் மரணத்தில் அவதிப்படுகிறவர்களுக்கு இதை கொடுக்கும் பொழுது, அவர்கள் படக்கூடிய உபத்திரவங்கள் உணராத அளவுக்கு வலிகளை இலகுவாக்கும்" என்று சொல்லப்படுகிறது." (adam Clarke)

இந்த காடியை கொடுப்பதினிமித்தம் சிலுவையில் உள்ளவர்களுக்கு வேதனை குறையும் என்பதால் இயேசு அப்பானத்தை மறுத்திருக்க வேண்டும். தன்னுடைய கடுமையான வேதனைகளைக் குறைக்கக் கூடிய பானத்தை இயேசு மறுத்ததின் உண்மையான காரணம் என்ன? அந்த பானம் ஒருவருடைய மனநிலையை அழுத்தி வலியை சிந்தையில் உணரமுடியாத ஒரு நிலையைக் கொண்டுவரும். ஆகவே இயேசு இந்த ஒரு காரியத்தை அனுமதிக்க மறுத்தார். அவர் மரிக்கும் கடைசி நொடி வரைக்கும் தெளிவான சிந்தை அவருக்கு அவசியமாக தேவைப்பட்டது. முடிவு பரியந்தம் பிதாவின் கோட்பாடுகளை மனதில் வைத்திருக்க வேண்டியதாய் இருந்தது. அவர் தன்னை மறந்துகூட பாவம் செய்யாதபடிக்கு தன்னை எச்சரிப்போடு பார்த்துக் கொண்டார். அவருடைய மனதை தெளிவாக வைத்திருக்கவும் இறுதி வரைக்கும் உணர்வுள்ளதாக வைத்திருக்கவும் போதையூட்டும் அந்த பானத்தை மறுத்துவிட்டார்.

**மூன்றாம் பரியாசம்**

இந்நேரம் வரைக்கும் இரண்டு வகையான பரியாசங்கள் பண்ணப்பட்டது. யூதர்கள் இயேசுவின் புத்திர சுவிகாரத்தைக் குறித்தும், ரோமர்கள்அவருடைய இராஜ்ய பாரத்தைக் குறித்தும் பரியாசம் பண்ணினர். இப்பொழுது மூன்றாவதாக கள்ளர்கள் மத்தியிலிருந்து தன்னுடைய மேசியாவின் பொறுப்பு பரியாசம் பண்ணப்பட்டது. ஒவ்வொரு முறையிலும் அவருடைய வாழ்க்கையின் இறுதி நொடிப்பொழுது வரைக்கும் அனைத்துமே சவாலாக இருந்தது.

"அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்ட கள்ளரும் அந்தப்படியே அவரை நிந்தித்தார்கள்." (மத் 27: 44) கள்ளர்கள் என்று பன்மையில் சொல்லப்பட்ட வார்த்தையை கவனியுங்கள். இரண்டு கள்ளர்களுமே அவரை பரியாசம் செய்து கேலி செய்தனர். ஆனால் லூக்கா, சற்று வித்தியாசமாக இக்காரியத்தைக் கூறுகிறார். "அன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்: நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான். மற்றவன் அவனை நோக்கி:

நீ இந்த ஆக்கினைக் குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டு, இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்." (லூக் 23:39-43)

மத்தேயு மற்றும் லூக்கா சுவிசேஷத்திற்கு இடையில் சில முரண்பாடுகள் தோன்றுகிறது. மத் சுவிசேஷத்தில் கூறியிருக்கிறபடி இருவரும் இயேசுவை கேலி செய்தார்களா அல்லது லூக்கா சொன்னபடி ஒரு கள்ளன் மட்டும் கேலி செய்தானா? இரண்டு கள்ளர்களும் இயேசுவை கேலி செய்ததாக மாற்கு சுவிசேஷத்தில் ஆதாரமாகக் காட்டப்படுகிறது. (மாற்கு 15:32)

"லூக்கா எழுதின காரியங்கள் எப்படியாயினும் எளிதாக மத்தேயு எழுதன காரியத்தோடு இசைந்திருப்பதற்கு வாய்ப்புகள் உண்டு. மத்தேயு கூறுகிறபடி, இந்த இரண்டு கள்ளர்களுமே இயேசுவை கேலி செய்திருக்க வேண்டும், அதற்கு பின் கிறிஸ்து தம்முடைய பாடுகளைப் பொறுமையோடு சகித்ததைக் கண்ட ஒரு கள்ளன் மனந்திரும்பியிருக்க வேண்டும். இதை குறித்து லூக்கா எழுதியிருக்க வேண்டும்" என்று பார்நெஸ் விமர்சனம் விளக்கம் கூறுகிறது.

இந்த நியாயமான விளக்கங்கள் எல்லா சுவிசேஷங்களுக்கும் இசைந்திருக்கிறது. ஒரு கள்ளனுடைய மனம் மாற்றப்பட்டிருந்தால், "அவனுடைய மனதை மாற்றின காரியம் என்ன?" மனந்திரும்பிய கள்ளன் இயேசுவின் இராஜ்யத்தைக் குறித்த உபதேசங்களைக் கேட்டறிந்திருக்க வேண்டும். ஏனெனில், இயேசுவின் இராஜ்யத்தில் அவனை நினைவுகூரும் படி கேட்டுக் கொண்டான். ஏனெனில், சிலுவையில் தொங்கின இயேசு அவருடைய இராஜ்யத்தைக் குறித்த எந்த வாக்கியங்களையும் பேசவில்லை என்று வசனங்கள் தெளிவாகக் கூறுகிறது. ஆகவே மனந்திரும்பிய கள்ளன் நிச்சயமாகவே இராஜ்யத்தைக் குறித்த உபதேசத்தைக் கேட்டிருக்க வேண்டும்.

மேலும் சிலுவையில் இயேசுவின் செயல்பாடுகளைக் கண்ட கள்ளன் மனம் மாறியிருக்க வேண்டும். அவர் மேல் குவிக்கப்பட்ட பகைக்கும் பழி சொற்களுக்கும் அவர் எந்தவிதத்திலும் பதில் அளிக்கவில்லை. இயேசு பட்டபாடுகளையும் தாழ்மையோடு வேதனைகளை சகித்ததையும் அவன் உணர்ந்திருக்க வேண்டும். ஏனெனில், அவனும் இவ்வேதனைகளை அனுபவித்துக் கொண்டிருந் தான். சுற்றியிருந்த ஜனங்களை இயேசு வெறுப்ப தற்கு எல்லா காரணங்களும் நியாயமானதாக இருந்தபோதிலும் இயேசு அவர்களை வெறுக்கவில்லை.

**ஒரு கள்ளனால் உண்டான ஆறுதல்**

பல வருடங்களுக்குப் பின் இயேசு தம்முடைய பகைவர்களிடம் எவ்வாறு செயல்பட்டார்? என்று அப்போஸ்தலர் பேதுரு விவரிக்கிறார். "அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்." (1பேது 2:23) கொல்கொதாவில் அன்று நின்றிருந்த அனைவரும் இயேசுவுக்கு கொடுக்கப்பட்ட கடைசி சாட்சியைக் கண்டார்கள். இயேசு தம்முடைய அன்பின் போதனைகளை வெறும் வார்த்தையினால் போதிக்கவில்லை. இந்த கோட்பாடுகள் அவருக்குள் இயல்பாகக் காணப்பட்டது. அவருடைய பகைவர்களுக்கு முன் அவர் மௌனமாய் இருந்தது, அவரது மனதின் பரிசுத்தத்தை வெளிப்படுத்தியது.

மனந்திரும்பிய கள்ளன் முதலில் ஆண்டவரை கேலி செய்திருந்தாலும், அது தவறு என்பதை உணர்ந்திருப்பார். ஆனால் மனுஷனாகிய இயேசு தம்முடைய காதுகளில் கேட்கக்கூடிய கடைசி ஆறுதலான வார்த்தைகளைக் கூறுவதற்கான வாக்கியத்தை அவன் மட்டுமே பெற்றிருந்தான்.

"இந்த மனுஷன் ஒரு தவறும் செய்யவில்லையே என்ற கள்ளனின் வார்த்தைகள் இயேசுவின் காதுகளில் தெளிவாகக் கேட்டது. 24 மணி நேரம் இந்த உலகத்தில் காணும் முழுமையான அநீதிகளை பொறுமையோடு சகித்த இயேசு தன்னுடைய இறுதி மணி நேரத்தில், "இயேசு நிரபராதி" என்ற சத்தியத்தை மனப்பூர்வமாய் சொல்லுவதற்கு அந்த மனுஷன் இருந்தான்.

அதற்கு பின் இயேசுவை நோக்கி புதிதான ஒரு மரியாதையோடு - "நீர் உம்முடைய இராஜ்யத்தில் வரும்போது என்னை நினைத்துக் கொள்ளும்" என்று கேட்டுக் கொண்டான். வருங்காலத்திலுள்ள இராஜ்யத்திற்கு இயேசுவே சரியான இராஜா என்பதை அந்த மனுஷன் விசுவாசித்தான். அந்நேரம் வரைக்கும் அவன் அவரை விசுவாசியாமல் இருந்திருக்கலாம். ஆனால் இப்போது ஒரு இராஜாவாக இயேசுவின்

நடத்தைகளைக் கண்ட அவன் அதை உண்மையென்று விசுவாசித்தான்.

மரித்துக் கொண்டிருக்கும் இந்த மனுஷன் வருங்கால இராஜ்யத்திற்கு ஒரு இராஜாவாக இருப்பார் என்பதை அந்த கள்வன் எப்படி நம்பினான்? இதற்கான ஒரே நியாயமான பதில், - அவன் உயிர்த்தெழுதலை விசுவாசித்திருக்க வேண்டும். இந்த தரம் குறைந்த கள்ளனின் வழியாக நமக்கு ஒரு வல்லமையுள்ள பாடம் கொடுக்கப்படுகிறது. நமக்குள் இருக்கும் விசுவாசத்தை எங்கு வேண்டுமானாலும், எந்த சூழ்நிலையிலும், எந்த சோதனைகளிலும் சிலுவையின் மரணத்தில் கூட செயல் முறைப்படுத்தலாம். அவனுடைய சில வார்த்தைகள் நமக்கு எவ்வளவு ஆசீர்வாதமாக உள்ளது. மேலும் நம்முடைய ஆண்டவராம் இயேசுவுக்கு அவருடைய வார்த்தைகள் எவ்வளவு ஆறுதல் அளித்திருக்கும்?

**மூன்று அநீதியான சிலுவை மரணங்கள்**

இயேசு எந்த தவறும் செய்யவில்லை என்று கூறின கள்வன், "நான் உபத்திரவப்படுவது நீதியான செயல்" என்று கூறினான். இது உண்மையா? திருடர்களாக இருந்தால் சிலுவையில் அறைய வேண்டும் என்பது தண்டனையாக இருந்ததா? நிச்சயமாக இல்லை. இப்படிப்பட்ட ஒழுக்க கேடுள்ள குற்றவாளிகளுக்கு மோசேயின் நியாயப்பிரமாணம் ஒரு தீர்ப்பு கொடுத்திருந்தது. யாத்திராகமம் 22:1 - "ஒருவன் ஒரு மாட்டையாவது ஒரு ஆட்டையாவது திருடி, அதைக் கொன்றால், அல்லது அதை விற்றால், அவன் அந்த மாட்டுக்கு ஐந்து மாடுகளையும், அந்த ஆட்டுக்கு நாலு ஆடுகளையும் பதிலாகக் கொடுக்கக்கடவன்." இங்கு தேவன் ஒரு அபராதத்தை மாத்திரம் செலுத்தும்படி கட்டளையிட்டிருந்தார். ஆனாலும், இச்சட்டங்கள் ரோமர்களின் நியாயத்தின்படி ஏற்புடையதாக இருக்கவில்லை. ஆகவே இவர்கள் நியாயத்தின்படி தண்டனை கொடுக்கவில்லை. இதன் விளைவாக மூன்று அநீதியான சிலுவை மரணங்கள் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

இந்த மனுஷனுடைய விசுவாசத்தைக் கண்ட இயேசு பேசத் துவங்கினார். "இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்." (லூக் 23: 43)இந்த ஒரு வேதப்பகுதியில் ஒரு 'கமா' தவறான இடத்தில் போடப்பட்டதினிமித்தம் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. "இன்றைக்கு நீ என்னோடு கூட பரதீசியிலிருப்பாய்" என்று இயேசுவால் எப்படி கூறமுடியும்? இயேசு தாமே உயிர்த்தெழுவதற்கு முன் மூன்று நாட்கள் கல்லறையில் இருந்தாரே. நிச்சயமாக அன்றைய தினம் பரதீசுக்கு செல்ல வாய்ப்பில்லை. ஆகவே இதன் விளக்கம் இயலாததாக இருப்பதினால் அந்த 'கமா'-வை சரியான இடத்தில் போட வேண்டியதாய் இருக்கிறது.

"மெய்யாகவே மெய்யாகவே நான் உனக்கு சொல்லுகிறேன், நீ என்னோடு கூட பரதீசியில் இருப்பாய்."

**பரதீஸ்**

இதற்கு முன்பாக இயேசு பரதீஸ் என்ற வார்த்தையை பயன்படுத்தினதற்கு வேதத்தில் எந்த பதிவுகளும் காணப்படவில்லை. இப்பொழுது இயேசு பயன்படுத்தின காரணம் என்ன? இந்த மனுஷனுக்கு பரதீசு குறித்து ஏன் கூற வேண்டும்? "இது ஒரு பெர்சிய வார்த்தையின் மூலத்தைக் கொண்டிருக்கிறது. ஏதேன் என்ற வார்த்தை, பரதீசு என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. Septuagent - இதற்கு பழங்களின் தோட்டம் என்று பொருள். அல்லது மகிழ்ச்சியின் தோட்டம் என்றும் பொருள்படும். அந்த மனுஷன் மகிழ்ச்சியான தோட்டத்தில் அல்லது புதுப்பிக்கப்பட்ட ஏதேன் தோட்டத்தில் இருப்பான் என்பதை இயேசு மறைமுகமாகக் கூறினார். இப்படிப்பட்ட வேதனையுள்ள அனுபவம் இல்லாத இடம் அவனுக்கு கொடுக்கப்படும் என்று கூறினார். அவலட்சணமான கொல்கொதா, அழகான பழத்தோட்டமாக மாற்றப்படும். இனி அவருடைய இராஜ்யத்தில் இந்த பூமியின் மேல் கொல்கொதா எங்குமே காணப்படப் போவதில்லை.

பரதீசு என்ற ஒரு வார்த்தை அப்பமும் தண்ணீரும் நிறைந்த இடமாகவும், மகிழ்ச்சியின் ஊற்றிடமாகவும் வாக்களிக்கப்பட்டிருக்கிறது. சிலுவையில் அறையப்பட்ட ஒரு மனுஷனுக்கு இந்த பூரணமான வார்த்தைகள் ஆறுதல் அளிப்பதற்கு கூறப்பட்டது. அவன் இருதயத்திற்குள் துளிர்விட்ட நம்பிக்கைக்கு இவ்வார்த்தைகள் நீராக பாய்ச்சப்பட்டது.

இது மரித்துக் கொண்டிருக்கும் இரண்டு மனுஷர்களுக்கிடையில் நடந்த சுருக்கமான சம்பாஷணை. முக்கியமாக இரட்சகருக்கும், இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் இடையில் நடந்த அற்புதமான பரிமாற்றம் என்றும் சொல்லலாம். இவ்வளவு கொடூரமான கூட்டத்தின் மத்தியிலும் எல்லைக்கு உட்படாத சிலுவையின் வேதனைகளுக்கு மத்தியிலும் இயேசு மீண்டும் ஒருமுறை விசுவாசமுள்ள ஒருவருக்கு பதிலளித்தார். அவர் தம்முடைய பூமிக்குரிய இராஜ்யத்தில் கொடுக்கக்கூடிய ஆசீர்வாதங்களைக் குறித்து அந்த கள்ளனிடம் கூறுவதற்கு தம்முடைய எல்லா

பலத்தையும் ஒன்று சேர்த்து அவ்வார்த்தையைக் கூறினார். இந்த இராஜ்யம் அனைவருக்காகவும் ஏற்படுத்தப்பட்டது என்பதை தெளிவாக்கினார். இயேசுவோடு மரித்த அந்த மனந்திரும்பிய கள்ளன் சமாதானத்தோடு மரித்தான். ஏனெனில் வருங்காலத்தில் ஒரு மேன்மையான எதிர்காலம் உண்டு என்பதை அவன் அறிந்திருந்தான்.

**தேவனால் கைவிடப்பட்டார்**

இயேசு கள்ளனிடம் சொன்ன வாக்கியத்தில் தன்னுடைய சொந்த நிலையைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தார் என்பது வெளிப்படுகிறது. சற்று நேரத்திற்கு முன்னிருந்து பிதா தம்முடைய முகத்தை பின் வாங்கத் துவங்கினார். கெத்சமனே தோட்டத்தில் அவருக்குள் இருந்த பயம் மிகுந்த சத்தத்தோடும் கண்ணீரோடும் வெளிப்பட்டது. (எபிரெயர் 5:7) அவர் ஏதோ ஒரு வகையில் தோல்வியடைந்தாரா? நிச்சயமாக இல்லை. அதற்கு பின் தேவனுடைய ஒரு தூதன் இயேசுவை பலப்படுத்தினார். (லூக் 22:43)

இயேசு எல்லா காரியங்களிலும் விசுவாசத்தோடு நிறைவேற்றினார் என்பதற்கான உறுதியளிக்கப்பட்டது. ஆயினும் பிதாவாகிய தேவன் இயேசுவினிடத்திலிருந்து தம்மை மறைத்துக் கொண்டதின் விவரமான காரணத்தை அந்த தூதன் சொல்லவில்லை என்று இயேசுவின் வார்த்தைகளிலிருந்து நாம் அறிந்துகொள்ளலாம். "என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்" (மத் 27:46).

இயேசு முடிவு பரியந்தம் விசுவாசத்தோடு இருந்தபோதிலும், இயேசு தம்முடைய பிதாவோடு பெற்றிருந்த ஐக்கியத்தின் முறிவை அனுபவித்தார். ஆனால் அந்த கள்ளனிடம் - என்னோடு கூட பரதீசில் இருப்பாய் என்று இயேசு கூறுகையில் அவரும் உயிர்த்தெழுந்த தேவனுடைய இராஜ்யத்தை ஆட்சி செய்வார் என்ற நம்பிக்கையை அவர் வெளிப்படுத்தினார். தேவனுடைய ஆறுதலளிக்கும் வார்த்தைகளிலிருந்து உறுதியான நம்பிக்கை பிறந்தது.

மேலும், அந்த கள்ளனுக்கு வருங்கால ஆசீர்வாதம் உறுதியளிக்கப்பட்டது. இறுதியாக தேவ இராஜ்யம் குறித்த சாட்சியை இயேசு கொடுத்தார்.

**அவருடைய இறுதியான சாட்சி**

இயேசு மரிப்பதற்கு முன் மற்றொரு சாட்சியைக் கொடுத்தார். சிலுவையிலிருந்து கீழ் நோக்கிப் பார்க்கும் பொழுது தம்முடைய தாய் அப்போஸ்தலர் யோவானோடு நின்றிருப்பதைப் பார்த்தார். அவர் நேரடியாக சில வார்த்தைகளை மட்டுமே பேசினார். "அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார். அந்நேரமுதல் அந்தச் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டான்." (யோவ 19:26,27) அநேகம் மனுஷர் தங்களைக் குறித்து எண்ணிக் கொண்டிருக்கும் வேளையில் இயேசு தம்முடைய தாயின் நலனை குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தார். எவ்வளவு அன்பான மனநிலை! நம்முடைய இயேசுவின் குணத்தைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? இதுவே அவருடைய இறுதி சாட்சியாய் இருந்தது. முடிவு பரியந்தம் அனைவரையும் நேசித்தார். தேவ திட்டத்தில் அவருடைய மரணத்தின் போது ஒரு புதிய துவக்கம் துவங்குவதை உணர்ந்து எவ்வளவு பெரிய ஐசுவரியமுள்ள ஆசீர்வாதம்! இயேசுவின் உயிர்த்தெழுதல் அவர் துவக்கின அன்பின் கிரியைகளை முழுமையாக நிறைவேற்ற வாய்ப்பளித்தது.

## தீர்க்கதரிசனத்தில் இன்று

# கொனிக்டிகட்டில் குவியலாக கொலை

"கிராமங்களின் ஒளிப்பிடங்களிலே பதிவிருந்து, மறைவிடங்களிலே குற்றமற்றவனைக் கொல்லுகிறான்; திக்கற்றவர்களைப் பிடிக்க அவன் கண்கள் நோக்கிக்கொண்டிருக்கிறது." (சங்கீதம் 10:8)

கடந்த 2012, டிசம்பர் மாதத்தில் இருபது வயதான ஆதாம் லான்ஸா நியூ டவுனில் ஒரு பள்ளிக்குள் திடிர் என்று பூகுந்து 20 குழந்தைகளையும், 6 நபர்களையும் கொன்றுவிட்டு, சைரன் சத்தம் கேட்டவுடனே தப்பித்து சென்றுவிட்டான். அவன் செய்த கொலைகளுக்கான நோக்கம் ஏதுவும் தெரியவில்லை. வருங்காலத்தில் இப்படிப்பட்ட கொலைகளை தவிர்பதற்காக தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டது. ஆயினும், இப்படிப்பட்ட சம்பவங்கள் மிகவும் அபூர்வமானதமாக காணப்படுகிறது.

* 1949ம் வருடம், நியு ஜெர்சியில் ஹாவார்டு அன்ரோஹ நடந்துகொண்டே 13 பேர்களை 12 நிமிடத்தில் கொன்று விட்டான்.

* 1966ம் வருடம், சார்லஸ் விட்டுமென், டெக்சாஸ் பலகலைகழத்தின் கோபுரத்திலிருந்து 13 நபர்களை கொலை செய்து, மற்றும்31நபர்களை காய்த்தோடு விட்டு சென்றான். ராபட்டு சிமித்து, மிசா மற்றும அரிசோனாவில் உள்ள 5 அழகான கல்லுரி மானவர்களை கொன்றுவிட்டான். ரிட்சர்டு ஸ்பெக்கு 8 செவிலியர் மாணவர்களை சிக்காகோவில் கொன்று போட்டான்.

* 1984 ம் வருடம் , ஜேம்ஸ் ஆலிவ்வர் யூபெர்ட்டி, கலிபோனியாவில் உள்ள சான் டிஜியோவில் ஒரு உணவகத்தில் 21 நபர்களை கொலை செய்து, மற்ற 19 நபர்களை காயத்தோடு விட்டு சென்றான்.

* 1987ம் வருடம் மைக்கேல் ரயான் இங்கிலாந்தில் 15 பேர்களை கொன்று மற்ற 15பேர்களை காயத்தோடு விட்டு சென்றான்.

* 1980 ம் வருடம் மார்கு லெப்பின், கெனடாவில் உள்ள குயுபெக்கில் 14 பெண்களை கொன்றான்.

*1999ம் வருடம் மாற்கு பார்டென், 9 நபர்களை சுட்டு கொன்றான்.

* 2007ம் வருடம் சோ சியுங்கு வெர்ஜீனியாவில் 32 மாணவர்களை சுட்டு கொன்று மற்ற 32 நபர்களை காயத்தோடு விட்டு சென்றான்.

சில ஆராய்ச்சியாளர்கள் அழைக்கிறபடி, "மூர்க்கதனமான கொடூஞ்செயல்கள்" - தேசிய உணர்வுகள், துப்பாக்கி சுடுதலைக் குறித்த சட்டங்களை பற்றிய விவாதங்கள், பாரம்பரியத்தில் மாற்றங்கள், வன்முறையான ஊடகங்கள், குறிப்பாக தொலைக்காட்சி சார்ந்த விளையாட்டுகளில் ஒரு முக்கிய பங்கைப் பெற்றுள்ளது. சமீபத்தில் கானெக்ட்டிக்ட்டில் நடந்த துப்பாக்கி சுடுதலில் மீண்டும் இப்பிரச்சனைகள் எழுப்பப்பட்டுள்ளது.

இப்படிப்பட்ட கொலைகளுக்கான பின்னனியில் உள்ள மனநிலைகளைக் குறித்து சரியாக புரிந்துகொள்ள முடியவில்லை என்று சமுதாய விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். குற்றவாளிகளின் மனநிலையை துல்லியமாக ஆராய்ந்தபின்னும், தெளிவற்றதாக காணப்படுவதினால், காரியங்கள் மழுப்பப்படுகிறது. இவைகளை கண்டறிவது மிக கடினம் என்று மனோதத்துவ நிபுணர்கள் ஒத்துக்கொள்கிறார்கள்.

## இந்த பூமியில் நன்மை மற்றும் தீமை

சரி மற்றும் தவறு என்ற கோட்பாடுகள் தெய்வீக பிரமாணத்தினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இன்றைய உலகம் தவறுகள், குழப்பங்கள் மற்றும் உபத்திரவங்களினால் நிறைந்திருக்கிறது. ஏனெனில், தேவனின், தவறு மற்றும் சரியான நிலைகள், புறக்கணிக்கப்படுகிறது அல்லது மறுக்கப்படுகிறது. அதிகாரம் பெற்ற சில மூலங்களிலிருந்து அதாவது வேதாகமம் போன்ற சான்றுகளிலிருந்து இச்செய்திகள் முதல் முதலில் கொடுக்கப்பட்டால் ஒழிய, மனிதனுடைய மனசாட்சி மட்டுமே இவைகளை தீர்மானிக்க முடியாது.

கடந்த 6000 வருடங்களாக, மனுக்குலம் தீமைக்குள் அனுமதிக்கப்பட்டு, கீழ்ப்படியாமையின் விளைவுகளை நன்கு கற்றுகொள்வதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. முதியவரானாலும் சரி, வாலிபனானலும் சரி, ஒருவரும் மரணத்திலிருந்து தப்பிக்கமுடியாது. இயற்கையின் சீற்றங்கள், விபத்துக்கள், மனிதன் மற்றவர் மேல் காட்டும் கொடூரங்கள் அனைத்துமே மரண செயல்களுக்கு பங்களிக்கிறது.

தேவன் மனிதனுக்கு கொடுத்த சுயாதீனத்தில் அவர் குறுக்கிடுவதில்லை. "தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடானசிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார்." (ரோம 1:28) என்று பவுல் கூறுகிறார். மனுக்குலம் தான் விரும்பி தேர்ந்தெடுத்துகொண்ட பாவமான சுயநலமான வாழ்க்கையை தேவன் என்றுமே தடுக்கவில்லை.

ஆயினும், தேவன் மனித இனத்தை புறக்கணிக்கவில்லை. இயேசுவின் வழியாக அனைவரும் மரணத்திலிருந்து எழுந்து, ஜீவனை பெற்றுகொள்ள வழி வகுத்துள்ளார். "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." (1கொரி 15:22) வருங்காலத்தில் ஒவ்வொருவரும் பெறக்கூடிய நித்திய ஜீவனானது, இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் அடிப்படையை கொண்டிருக்கிறது. "(யோவ 6:51)இதற்காகவே இயேசு இந்த உலகத்தில் மனிதனாக பிறந்தார். (எபி 2:9-14)

இந்த உலகத்தின் இரட்சகராக இயேசு மாறினதைக் குறித்து விவரிக்கும்போது - "ஈடுபலி" என்ற வார்த்தையை வேதம் பயன்படுத்துகிறது. (1தீமோ 2:6) இதன் கிரேக்க வார்த்தைக்கு -"சரி நிகர் சமான விலை" என்று பொருள். ஆதாம் பாவம் செய்வதற்கு முன்னிருந்த பரிப்பூரண நிலையில் இயேசு இநத உலகத்திற்கு வந்தார். இப்படியாக, ஆதாமின் ஜீவனுக்கு பதிலாக தன்னுடைய பரிப்பூரண ஜீவனை இயேசு மரணத்தில் தந்தார். ஆதாம் மூலமாக தொலைக்கப்பட்ட ஜீவன் கிறிஸ்துவின் வழியாக மீட்கப்படும்.

"நீதியுள்ளவர்களும், அநீதியுள்ளவர்களும்," (அப் 24:15) மரணமாகிய நித்திரையிலிருந்து எழுப்படுவார்கள். மில்லியன் கணக்கான சிறந்த ஜனங்கள் தேவன் மேல் விசுவாசமற்றவர்களாக வரலாற்றில் காணப்பட்டார்கள். குற்றவாளிகள் பாடுகள் அனுபவிப்பதுபோலவே இவர்களும் பாடுகளை அனுபவிப்பதே இவர்களின் அவிசுவாசத்திற்கு ஒரு முக்கிய காரணமாக இருக்கிறது. இவர்களுக்கு தேவனுடைய திட்டம் தெரிந்திருந்தால், நடக்கக்கூடிய கொடூரமான சம்பவங்களின் காரணங்களை அவர்கள் அறிந்திருப்பார்கள்.

## நன்மை மற்றும் தீமையின் அறிவு

தேவன் ஆதாமுக்கு கீழ்படிதலுக்கான ஒரு சோதனையை அவருக்கு முன் வைத்தார். ஆதாம் மற்றும் ஏவாளுக்கு தேவன் வீடு நிறைய ஆகாரம் கொடுத்திருந்தார். (ஆதி 2:8-17) அதில் ஜீவனுக்குரிய விருட்சமும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சமும் இருந்ததாக விவரிக்கப்படுகிறது. தேவன் அந்த குறிப்பிட்ட மரத்தின் கனியை புசிக்கவேண்டாம் என்று சொல்லியிருந்தார். "அதை புசிக்கும் நாளிலே சாகவே, சாவாய்" என்று அதற்கான தண்டனையையும் முன்னறிவித்திருந்தார்.

இந்த செய்தியானது, ஆதாம் தவறான ஒரு வழியை தேர்வு செய்வதை அச்சமூட்டி தவிரக்கவில்லை. அவர் புரிந்துகொள்ளுதலில் மிகவும் குறைவுள்ளவராக இருந்தார். ஏனெனில், அவர் அனுபவங்களின் மூலமாக எந்த விதமான அறிவையும் பெறவில்லை. சந்தேகத்திற்கு இடமின்றி, ஆதாம் தன்னுடைய சிருஷ்டிகளை மிகவும் நேசித்தார். ஆனால் ஏவாள் அந்த கனியை புசித்ததினால், அவள் மரித்துபோவாள் என்று அறிந்த ஆதாம், அவள் இல்லாமல் வாழ்வது கடினமாக காரியம் என்பதை எண்ணி அவளோடு மரிப்பதை தவறாக முடிவு செய்தார். தெய்வீக பிரமாணத்தின்படி அவர் மரணத்திற்கு தீர்ப்பளிக்கப்பட்டார்.

ஆதாமின் கீழ்படியாமையானது, தேவனுடைய சரி மற்றும் தவறான நிலைக்குரிய அறிவை பெற்றுகொள்வதற்கு வழி வகுத்தது. அவர் "நன்மை தீமையின் விருட்சத்தின் கனியை புசிக்கவேண்டாம்" என்று கட்டளை பெற்றிருந்தார். ஆகவே பாடுப்பட்டு, மரித்தாலும், அந்த விருட்சத்தின் பெயருக்கு ஏற்றபடி அந்த மரத்தின் கனியை புசித்து, நன்மை மற்றும் தீமையை குறித்த அறிவை அவர்கள் பெற்றுகொண்டார்கள்.

ஆகவே, ஆதாம் மற்றும் ஏவாள் அந்த கனியை புசித்தபின் -" இவர்கள் நன்மை தீமை அறியத்தக்க நம்மைபோலானார்கள்" என்று தேவன் சொன்னார். (ஆதி 3:22) இப்படியிருக்க, அவர்கள் நன்மை மற்றும் தீமையின் அனுபவங்களை உடனடியாக பெறுவதற்கு, அந்த மரத்திற்குள் ஏதோ மந்திரம் உள்ளதாக அர்த்தம் அல்ல.

மனிதனின் கீழ்படியாமையினால், அவர்கள் பெற்ற அனுபவத்தின் வழியாக, நன்மை மற்றும் தீமையின் விளைவுகளின் அறிவை பெற்றார்கள். இப்படியாக, நம்முடைய முதல் பெற்றோர் கல்வி கற்க துவங்கினார்கள். இவர்கள் ஏதேனிலிருந்து விரட்டப்பட்டு முள்ளும் குறுக்கும் விளையும் பூமிக்கு அனுப்பப்பட்டார்கள். சகலவிதமான எதிரான சூழ்நிலைகளில் அகப்பட்டார்கள். அவர்கள் மரணம் வரைக்கும் ஜீவிப்பதற்கு மிகவும் அவதிப்படவேண்டியதாக இருந்தது.

நம்முடைய ஆதி பெற்றோர் இந்த பூமியை நிரப்புவதற்கு தேவன் அவர்களை வடிவமைத்தார். ஆதாமின் பிள்ளைகளும், அவரை குறித்த சரியான அறிவை பெற்றுகொள்வதற்கு, கீழ்படியாமையின் விளைவுகளை அனுபவத்தின் மூலமாக கற்றறிய வேண்டும் என்று விரும்பினார். ஆகவே ஆதாம் பெற்ற மரணத்தை ஒவ்வொரு நபரும் பெற்றார்கள். "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று." (ரோம 5:12)

ஆயினும், பாவம் மற்றம் மரணமே முடிவல்ல. "சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்." (சங் 30: 5) என்று சங்கீதக்காரர் எழுதியிருக்கிறார். நம்முடைய ஆதி பெற்றோரின் கீழ்படியாமையினால் வந்த அழுகை, துக்கம், மரணம் நிறைந்தவைகள் சாயங்காலத்தில் துவங்கியது. உண்மையில் இது அழுகையின் சாயங்காலம் தான். தேவன் இரக்கமுள்ளவரா என்ற கேள்வி தங்களுக்குள் எழும் அளவுக்கு மனுக்குலம் சகலவிதமான கசப்பையும் அனுபவித்து வருகிறார்கள்.

ஆனால், மனுக்குலத்திற்கு மகிழ்ச்சிகரமான ஒரு விடியல் வருகிறது. "நீதியின் சூரியன் உதிக்கும்" போது அந்த மகிழ்ச்சி மனுக்குலத்தில் காணப்படும். (மல் 4:2)இயேசுவே அந்த நீதியின் சூரியன். இயேசு தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கும்போது, அந்த புதிய நாளின் ஆசீர்வாதங்கள் வரும். அது தேவனுடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளினால் முன்னறிவிக்கப்பட்ட நீதியுள்ள அரசாட்சியாக இருக்கும். (அப் 3:19-20)

இக்காலத்து பாவம் மற்றும் மரணத்திற்குரிய இரவு நேரத்தில் அனைவரும் மரித்துகொண்டிருக்கிறார்கள் - விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள், அறியா ஜனங்கள், குற்றவாளிகள், நீதியுள்ளவர்கள் மற்றும் அநீதியுள்ளவர்கள். ஆனால் கிறிஸ்துவின் அரசாட்சியில், மனப்பூர்வமான பாவம் செய்பவர்கள் மட்டுமே நித்தியமாக அழிக்கப்படுவார்கள். மற்ற அனைவரும் தொடர்ந்து நித்திய ஜீவனுக்குள் பூரணப்படுவார்கள். தொடர்ந்து விசுவாசத்தோடு இவர்கள் காணப்பட்டால், இனிவரக்கூடிய யுகா யுகங்களில் நித்தியமான மகிழ்ச்சியோடும், ஜீவனோடும் பிரவேசிப்பார்கள். "சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்." (ஏசா 35:10).


**சங்கிலியாண்டபுரம் வேத மாணவர்கள்,**

**திருச்சி.**

**Cell : 9244611241, 8122224919**